படைப்பு
ஊற்று-4 | நதி-9 | ஜனவரி-2022 | திங்களிதழ்
ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## ஒவ்வொரு சிறந்த படைப்பும் இதுவரையில் கட்டமைக்கப்பட்ட விதிகளை மீறித்தான் இலக்கிய வானில் சிறகடிக்கிறது..

திறனாய்வாளர்
ந.முருகேசபாண்டியனுடனான
நேர்காணல்



- வாழ்வின் பெரும் முடிச்சுகள்
  - கவிஜி



- இறைக்காமத்தின் இன்னொரு வெளியில் இருக்கும் கடவுள்
  - ஆண்டன் பெனி



- பதின்மத்தைத் தொட்ட தொன்மம்
  - துரை. நந்தகுமார்

படைப்பு தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-4 | நதி-9 | ஜனவரி 2022

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர் :
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**க.சோ.திருமாவளவன்**
**ஸ்டெல்லா தமிழரசி**
**கலிங்கப்பட்டி க.கருப்பசாமி**

முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு :
**ப.முகம்மது புலவர் மீரான்**

ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** -பக். 04
- **“ஒவ்வொரு சிறந்த படைப்பும் இதுவரையில் கட்டமைக்கப்பட்ட விதிகளை மீறித்தான் இலக்கிய வானில் சிறகடிக்கிறது..”**
  - திறனாய்வாளர் ந.முருகேசபாண்டியனுடனான நேர்காணல் -பக். 05
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை**
  - மு.முருகேஷ் -பக். 15
- **வாழ்வின் பெரும் முடிச்சுகள்**
  - கவிஜி -பக். 22
- **இறைக்காமத்தின் இன்னொரு வெளியில் இருக்கும் கடவுள்**
  - ஆண்டன் பெனி -பக். 35
- **கற்பதுவே.. கேட்பதுவே..!**
  - மௌனன் யாத்ரிகா -பக். 39
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் -பக். 43
- **க.மு. – க.பி.**
  - கோ.அருண்பிரகாஷ் -பக். 52
- **மனநிலைக் குறிப்புகள் 16**
  - ஆதிரன் -பக். 54

## சிறுகதை


- **கினையன்**
  - ப.தனஞ்ஜெயன் -பக். 29
- **சில நேரத் திருப்பங்கள்**
  - கனகா பாலன் -பக். 48
- **விடியல்**
  - மெய்யன் நடராஜ் -பக். 61


## கவிதைகள்


- **துரை. நந்தகுமார்** -பக். 26
- **துளசி வேந்தன்** -பக். 26
- **சந்துரு ஆர்.சி.** -பக். 27
- **அழ. இரஜினிகாந்தன்** -பக். 27
- **ஆனந்த குமார்** -பக். 28
- **தீபிகா நடராஜன்** -பக். 28
- **தோழன் பிரபா** -பக். 28
- **அனு பாரதி** -பக். 28
- **பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 17**
  - ஜின்னா அஸ்மி -பக். 60


படைப்பு

எழுத்தின் இணைப்பு

# தலையங்கம்

**வணக்கம்.**

படைப்பு 'தகவு' நாற்பத்தைந்தாம் இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

பெண் உணர்வுநிலையைத் தீர்க்கமாகச் சித்தரிக்கும் எழுத்தாளர் அம்பைக்குச் சாகித்ய அகாதமி விருது அறிவிக்கப்பட்டிருப்பதில் தகவு மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறது. படைப்புலகில் ஒரு நீண்ட பயணம் மேற்கொண்டிருப்பவர் அவர். 'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை' தொகுப்பின் சிறுகதைகளில் பேசப்படும் வாழ்வு மிகத் துல்லியமானது. எத்தனைவிதமான பெண் வாழ்க்கைகளை அம்பை அத்தொகுப்பில் சித்தரித்திருக்கிறார்..

மனிதர்களைப் பொருளாகப் பார்க்கத் தொடங்கிவிட்ட நுகர்வுக் கலாச்சாரச் சமூகத்தில் மனிதர்களுக்கும் காலாவதி நாள் கணிக்கப்படுகிறது. கணவனுக்குச் சமூகத்தால் உருவாக்கப்பட்ட காலாவதி நாளைத் தனக்குத்தானே தீர்மானித்துக்கொள்கிறாள் 'வீழ்தல்' சிறுகதையின் பெண்.

பெண்களின் வாழ்நிலையைச் சிதைத்து உயிரானவர்களைக் களவாண்டு வெற்றுக்கூடாக்கிவிட்டு தூங்கச் சொல்லும் ஆண் மையச் சமூகம் பற்றிய வலியை '1984' சிறுகதை பேசுகிறது.

'பயணம் 22' சிறுகதை.. உலகின் எங்கோ ஒரு மூலையில் பனியில் அவதிப்பட்டு சமயச் சேவை செய்யும் இந்தியப் பெண்களைச் சந்திக்கிறது. களைத்து ஊருக்கு வரும்போது ஏன் தாங்கள் தாக்கப்படுகிறோம் என்றுதான் அவர்களுக்குப் புரியவில்லை. சமூகத்தின் கூர் இழுபாடுகளில் சிக்கும் பெண்களைக் காயப்படுத்துவதற்கான காரணத்தைச் சொல்ல வேண்டும் என்ற அவசியம் ஒன்றும் இச்சமூகத்திற்கு இல்லையே.

சமூகத்தின் எல்லைக் கோடுகளுக்குள் அடங்கிவிடத்தான் வேண்டும் என்றால் அது என்ன கலை? நவீனத்தைக் கலைக்குள்ளும் வாழ்வினுள்ளும் எளிதாய்க் கையாண்டிருக்கிறார் காமு. காந்தியின் வாழ்க்கையை நடனம்வழி பரப்பினாலும் மது அருந்தும் முரண் அவர். அவரை இந்தச் சமூகம் நாட்டியக்காரிக்குரிய வசைச் சொல்லுடன்தான் அணுகுகிறது. கலை குறித்த அறிதலில் போதாமையுடனான இச்சமூகம் குறித்த 'பயணம் 21' கதை அரசிற்கும் கலைஞர்களுக்குமான உறவுநிலையின் மற்றொரு பக்கத்தையும் உரைக்கிறது.

கேட்டல் குறைபாடுடைய ஒரு குழந்தையின் தகப்பனாக அவன் எத்தனை பொறுப்பேற்றிருக்க வேண்டும்? பொறுப்புகளைத் துறந்த அவனை அனைத்திலிருந்தும் விடுவிக்கிறாள் அவன் மனைவி 'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை' சிறுகதையில். சுமைகளைச் சுமத்துவது ஆணாகவும் சுமப்பது பெண்ணாகவும் இருப்பதை இயல்பாக ஏற்றுக்கொண்ட இச்சமூகத்தைச் சாடுங்கள் அம்பை என்று கத்தத் தோன்றுகிறது. செவிப்புலனற்ற சமூகமாகிவிடும் அப்போது.

இப்படி எத்தனையோ வாழ்க்கைகள் அம்பையின் எழுத்துக்குள் புதைந்திருக்கின்றன. வெளியெங்கும் பெண்ணுக்கு நேரும் வலிகளை அழுத்தமாகப் பதிவு செய்துள்ள அம்பைக்கு மகிழ்வுடன் வாழ்த்துக்கள்..

இந்த இதழில் திறனாய்வாளர் ந.முருகேசபாண்டியனின் நேர்காணல் வெளியாகியுள்ளது.

தகவில் வெளியாகியுள்ள கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், தொடர்கள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

– ஆசிரியர் ■



● வீரசோழன் க.சோ.திருமாவளவன்

# ஒவ்வொரு சிறந்த படைப்பும் இதுவரையில் கட்டமைக்கப்பட்ட விதிகளை மீறித்தான் இலக்கிய வானில் சிறகடிக்கிறது..

**– திறனாய்வாளர் ந.முருகேசபாண்டியனுடனான நேர்காணல்**

**ந.முருகேசபாண்டியன்** புதுக்கோட்டை மாவட்டம் மேலைச்சிவபுரியில் உள்ள கணேசர் கலை அறிவியல் கல்லூரியில் நூலகராகவும் நூலகவியல் தகவல் அறிவியல் துறைத்தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தனது அபாரமான புத்தக வாசிப்பின் வழியாகத் தன்னிருப்பை அடையாளம் காண்கிற இவர் மூன்று தலைமுறை எழுத்தாளர்களுடன் நெருக்கமாகப் பழகிவருபவர். இலக்கியக் கூட்டங்களில் திறம்பட உரையாற்றுவதில் வல்லவர். தமிழ்த் திறனாய்வை நவீனக் கோட்பாடுகளின் அடிப்படையில் அணுகுகின்ற திறனாய்வாளர் ந.முருகேசபாண்டியனுடனான **நேர்காணல்..**

**சங்ககால இலக்கியத்தை ஆழமாய், நுண்மாண் நுழைபுலமாகக் கற்றுத் தேர்ந்தவர் நீங்கள். அதற்கான உங்கள் இளமைக்கால இலக்கிய ஈடுபாடு எங்கிருந்து உருவானது?**

நான் முதுகலையில் தமிழிலக்கியம் படித்திருந்தாலும் எனக்கு எப்பவும் நாவல், சிறுகதை, கவிதை, நாடகம்தான் பிடிக்கும். 90களின் இறுதியில் சங்க இலக்கியப் படைப்புகளை மறுவாசிப்பிற்குட்படுத்தியபோது கண்டறிந்த நுட்பமான விஷயங்கள் ஆர்வத்தைத் தூண்டின. இரண்டாயிரமாண்டுகளுக்கு முன்னர் வழக்கில் இருந்த சீனம், கிரேக்கம், சம்ஸ்கிருதம் போன்ற செவ்வியல் மொழிகளின் படைப்புகள் பெரிதும் புராணம், கடவுளர்களின் அதியற்புதக் கட்டுக்கதைகளாக இருந்தன. செவ்வியல் மொழியான தமிழில் எழுதப்பட்ட சங்க இலக்கியப் படைப்புகள் மனிதர்களின் வாழ்க்கையையும் காதலையும் முன்னிலைப்படுத்தியது எனக்குப் பிடித்தமானதாக இருந்தது. சங்க இலக்கியத்தின் தனித்துவத்தை அறிந்தவுடன் ஆர்வத்துடன் வாசிக்கத் தொடங்கினேன். 2007ஆம் ஆண்டு என நினைக்கிறேன். பாளையங்கோட்டை, சேவியர் கல்லூரியில் பணியாற்றிய பேராசிரியர் ஆ.தனஞ்செயன் சங்க இலக்கியத்தில் நாட்டார் மரபு என்ற கருத்தரங்கில் சங்க இலக்கியத்தில் பாலியல் என்ற தலைப்பில் உரையாற்றிட அழைத்தார். மிகவும் தயக்கத்துடன் பங்கேற்பதற்காகச் சம்மதித்தேன். அந்தக் கட்டுரைக்காகச் சங்க அகப் பாடல்களைப் பல தடவைகள் வாசித்துக் குறிப்புகள் எடுத்துக் கட்டுரை எழுதினேன். கருத்தரங்கில் ஒருவிதமான கூச்சத்துடன் பேசினேன். அந்தக் கட்டுரை தீராநதி இதழில் பிரசுரமானது. பேராசிரியர் ஆ.தனஞ்செயன் என்னிடம் அந்தப் பொறுப்பை ஏன் ஒப்படைத்தார் என்பது இப்பவும் புரியவில்லை. சரி, போகட்டும். அப்புறம் பல்கலைக்கழகம், கல்லூரிகளில் சங்க இலக்கியம் தொடர்பான கருத்தரங்குகளில் பங்கேற்றிட பேராசிரியர்கள் தொடர்ந்து அழைத்தனர். ஒவ்வொரு கட்டுரைக்காகவும் மீண்டும்மீண்டும் சங்கக் கவிதைகளை வாசித்தபோது எனது புரிதல் வலுவானது. மறுவாசிப்பில் செவ்வியல் இலக்கியப் படைப்புகள் என்ற தலைப்பில் எனது சங்க இலக்கியக் கட்டுரைகளைத் தொகுத்து என்.சி.பி. ஹெச் பதிப்பகம் நூலாக வெளியிட்டுள்ளது. அந்த நூலைத் தில்லி பல்கலைக்கழகப் பேராசிரியர் கோவிந்தசாமி ராஜகோபால் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து *Re-reading of Classical Tamil Literature: Chronicles of Ancient Tamils' Life* என்ற பெயரில் டிஸ்கவரி பதிப்பகம் மூலம் வெளியிட்டுள்ளார். இவையெல்லாம் எப்படி நடைபெற்றன என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. பின்நவீனத்துவம் முன்னிறுத்தும் பல்வேறு சாத்தியப்பாடுகளில் ஒன்று எனத் தோன்றுகிறது. அது மட்டுமில்லாமல் எனது வழமையான ஆழமான வாசிப்பும் கடின உழைப்பும் சங்க இலக்கியத்தை அணுகுவதில் வெளிப்பட்டுள்ளன என்று நினைக்கிறேன்.

**இலக்கிய விமர்சனத்துறைக்கு எப்படி வந்தீர்கள்?**

தற்செயலாகத்தான். எழுபதுகளின் நடுவில் சிறுபத்திரிகைகளில் கவிதை, கதை எழுதிய எனது நோக்கம் எதிர்காலத்தில் படைப்புலகில் கொடி கட்டிப் பறப்பதுதான். 1978ஆம் ஆண்டில் நண்பர் ஒருவர் பரிந்துரைத்த ராகுல சாங்கிருத்தியாயனின் வால்காவிலிருந்து கங்கை வரை, ஜார்ஜ் பொலிட்சரின் மார்க்சிய மெய்ஞானம், மக்சீம்கார்கியின் தாய் புத்தகங்களை வாசித்தவுடன் எனது சிந்தனைப் போக்கில் மாற்றம் ஏற்பட்டது. ஒருபுறம் பெரியாரின் கருத்துக்கள், இன்னொருபுறம் சிறுபத்திரிகை சார்ந்த உன்னத இலக்கியம் என்ற போக்கில் மார்க்சிய அரசியல் அழுத்தமான பாதிப்புகளை ஏற்படுத்தியது. அதேவேளையில் ரஷிய, பிரெஞ்சு, ஜெர்மன், அமெரிக்க இலக்கியப் படைப்புகளின் மொழிபெயர்ப்புகளை ஆர்வத்துடன் வாசித்தேன். லெனின், மாவோ எழுதிய அரசியல் ஆவணங்கள்; மொழிபெயர்ப்புப் படைப்புகள் என்ற நிலையில் எனது இலக்கியப் பார்வையில் மாற்றம் ஏற்பட்டது. உலக இலக்கியத்தின் மாஸ்டர்களான ஜாக் லண்டன், செகாவ், டால்ஸ்டாய், ஹெமிங்வே, பால்சாக், மாப்பசான், செல்மா லாகர்லெவ், தாஸ்தாயெவ்ஸ்கி போன்றோரின் படைப்புகளை வாசித்தபோது என்னால் ஒருபோதும் அவர்களைப் போல எழுத முடியாது என்று தோன்றியது. எழுதுவதில் இருந்து ஒதுங்கினேன். என்றாலும்




தமிழ்ப் படைப்புகளை ஆர்வத்துடன் வாசித்துக்கொண்டு இருந்தேன். 1994ஆம் ஆண்டு சுரேஷ்குமார இந்திரஜித் எனக்கு அனுப்பியிருந்த மறைந்து திரியும் கிழவன் சிறுகதைத் தொகுப்பை வாசித்துவிட்டு அவருக்கு எழுதிய கடிதம், நண்பர் ராஜமார்த்தாண்டனால் எடிட் செய்யப்பட்டு, தினமணி கதிர் பத்திரிகையில் மதிப்புரையாகப் பிரசுரமானது. தொடக்கத்தில் நான் விமர்சனத்தில் ஈடுபட ஊக்குவித்த காலச்சுவடு கண்ணன், ராஜமார்த்தாண்டன் இருவரும் முக்கியமானவர்கள். அப்புறம் ஒரு விஷயம். படைப்பாக்கத்தில் தோற்றுப் போனவர்கள்தான் விமர்சகர்கள் என்ற சொலவடைக்கு நானும் விதிவிலக்கு அல்ல.

**நீங்கள் எழுதிய நூல்கள் நாட்டுப்புறவியல், திரைப்படம், மொழிபெயர்ப்பியல், கிராமத்து வாழ்க்கை, சங்க இலக்கியம், அரசியல் எனப் பல்துறை சார்ந்ததாக இருக்கின்றன. இந்தப் பன்முகத்தன்மைக்குக் காரணமாக இருப்பது எது?**

சூழல்தான் காரணம். பெரிய திட்டமிடல் எதுவுமில்லை. பொதுவாக எனக்கு நாவல், புனைகதைகள் வாசிப்பதில் ஆர்வம் அதிகம். அதேவேளையில் பல்வேறுபட்ட கட்டுரை நூல்களை இடைவிடாமல் வாசிப்பதன்மூலம் எனது பார்வை விசாலமடைந்துள்ளது. எனது எம்.ஃபில் ஆய்வேடு குடுகுடுப்பைக்காரர்கள் பற்றிய கள ஆய்வு; முனைவர் பட்ட ஆய்வேடு தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட மேலைநாட்டு இலக்கியப் படைப்புகள் பற்றியது. நான் பிறந்து வளர்ந்த ஊரான சமயநல்லூர் பற்றி எழுதிட முயன்றதன் விளைவு கிராமத்துத் தெருக்களின் வழியே நூலானது. விமர்சனக் கட்டுரைகள் எழுதுவதற்குக் காரணம் உயர்கல்வி நிறுவனங்கள், சாகித்ய அகாதெமி, உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம், பல்வேறு இலக்கிய அமைப்புகள் போன்றவைதான். இருந்தாலும் அவ்வப்போது இலக்கியப் படைப்புகள் பற்றி எனக்குள் தோன்றுகிற ஆர்வம் காரணமாகவும் எழுதுகிறேன். உயிர் எழுத்து, உயிர்மை, காக்கைச் சிறகினிலே போன்ற இடைநிலைப் பத்திரிகைகளில் சமூகம், பண்பாடு, திரைப்படம் சார்ந்த கட்டுரைகள் எழுதுகிறேன்.

**தமிழிலக்கிய எழுத்தாளர்கள் பிரபஞ்சன், வேல.ராமமூர்த்தி போன்றோரின் கதைகளைத் தேர்வுசெய்து அவற்றைப் புத்தகமாகத் தந்து இருக்கிறீர்கள். அவர்கள் எழுதிய கதைகளைத் தொகுத்து, தொகுப்புரையுடன் புத்தகமாக மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எங்கிருந்து உருவானது?**

சங்க காலத்திலே படைப்புகளைத் தொகுக்கும் முயற்சி தமிழில் தொடங்கிவிட்டது.

அப்புறம் தேவாரம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம். அம்ருதா பதிப்பகம் முத்துக்கள் பத்து என்ற தலைப்பில் ஒரு படைப்பாளரின் கதைகளைத் தேர்ந்தெடுத்து வெளியிட்டுள்ளது. எனது தொகுப்பு முயற்சிக்கு முன்னோடிகள் உள்ளனர். கடந்த இருபதாண்டுகளில் பல சிறுகதையாசிரியர்களின் ஒட்டுமொத்தத் தொகுப்புகள் பெரிய புத்தகமாக வெளியாகியுள்ளன. அந்தப் புத்தகங்களைப் பலரும் வாங்கி வீட்டில் அடுக்கி வைத்திருக்கின்றனர். எனது கல்லூரி நூலகர் அனுபவத்தில் மாணவ மாணவியர் ரேக்கில் அடுக்கியிருந்த பெரிய தொகுப்பு நூல்களின் அருகில் செல்லவில்லை. இளைய தலைமுறையினர் சமகாலப் படைப்பாளிகளின் படைப்பாளுமையை அறிந்திடும்வகையில் சிறந்த கதைகளைத் தொகுத்து, விரிவான தொகுப்புரையுடன் வெளியிட்டுள்ளேன். அந்த வரிசையில் நாஞ்சில் நாடன், சாரு நிவேதிதா, என்.ஸ்ரீராம், ஜீ.முருகன், கந்தர்வன், இறையன்பு போன்றோர் எழுதிய கதைகள் அடங்கிய தொகுப்பு நூல்கள் பிரசுரமாகியுள்ளன. இதுபோன்ற தொகுப்பு நூல்கள் முயற்சியில் பலரும் ஈடுபட வேண்டும்.

**வரலாறு என்பது பன்முகப்பட்டது. தமிழின் அடையாளத்தை மீட்டுருவாக்கம் செய்துள்ள நாவல்கள், தமிழர் வாழ்க்கையின் பல்வேறுபட்ட போக்குகளுக்கு முக்கியத்துவம் தந்து எழுதப்படுகின்ற நாவல்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?**

வரலாறு என்ற சொல்லின் பின்னர் புதைந்திருக்கிற மர்மம், அளவற்றது. பாடப் புத்தகம் மூலம் போதிக்கப்படுகிற வரலாற்றில் மன்னர்கள், அரச வம்சங்கள், போர்கள், ஆயுதங்கள், படைகள், சதிகள், கொலைகள் இடம்பெற்றுள்ளன. ஒரு வரலாறு என்று துல்லியமாகச் சொல்ல முடியாது; பல்வேறு வரலாறுகள் இருக்கின்றன. வரலாற்றுச் சம்பவங்களின் பின்னர் பொதிந்திருக்கிற மதம், சாதி, வருணம், பால் சமத்துவமின்மை, பொருளியல் ஏற்றத்தாழ்வு போன்றவற்றை ஆராய்ந்திடும்போது, அதிகாரத்தைப் புரிந்துகொள்ள முடியும். இரண்டாயிரமாண்டுத் தமிழர் வரலாற்றில் கணக்கற்ற விஷயங்கள் பதிவாகியுள்ளன. வரலாற்றுத் தகவல்களை முன்வைத்து நாவலாசிரியர் புனைவின் வழியாகக் கட்டமைத்திட முயலுகிற நாவல், ஒருவகையில் வரலாற்றை மீட்டுருவாக்கிட முயலுகிறது.

வரலாற்றை நாவலாக்குகிற படைப்பாளியின் நிலைப்பாடு எந்த நோக்கிலானது என்பது முக்கியமானது. இன்றளவும் தமிழர்களால் விரும்பி வாசிக்கப்படுகிற கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் என்ற வரலாற்று நாவலின் இன்னொரு பக்கம் பற்றி ஆய்வாளர் பொ.வேல்சாமி குறிப்பிடுகிற தகவல் கவனத்திற்குரியது. இராசராசனின் அண்ணன் ஆதித்த கரிகாலனைக் கொலை செய்தவர்கள் என்று அன்றைய கல்வெட்டுக்களில் பதிவாகியுள்ள குற்றவாளிகள் அனைவரும் பார்ப்பனர்கள். A.R.E.557/1920 கல்வெட்டில் உள்ள கொலையாளிகளின் பெயர்கள்: சோமன், ரவிதாசனான பஞ்சவன் பிரமாதிராயன், அவனது தம்பி இருமுடி சோழ பிரமாதிராயன், உடன்பிறப்பு மலியனூரான், அவர்களுடைய மக்கள். இவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள். குற்றவாளிகள் அனைவரும் இராசராசன் பதவியேற்ற இரண்டாம் ஆண்டிற்குப் பின்னர் விசாரணையில் கண்டறியப்பட்டு, பார்ப்பனர்கள் என்பதால் அவர்களுடைய சொத்துகள் மட்டும் பறிமுதல் செய்யப்பட்டு, துரத்தியடிக்கப்பட்டனர். கல்கி, பொன்னியின் செல்வன் நாவலில் குற்றவாளிகளைப் பார்ப்பனர் அல்லாதவர்களாகவும், ஏறக்குறைய பாண்டிய நாட்டு மறவர்களாகவும் சித்திரித்துள்ளார். நடந்தவை வரலாற்று உண்மைகளாக இருப்பினும் பார்ப்பனர்களைக் கொலைகாரர்களாகச் சித்திரிக்க கல்கியின் பார்ப்பன மனம் இடம் தரவில்லை என்று பொ.வேல்சாமி விவரிப்பது, ஏற்புடையது. மன்னர்களை முன்வைத்துத் தமிழில் எழுதப்பட்டுள்ள பெரும்பாலான வரலாற்று நாவல்கள், படைப்பாளர்களின் விருப்பு வெறுப்பின் அடிப்படையில்தான் எழுதப்பட்டுள்ளன.

மன்னர்கள் பற்றிய தகவல்கள்தான் வரலாறு என்ற பார்வையில் இருந்து மாறுபட்டுக் கடந்த அறுநூறு ஆண்டுகளில் பதிவான ஆவணங்களில் இருந்து திரட்டிய தகவல்களின் பின்புலத்தில் சாமானியர்களை

உள்ளடக்கி, பிரபஞ்சன் எழுதியுள்ள மானுடம் வெல்லும், வானம் வசப்படும் நாவல்கள் தனித்துவமானவை.

2009ஆம் ஆண்டு காவல் கோட்டம் நாவல் வெளியாகி, சு.வெங்கடேசனுக்குச் சாகித்ய அகாதெமி விருது கிடைத்தவுடன், வரலாற்றை மீட்டுருவாக்கிடும் நாவல் வகையானது, தமிழில் பிரபலமானது. சிலர் வரலாற்றை மீட்டுருவாக்கிட ஆவணக் காப்பகங்களின் சேமிப்புகளில் மூழ்கினர். எப்பொழுதோ நடைபெற்ற சம்பவங்களைப் பற்றிய தகவல்களை எவ்விதமான விமர்சனமுமின்றி, அப்படியே தொகுத்து, கொஞ்சம் நகாசு வேலை செய்தால் போதும் நாவல் தயாராகிவிடும் என்று நம்பிக்கை, பரவலானது. வரலாற்றை மீட்டுருவாக்கிடும் நாவல்களில் ஆங்கிலேயரின் காலனியாதிக்கக் காலகட்டத்திய அரசியல் ஆவணங்கள், ஏசு சபைப் பாதிரியார்களின் கடிதங்கள், ஆங்கிலேய இராணுவ அதிகாரிகள் எழுதிய நினைவுக் குறிப்புகள், கெஜட்டியர்கள், மானுவல்கள் போன்ற ஆவணங்களில் இடம்பெற்றுள்ள வரலாற்றுத் தகவல்கள், பயன்படுத்தப்படுகின்றன. அதேவேளையில் வரலாற்றை மீட்டுருவாக்கிட முயலுகிற நாவல்களில் வரலாறு எவ்வளவு? படைப்பாளரின் சொந்தச் சரக்கு எவ்வளவு? யோசிக்க வேண்டியுள்ளது. வரலாற்று ஆய்வாளர்களால் பல்லாண்டு முயற்சியினால் திரட்டப்பட்ட ஆதாரங்களுடன் எழுதப்பட்ட வரலாற்றுத் தகவல்களை அப்படியே நாவலின் பக்கங்களில் நிரப்பிடும் திருக்கூத்தும் இங்கே நடைபெறுகிறது. நாவலாசிரியர் வரலாற்றுத் தகவல்கள் மூலம் கண்டறிந்த கண்டுபிடிப்பு எதுவும் நாவலில் இல்லை என்ற நிலை, கதையாடலை மொக்கையாக்குகிறது. வெறுமனே வரலாற்றுத் தகவல்களால் நிரம்பி வழிகிற நாவல்களை வாசிப்பது, ஒருவகையில் தண்டனைதான்.

**படைப்பாளரின் உணர்வுகள் வெளிப்பட, சிறுபத்திரிகை இன்று தேவையானதாக உள்ளது. சிறுபத்திரிகைகள் பற்றியும் அதில் நிலவும் அரசியல் பற்றியும் உங்கள் கருத்து?**

சிறுபத்திரிகை பற்றி நிரம்பப் பேச வேண்டியுள்ளது. சிறுபத்திரிகை மரபு குறித்து இளைய தலைமுறையினர் அறிந்திட வாய்ப்பு இல்லை. எண்பதுகளில் நண்பர் அப்பாஸ், "பாண்டியன் நாம் எல்லாம் சிறுபத்திரிகைக்காரனுக" என்று தீவிரமான முகபாவத்துடன் அவ்வப்போது சொல்லுவார். அதுபோல நண்பர் சுதீர்செந்தில் உற்சாகமான வேளையில் "சிறுபத்திரிகைக்காரர்கள் நாம்" என்று பெருமையாகச் சொல்லுவார். அதில் உண்மை இருந்தது. நவீனம் பற்றிய தேடலுடன் நாங்கள் கலகக்காரர்களாகச் செயல்பட்டோம். நிலவுகிற சமூக மதிப்பீடுகள், ஒழுக்கம், அரசியல், பழக்கவழக்கம் போன்றவற்றைக் கேள்விக்குள்ளாக்கிய சிறுபத்திரிகைக்காரர்கள், மரபை உடைத்திட முயன்றனர். சிறுபத்திரிகைக்காரர்கள் நடத்திய இலக்கியக் கூட்டங்கள் காத்திரமானவை. பல்வேறு சிறுபத்திரிகைகளைத் தொடர்ந்து வாசிக்கிறவர்கள், காலப்போக்கில் சிறுபத்திரிகைகாரர்களாக மாறினர். சிறுபத்திரிகை உலகில் எல்லாக் காலகட்டத்திலும் குழு மனப்பான்மை அரசியல் நிலவியது. நானும் அவ்வப்போது வெவ்வேறு குழுக்களில் இருந்திருக்கிறேன். எதிர்க் குழுவைச் சார்ந்த படைப்பாளியின் படைப்பைப் போட்டுத் தாக்குவதும் நடைபெற்றது. வெங்கட் சாமிநாதன், தமிழவனுக்கு இடையில் நடைபெற்ற கருத்தியல் மோதல்கள், வெங்கட் சாமிநாதன் ஒரு சி.ஐ.ஏ. உளவாளி, தமிழ் இலக்கியத்தை நாசமாக்கிட அனுப்பப்பட்டவர் என்ற பேச்சுகள் இளைய தலைமுறையினருக்கு வேடிக்கையாகத் தோன்றும். அது ஒரு காலம்.

தொண்ணூறுகளின் பிற்பகுதியில் உலகமயமாக்கலின் உச்சம், கணினித் தொழில்நுட்பத்தின் விளைவுகள், இணையகப் பரப்பின் வீச்சுகள் காரணமாகத் தமிழ்ச் சூழலில் மாற்றங்கள் நடந்தேறின. இலக்கியத்தின் முகமும் மாறியது. 'வாங்கு, பயன்படுத்து, ரசனையை மாற்று, தூக்கியெறி' என்ற நுகர்பொருள் கோஷம் இலக்கிய அணுகுமுறையிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. எல்லாம் சந்தைக்கானதாக உருமாறும் சூழலில், இலக்கியம் மட்டும் விதிவிலக்கா என்ன? சுபமங்களா பத்திரிகை சிறுபத்திரிகைத் தோற்றத்தில் வணிகரீதியில் பரந்துபட்ட வாசகர்களைச் சென்றடைந்தது. காலச்சுவடு, உயிர்மை, அம்ருதா, தீராநதி, உயிர் எழுத்து, கல்குதிரை போன்ற இடைநிலைப் பத்திரிகைகளால் வாசகத்தளம் விரிவடைந்தது.

முந்நூறு பேர் அடங்கிய சிறுபத்திரிகைச் சூழல் மறைந்தது. படைப்பாளர், வாசகர்கள் என நெருக்கமாக இருந்த நிலை மாற்றத்திற்குள்ளானது. பிரமாண்டமாக வெளியிடப்படும் இடைநிலைப் பத்திரிகைகள், சிறுபத்திரிகை மரபினுக்கு நெருக்கமாக இல்லை. முக்கியமான படைப்புகளைத் தாங்கி வெளியிடப்பட்டாலும் ஏதோ ஒருவிதமான அந்நியத்தன்மை தோன்றுகிறது. ‘அஃகு’, ‘பிரக்ஞை’, ‘கசடதபற’ வாசிக்கும்போது ஏற்பட்ட நெருக்கமான மனஉணர்வு ஏற்படவில்லை. புது எழுத்து, திணை, மணல் வீடு, திசை எட்டும், குறி, காக்கைச் சிறகினிலே, சங்கு, புரவி, நீலம் போன்ற பத்திரிகைகள் வெளியாகின்றன. அவற்றை எண்பதுகளில் நிலவிய சிறுபத்திரிகை அடையாளத்துடன் பொருத்திட வாய்ப்பு இல்லை.

இன்று மின்னணு ஊடகம் வலுப்பெற்று இணையத்தில் பிளாக்கர்ஸ் எனப்படும் வலைப்பதிவர்கள் எதை வேண்டுமானாலும் எழுதி வெளியிடலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. முகநூல், யூ டியூப்களில் பலரும் எழுதிக்கொண்டிருக்கின்றனர். யார் வேண்டுமானாலும் ஆசிரியராக இலக்கியப் பத்திரிகையை மின்னணு ஊடகத்தில் பதிவேற்றலாம். அவரவர் இலக்கியபீடம் வலுவாக உள்ளது. யாரையும் தேடிப் போகவோ, குழுவாகச் சேர்ந்து இயங்கவோ அவசியமற்ற சூழல் நிலவுகிறது. இலக்கியத்தை முன்வைத்துக் கிடைக்கும் நட்பு தேவையில்லை. உலகமெங்கும் பரவியுள்ள இளைஞர்கள் Virtual ஆக உருவாகியுள்ள தமிழ் இலக்கியப் பரப்பில் நாடுகளைத் தாண்டியவாறு மிதந்து கொண்டிருக்கின்றனர்.

சிறுபத்திரிகையை முன்வைத்து உருவாகிடும் இலக்கிய வட்டம் இன்று ஆளுகையுடன் இல்லை. நான்கைந்து பேர் சேர்ந்து கைக்காசைப் போட்டு இலக்கிய நண்பர்களை அழைத்துவந்து கூட்டம் போட்ட மரபு மறைந்துவிட்டது. மூத்த படைப்பாளர்களை மதித்து, அவர்களின் வழித்தோன்றல் என நம்பி, பேசிப் பழகிய சிறுபத்திரிகை மரபு சிதிலமாகியுள்ளது. ஒரு கவிதைத் தொகுதி அல்லது ஒரு நாவல் மூலம் நவீன தமிழிலக்கியத்தில் சிகரத்தை எட்டிவிட்டதாக நம்புகிற மனப்பான்மை பெருகியுள்ளது. சிறுபத்திரிகைகளால் உருவான சிறுபத்திரிகைக்காரர்கள் இன்று அருகிவரும் உயிரினமாகிவிட்டனர்.

**இடைநிலை இதழ்கள் இன்றைக்கு இலக்கியத்தின் போக்கைத் தீர்மானிக்கின்றனவாக உள்ளனவா?**

பெரும்பாலான இடைநிலை இதழ்களுக்கு ஏதோவொரு கணக்கு வழக்கு இருக்கிறது. புத்தகங்களைப் பதிப்பித்து விற்பனை செய்கிற பதிப்பகங்கள் நடத்துகிற இடைநிலை இதழ்கள், புத்தகப் பட்டியலை மாதந்தோறும் வெளியிட்டுப் புத்தக வியாபாரத்தைப் பெருக்கிட முயலுகின்றன. இடைநிலை இதழ்களின் ஆசிரியர்களின் அரசியல் பார்வைகள் முக்கியமானவை. இடைநிலைப் பத்திரிகைகளில் இரு கதைகள், கொஞ்சம் கவிதைகள், ஓரிரு புத்தக மதிப்புரைகள், திறனாய்வுக் கட்டுரை தவிர்த்து, பெரும்பாலும் சமகால அரசியல், திரைப்படம், சமூகம் சார்ந்த விஷயங்களுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. சமூக வலைத்தளத்தின் தொடர்ச்சியாக இயங்குகிற சில இடைநிலைப் பத்திரிகைகள் சமூக அக்கறையுடன் கேளிக்கையைப் பெரிதும் முன்னிறுத்துகின்றன. அவ்வப்போது வெளியாகுகிற இலக்கிய ஆளுமைகளின் நேர்காணல்கள், இலக்கியப் படைப்புகளை வாசிக்கிற சராசரி வாசகர்கள் இடைநிலை இதழ்களை இலக்கியப் பத்திரிகை என்று மயங்குகின்றனர். எனக்குத் தெரிந்த அளவில் பெரும்பாலான இடைநிலைப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு இலக்கியம் என்பது இரண்டாமிடம்தான். அப்புறம் எப்படி இடைநிலை இதழ்களால் இலக்கியப் போக்குகளைத் தீர்மானிக்க முடியும்?

**படைப்புக்கும் அதை வாசிக்கிற வாசகனுக்குமிடையில் விமர்சனம் நுண்தளத்தில் செயல்படுகிறது. இலக்கியத்தினால் பாமர மக்களுக்கு ஏதாவது பயன் இருக்குமானால், விமர்சனத்தினாலும் ஏதாவது பயன் இருக்குமென்று கருதுகிறீர்களா?**

கலை, இலக்கியத்திற்கும் மக்களுக்கும் இடையில் நுண்ணுறவு எப்பொழுதும் இருக்கிறது. தொன்மக் கதைகள், குலதெய்வக் கதைகள், மூதாதையர் வம்சாவளிக் கதைகள் போன்றவை வாய்மொழியாக

எழுத்தறிவு இல்லாத பாமரர்களிடமும் ஆதிக்கம் செலுத்துகின்றன. மகாபாரதமும் இராமாயணமும் செவி வழியாக எல்லோரின் மனங்களிலும் ஊடுருவியுள்ளன. அடுத்தவன் மனைவி மீது ஆசைப்பட்டு அத்துமீறலாகச் செயல்பட்டால் மாபெரும் வீரனுக்கும் அழிவு நிச்சயம் என்று இராமாயணம் சொல்கிறது. பங்காளிகள் சொத்துக்காகச் சண்டையிட்டால் பேரழிவுதான் என்கிறது மகாபாரதம். ஏன் இன்றைக்கு எழுதப்படுகிற புனைகதைகளில் இருந்துகூட கற்றுக்கொள்வதற்கு நிறைய விஷயங்கள் இருக்கின்றன. காத்திரமான படைப்பு, மனித மனதில் ஊடுருவி, அழுத்தமான பாதிப்புகளை உருவாக்கிடும் வல்லமை மிக்கது. படைப்புப் பற்றிய மறுபேச்சுக்களை உருவாக்குகிற விமர்சனமும் ஒருவகையில் படைப்புச் செயல்பாடுதான். படைப்புப் பற்றிய பேச்சுக்களை உருவாக்குகிற விமர்சனம், படைப்பைப் பரந்துபட்ட மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. படைப்பு, விமர்சனம் எல்லாம் மேல்கட்டுமானம்தான். அவற்றுக்கான வரையறை இருக்கின்றன.

**கடந்த முப்பது ஆண்டுகளாகத் தமிழ் இலக்கிய உலகுடன் நெருக்கமான தொடர்புடன் செயல்படுகிறீர்கள். அண்மையில் தமிழ்ப் படைப்புலகில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்? உங்கள் மனதைப் பாதித்த விஷயம்?**

மூன்றாம் தலைமுறை எழுத்தாளர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறேன். 1975ஆம் ஆண்டு பிடித்த இலக்கியப் பிசாசு இன்றைக்கும் எனக்குள் இருக்கிறது. நகுலன், சுந்தர ராமசாமி போன்றோருடன் ஏற்பட்ட நட்பு, நினைவிலாடுகிறது. இளைய தலைமுறை எழுத்தாளர்களின் நட்பும் எழுத்துக்களும் உற்சாகம் அளிக்கின்றன. முன்னர் பல்லாண்டுகளாகச் சிறுபத்திரிகை உலகில் புழங்கியவர்கள்தான் காத்திரமான படைப்புகளைப் படைத்தனர். இன்றைக்குச் சமூக வலைத்தளத்தில் எழுதிப் பழகியவர்களால் குறுகிய காலத்தில் சிறந்த புனைகதையை எழுத முடிகிறது. இன்னொருபுறம் தேர்ந்தெடுத்த வாசிப்புக் கூடியுள்ளது. இதுவரை தமிழில் வெளியாகியுள்ள முக்கியமான நாவல்களை வாசிக்க வேண்டிய அவசியம் இப்பொழுது



இல்லை. நவீன நகரத்து வாழ்க்கை, பலருக்கும் வித்தியாசமான அனுபவங்களைத் தந்துள்ளது. எல்லாம் இருந்தும் எதுவுமில்லாத சோர்வுடன் பலரும் தத்தளிக்கின்றனர். மௌனியின் காதலுக்காக உயிரைத் துறக்கிற இளைஞன் பற்றிய கதை, அபத்தம் என்று என்னிடம் சொன்ன கல்லூரி மாணவரின் பேச்சு எனக்கு முக்கியம். இன்று காதலை முன்வைத்துத் துயரப்பட வேண்டிய தேவை இல்லை; பிடித்தால் சேர்ந்திருக்கலாம்; இல்லாவிடில் பிரிந்துவிடலாம். உடல் பற்றிய புனிதங்களும் கொண்டாட்டங்களும் இணையத்தில் கொட்டிக்கிடக்கிற போர்ன் படங்களால் காலாவதியாகிவிட்டன. பழைய மதிப்பீடுகளைப் பொருட்படுத்தாத புதிய தலைமுறையினர் உருவாகிவிட்டனர். பள்ளிப் பருவத்தில் தொடங்கிய சுயநல மனம், கடைசிவரை தொடர்கிறது. இந்தச் சூழலில் இலக்கியப் படைப்புகளின் பாடுபொருள்கள் மாறுபடுகின்றன. தமிழில் புதிய முறையில் கதைசொல்கிறவர்கள் கணிசமாகப் பெருகியுள்ளனர். தகவல் தொழில்நுட்பப் பணியாளரான விநாயக முருகன், செல்லமுத்து குப்புசாமி, வளன், சரவண கார்த்திகேயன்; மருத்துவர்களான சிவபாலன் இளங்கோவன், அருணாராஜ், மயிலம் ஜி.சின்னப்பன், சுனில் கிருஷ்ணன்;

காட்சி ஊடகத்தில் பணியாற்றுகிற சரவணன் சந்திரன், சந்திரா, கவிதா சொரணவல்லி, மித்ரா அழகுவேல்... இப்படி பல்வேறு தரப்பினர் தொடர்ந்து கதைசொல்வது பெரிய மாற்றம் இல்லையா? 90களில் கோணங்கி, எஸ்.ராமகிருஷ்ணன் எழுதிய கதைகளுக்குப் பின்னர் கதைசொல்லலில் தேக்கம் நிலவியது. ஆனால், இருபத்தொன்றாம் நூற்றாண்டில் புனைவு எழுத்துக்கள் பெரிய எண்ணிக்கையில் வெளியாகியுள்ளன. கடந்த இருபதாண்டுகளில் நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள் வெளியிட்டுள்ள இளம் எழுத்தாளர்கள் நம்பிக்கை அளிக்கின்றனர். குறிப்பாகப் பெண் எழுத்தாளர்களும் தலித் படைப்பாளர்களும் காத்திரமாகச் செயல்படுவது உற்சாகமான விஷயம்.

**இன்று நவீனத் தமிழிலக்கியம் பெற்றுள்ள வளமானது 1941 முதல் 1970 வரை மொழிபெயர்க்கப்பட்ட பல்வேறு நாட்டுப் படைப்புகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அண்மைக்காலமாகத் தமிழாக்கப்படும் மொழிபெயர்ப்புப் படைப்புகள் நம்பிக்கை தருகின்றனவாக உள்ளனவா?**

நீங்கள் சொல்வது சரி. புனைகதையைப் பொறுத்தவரையில் தொடக்ககால மொழிபெயர்ப்புப் படைப்புகள், தமிழ்ப் படைப்புகளில் அழுத்தமான செல்வாக்குச் செலுத்தின. அது, வரவேற்கத்தக்க அம்சம். 1980களின் பிற்பகுதியில் தமிழில் மொழிபெயர்ப்புகள் புதிய சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டன. கண்ணில்பட்ட மேலைநாட்டுப் படைப்புகளை மனம்போன போக்கில் தமிழாக்கும் போக்கு அறிமுகமானது. சிறுபத்திரிக்கை ஆசிரியர்களின் குறுங்குழு வாதத்தினாலும் குழுச்சண்டைகளினாலும் விஷய வறட்சியினாலும் எதையாவது மொழிபெயர்த்துப் பத்திரிகையின் பக்கங்களை நிரப்பிடும் நிலை ஏற்பட்டது. போர்த்துக்கீசிய நாட்டைச்சார்ந்த 'X' என்பவரை மொழிபெயர்ப்பதன்மூலம், உலக இலக்கியம் அறிந்த மொழிபெயர்ப்பாளர் என்ற பிம்பம் சிறுபத்திரிகை உலகில் ஏற்படும் என்ற நப்பாசை சிலரைத் தூண்டியது. பிறநாட்டு இலக்கியப் படைப்புகளிலிருந்து எதை மொழிபெயர்க்க வேண்டும்? தமிழுக்கு இது தேவைதானா? போன்ற அடிப்படைக் கேள்விகள் எதுவுமில்லாமல், தான்தோன்றித்தனமாகச் செயல்படும் போக்கு வலுவடைந்தது. அந்தப் போக்கு இன்றுவரையிலும் தொடர்கிறது. இன்று தமிழில் மொழிபெயர்க்கப்படுகிற புத்தகங்களில் பல சாதாரணமானவை. சராசரியான புத்தகங்களைத் தலையணை அளவில் தமிழாக்குவது வெட்டி வேலை. ஏதோவொரு ஐரோப்பிய நாட்டில் பணத்தை வாங்கிக்கொண்டு, பிறமொழி நாவலைத் தமிழாக்கி, அது முக்கியமான நாவல் என்ற புனைவைச் சில பதிப்பகங்கள் கட்டமைக்கின்றன. இந்த நாவல் 26 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, 26 லட்சம் பிரதிகள் விற்பனையானது என்ற புத்தகப் பின்னட்டை வாசகங்களை நம்பி வாசித்தால் அது திராபையானது என்று தெரியும்.

இலக்கியப் படைப்புகளை விமர்சனமற்று மொழிபெயர்த்து வெளியிடும் போக்குப் பெருகியதனால் அசலான தமிழ்ப் படைப்பாக்கம் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. சில மேதாவிகள் அசலான தமிழ்ப் படைப்புகளில் என்ன இருக்கு? என்று பேசவும் எழுதவும் தொடங்கியுள்ளனர். இதனால் தமிழ்ப் படைப்புகள் பற்றி மட்டமான அபிப்ராயம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிலை ஏதோ ஒரு சிலரால் திட்டமிட்டுத் தமிழில் ஏற்படுத்தப்பட்டது அல்ல. பின் காலனியச் சூழலில் வளரும் நாடுகளில் மொழியின் வழியே கருத்தியல்ரீதியில் ஆதிக்கம் செலுத்திடத் திட்டமிட்டதன் விளைவுதான் இது. ஒரு பண்பாட்டின்மீது இன்னொரு






ஆதிக்கப் பண்பாட்டினைத் திணிப்பது அல்லது இலக்கிய இடைவெளியில் மாற்றியமைப்பது என்பது இன்றைய மொழிபெயர்ப்புகளின் முக்கியப் பணியாக உள்ளது.

**‘திராவிட இயக்க வளர்ச்சியில் கலைஞரின் நாடகங்கள்’ என்ற நூல்மூலம் திராவிட இயக்கத்தின் இன்னொரு முகத்தை மறுவாசிப்பிற்குள்ளாக்கி மீட்டுருவாக்கம் செய்திருக்கிறீர்கள். தமிழகத்தில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தத் தோற்றுவிக்கப்பட்ட சீர்திருத்த அமைப்பான திராவிட இயக்கம் பற்றி உங்கள் கருத்து?**

எனது குடும்பப் பின்புலம் திராவிட இயக்கப் பின்புலமுடையது. எனது தாய்மாமா சு. கருப்பண்ணன், திராவிட நாடு பத்திரிகையின் முகவர் மட்டுமின்றி, 1949ஆம் ஆண்டு சி.என்.அண்ணாதுரையை அழைத்து எங்கள் ஊரில் கூட்டம் நடத்தியவர். எனது அய்யப்பா மூ.வடிவேல் பெரியாரின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு 96ஆம் வயதிலும் மூடநம்பிக்கைக்கு எதிராக இருந்ததுடன் விடுதலை நாளிதழை உற்சாகத்துடன் வாசித்தார். எனது தந்தையார் மூ.வ.நடராசன் 1948ஆம் ஆண்டு தூத்துக்குடியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் குடும்பத்துடன் கலந்துகொண்டார். அவர் இறுதிவரையிலும் திமுகவின் அனுதாபியாக இருந்தார். எழுபதுகள் காலகட்டத்தில்கூட சாதியத்தின் மேலாதிக்கம் வலுவாக நிலவிய எங்கள் ஊரில், ஒடுக்கப்பட்ட சாதியில் இருந்து, பொருளியல்ரீதியில் முன்னேறியிருந்த எங்கள் குடும்பத்தினருக்குத் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் சமூக மதிப்பீட்டில் முக்கியமானவை. சாதிய இழிவுடன் சாதியின் பெயரைச் சொல்லிக் கேவலமாகப் பேசுகிற சூழலில் மனிதனை மனிதனாக எண்ணிச் சுயமரியாதைக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்த திராவிட இயக்கத்தாரின் செயல்பாடுகள், என்னைப் போன்ற பலருக்கும் வழிகாட்டின.

வைதிக சநாதனம் தமிழர்களின் வாழ்க்கையில் காலங்காலமாக உருவாக்கியிருந்த சாதிய ஏற்றத்தாழ்வு, சாதிய இழிவு போன்றவற்றைப் போக்கிட முயன்ற திராவிட இயக்கத்தினரின் அரசியல் செயல்பாடுகள் இன்றும் தேவைப்படுகின்றன. கடந்த ஐம்பதாண்டுகளில் திராவிட இயக்கத்தாரின் ஆட்சியையும் செயல்பாடுகளையும் பொத்தாம் பொதுவாகக் குறை சொல்கிறவர்கள் ஒருவகையில், வைதிக சநாதனத்தின் குரலையே ஒலிக்கின்றனர். இந்தியாவின் வடமாநிலங்களுடன் ஒப்பிட்டால், தமிழ்நாடு கல்வி, மருத்துவம், சாலைப் போக்குவரத்து, தகவல் தொடர்பு, தொழில், தனிநபர் வருமானம் போன்றவற்றில் பிரமாண்டமான வளர்ச்சியடைந்துள்ளது. திராவிட இயக்கத்தினரின் ஆட்சியில் நடைபெற்ற ஊழல், தில்லுமுல்லு, ஆடம்பரம் போன்றவற்றைக் காட்டி, ஒட்டுமொத்தமாகப் புறக்கணிப்பது சரியல்ல.

இன்றைய சூழலில், திராவிட இயக்கத்தின் கொள்கைகளையும் செயல்பாடுகளையும் மறுவாசிப்புச் செய்யவேண்டியுள்ளது; மக்களிடம் கொண்டு செல்ல வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கடந்த பத்தாண்டுகளுக்கும் கூடுதலாக திராவிட இயக்கத்தின் தேவையைப் பல்வேறு வழிகளில் கண்டறிந்ததன் விளைவாகத் திராவிடக் கருத்தியல்களை மீண்டும் தீவிரமாக வாசிக்கத் தொடங்கினேன். திராவிட இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்துப் பதிவாக்கிட முயன்றதன் விளைவுதான் ‘திராவிட இயக்க வளர்ச்சியில் கலைஞரின் நாடகங்கள்’ என்ற நூல். அந்த நூல் நண்பர் இளையபாரதியின் வ.உ.சி.நூலகம் பதிப்பகம்மூலம் 2007ஆம் ஆண்டு வெளியானது.



**சிறந்த படைப்பு என்பது எதை முன்னுதாரணமாகக் கொண்டு தடம் பதிப்பதாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறீர்கள்?**

சிறந்த படைப்புக்கு என்று தனிப்பட்ட இலக்கணம் அல்லது வரையறை எதுவும் இல்லை. ஒவ்வொரு படைப்பும் வாசகரால் வாசிக்கப்படும்போது அவருக்குள் உருவாகும் பிரதிதான் புதிய மதிப்பீடுகளை உருவாக்குகிறது. எண்பதுகளில் இறுதியில் எனக்குப் பிடித்த எழுத்தாளரான ப.சிங்காரம் எழுதிய நாவல்கள் பற்றிக் கட்டுரை எழுதி, இலக்கியச் சந்திப்பு என்ற அமைப்பில் வாசித்தேன். அப்புறம் ஓரிரு ஆண்டுகளுக்குப் பின்னர் குற்றாலம் பதிவுகள் கூட்டத்திற்குப் போயிருந்தபோது சுந்தர ராமசாமியுடன் பேசிக்கொண்டிருந்தேன்.

அவர் ஏற்கனவே ப.சிங்காரம் பற்றி நான் வாசித்த கட்டுரையைப் பற்றி அறிந்து இருந்ததால் அந்த நாவல்கள் வடிவத்திலும் கதைசொல்லலிலும் தேறவில்லை என்று கூறினார். உங்களுக்கு அவருடைய நாவல்கள் எப்படி முக்கியமானவையாக இருக்கின்றன என்று கேட்டார். என்னுடைய பதில் அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை. நான் மட்டுமின்றி அவர் மதிக்கின்ற சி.மோகனும் அந்த நாவலைக் கொண்டாடுவதாகச் சொன்னார். கடைசிவரையிலும் அவருக்குப் ப.சிங்காரத்தின் நாவல்கள் பற்றி நல்ல அபிப்ராயம் இல்லை. இதுபோன்ற பல அனுபவங்களை எதிர்கொண்டுள்ளேன்.

ஏது சிறந்த படைப்பு என்பது முக்கியமான கேள்வி. நான் பல்கலைக்கழக மாணவனாக இருந்தபோது தி.ஜானகிராமனுடைய மோகமுள், அம்மா வந்தாள் நாவல்களை வாசித்தேன். அம்மா வந்தாள் நாவலின் வடிவம், கதை சொல்லும்முறை, கதையாடல் எல்லாம் எனக்குப் பிடித்திருந்தன. மோகமுள் வெகுஜனப் பத்திரிகையில் வெளியான தொடர்கதைக்குரிய பலவீனத்துடனும் இருந்ததனால் என்னால் சிரமப்பட்டுத்தான் வாசிக்க முடிந்தது. யமுனாவுக்கும் பாபுவுக்கும் இடையில் பாலியல் வேட்கையும் இறுதியில் இருவரும் உடலுறவு கொண்டனர் என்ற தி.ஜானகிராமனின் விவரிப்பும் எனக்கு அலுப்பைத் தந்தன. மோகமுள் சராசரியான நாவல். ஆனால் மோகமுள் நாவல் என்றால் மெய் சிலிர்க்கிறவர்கள் இருக்கிறார்கள். எண்பதுகளில் பெரும்பாலான திரைப்பட நடிகைகள் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டிகளில் மோகமுள் நாவல் பிடித்தமானது என்று சொன்னது நினைவுக்கு வருகிறது. வாசிப்பும் அனுபவமும் வேறு வேறானவை. பறவைகள் பலவிதம் போல ஒவ்வொரு சிறந்த படைப்பும் இதுவரையில் கட்டமைக்கப்பட்ட விதிகளை மீறித்தான் இலக்கிய வானில் சிறகடிக்கிறது.




**ஒரு படைப்பு காலங்கடந்து நிலைத்து நிற்கிறது எனில், அப்படைப்பு காலந்தோறும் உருவாக்கும் விமர்சன மதிப்பீடுகள், சமகாலத்துடன் பொருந்திப் போகின்றவையாக இருக்கின்றன என்பதை நம்புகிறீர்களா?**

நிச்சயமாக. அதில் என்ன சந்தேகம்? ஒரு படைப்பைப் பிரோமோட் பண்ணிட எந்த லாபி செய்தாலும் காலம்தான் சிறந்த படைப்பைத் தீர்மானிக்கும். சிறந்த படைப்புகள் தனக்கான இடத்தைத் தானாக உருவாக்கிக்கொள்கின்றன என்பது எனது அனுபவம் சார்ந்த கணிப்பு. இந்நிலைமை சமூக வலைத்தளங்களில் வெளியாகிற இலக்கியப் படைப்புகளுக்கும் பொருந்தும். ஐம்பெருங்காப்பியங்கள் என்று சிலப்பதிகாரமும் சீவகசிந்தாமணியும் அடையாளப்படுத்தப்படுகின்றன. தமிழர் வாழ்க்கையில் சிலப்பதிகாரம் இன்றைக்கும் பேசுபொருளாக இருக்கிறது. அதேவேளையில் சீவகசிந்தாமணி காப்பியத்தை வாசிக்கக்கூட யாருமில்லை. ஏன் இந்த முரண் என்று யோசிக்க வேண்டும். சாதி, சமயம், வருணம் என்று எந்தவிதமான முட்டுகொடுத்து ஒரு படைப்பைப் போற்றினாலும் அது காலவெள்ளத்தில் நிச்சயம் காணாமல் போய்விடும். விமர்சகர் க.நா. சுப்ரமணியம் முக்கியமான படைப்பாளர் என்று போட்ட பட்டியல், அவருடைய காலத்திலே மறைந்துவிட்டது. க.நா.சு. கொண்டாடிய ந. சிதம்பர சுப்பிரமணியம் எழுதிய மண்ணில் தெரியும் வானம் நாவலுக்கு இலக்கிய வரலாற்றில்கூட இடமில்லை. ஒரு படைப்பாளி சமூக விஞ்ஞானி போலச் செயல்பட்டு, எதிர்காலத்தின் போக்குகளைக் கண்டுபிடித்துத் தன்னுடைய படைப்பில் பதிவாக்கினால் அந்தப் படைப்புக் காலங்கடந்து நிலைத்திருக்கும். ப.சிங்காரம் 1972 இல் எழுதிய புயலிலே ஒரு தோணி நாவல், அவர் வாழும் காலத்தில் பெரிய அளவில் பேசப்படவில்லை. அவர் மறைந்து இருபதாண்டுகள் கழித்து எட்டுப் பதிப்பகங்கள் புயலிலே ஒரு தோணி நாவலை வெளியிட்டிருப்பது அந்த நாவலுக்குக் கிடைத்துள்ள வரவேற்பின் வெளிப்பாடு. இன்னும் சொன்னால் என்றோ யாரோ ஒருவரால் படைக்கப்பட்ட படைப்பு, சமகால அரசியல், சமூகம், பண்பாட்டுடன் இயைந்திருந்தால் அது நிலைத்திருக்க வாய்ப்புண்டு. இறப்பினுக்குப் பின்னரும் தன்னுடைய படைப்புகள் நிலைத்திருக்க வேண்டும் என்று படைப்பாளர் எதிர்பார்ப்பது சரியல்ல.

(அடுத்த இதழில் நிறைவுறும்) ■

தொடர் - 11

● மு.முருகேஷ்



# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

*"அச்சமில்லை அச்சமில்லை*
*அச்சமென்பதில்லையே*

*உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற*
*போதினும்*

*அச்சமில்லை அச்சமில்லை*
*அச்சமென்பதில்லையே..!"*

பாரதியின் பாடல் வரிகளில் சிறுவயதில் என்னை மிகவும் ஈர்த்த வரிகளிவை. இந்தப் பாடல் வரிகளை முழுமையான அர்த்தத்தோடு உள்வாங்கிக்கொள்ளும் வயதில்லை என்றாலுங்கூட, இந்த வரிகளை உச்சரிக்கையில் மனதில் உண்டாகும் ஒருவித எழுச்சி ரொம்பவும் பிடித்திருந்தது.

இரவில் தூக்கம் வராமல் விழித்திருக்கும்போதும், இருட்டில் எங்கேனும் தனியாகச் செல்லும் சூழல் அமையும்போதும் என்னையறியாமல் பாரதியின் இந்தப் பாடல் வரிகளை மனசுக்குள் சொல்லத் தொடங்கிவிடுவேன். தனிமை விலகி, பயம் களைந்தோட, எனக்குள் ஒரு வெளிச்சம் பரவத் தொடங்கிவிடும். (எனது மகள்களுக்கும் இந்தப் பாடல் வரிகளைச் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். சிறுவயதில் அவர்கள் இந்தப் பாடலைப் பாடுகையில் எனக்குள் ஒரு புத்தெழுச்சி உண்டாகும்).

எனது தொடக்கக்காலக் கவிதைகள் வாசிப்பு இப்படியான தெறிப்பான – உணர்வைத் தூண்டும் வரிகளின் மீதே அதிகம் நாட்டம் கொண்டது. கவிஞர்கள் இன்குலாப், தணிகைச் செல்வன், கவிச்சுடர் கவிதைப்பித்தன், கந்தர்வன், நா.முத்துநிலவன், ஜீவி, தங்கம் மூர்த்தி, பரிணாமன், நவகவி என

எனக்குப் பிடித்தமான உத்வேகமளிக்கும் வரிகளையெழுதிய கவிஞர்களின் கவிதைகளைத் தேடிப் படிப்பேன்.

பள்ளி மாணவனாக இருந்த காலந்தொட்டே நான் தினமும் நூலகங்களுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். அப்படியானதொரு நூலகத் தேடலில் என் கையில் சிக்கிய கவிதை நூல் 'இது எங்கள் கிழக்கு'. தொண்ணூறுகளின் தொடக்கக் காலமது. ஓவியக்கவிஞர் அமுதபாரதியின் அழகிய கையெழுத்திலான அந்தக் கவிதை நூலின் அட்டையும், கவிதை நூலின் தலைப்பு தந்த ஒரு நம்பிக்கையும் அந்த நூலை எடுத்துப் படிக்கத் தூண்டின.

அந்த நூலை எழுதியவர் கவிஞாயிறு தாராபாரதி. சின்னச் சின்ன நெருப்புத்துண்டுகளால் பின்னப்பட்ட கவிதைகள் நூலெங்கிலும் இருந்தன. இயல்பான ஓசை அழகும், வாசிக்கையிலேயே மனதில் தங்கிவிடும் அழகிய வரிகளையுமுடைய கவிதைகளைப் படித்ததுமே எனக்குப் பிடித்துப்போயின.

பிறகு, கவிஞர் தாராபாரதியின் கவிதை நூல்களைக் கண்டால் உடனே ஆர்வத்தோடு எடுத்துச்சென்று படிப்பேன். புதிய விடியல்கள் (1982), விவசாயம் இவர் வேதம் (1992), பண்ணைப்புரம் தொடங்கி பக்கிங்காம் வரை (உரைநடை-1993) எனக் கவிஞரின் பல நூல்களைப் படித்தேன்.

அய்யா 'இலக்கிய வீதி' இனியவன் அவர்களின் நட்புக்கரம் பற்றிய பின்னர், கவிஞர் தாராபாரதியைப் பற்றிக் கூடுதலாகத் தெரிந்துகொள்ளத் தொடங்கினேன். நண்பர், கவிஞர் கவிமுகில், தாராபாரதியை மிகவும் நேசிக்கும் தாசனாக இருப்பதைக் கண்டுகொண்டேன். கவிமுகிலுடனான உரையாடல்களில் தாராபாரதியின் கவிதை வரிகளை அவர் சொல்லாமல் ஒருநாளும் முடிந்ததில்லை. கவிஞர் மலர்மகன் (துரை. சீனிவாசன்) அவர்களுடனான நட்பும் எனக்குக் கிட்டியது. கவிஞாயிறு தாராபாரதியின் சகோதரர்தான் கவிஞர் மலர்மகன் என்பதறிந்தபோது மிகவும் மகிழ்ந்தேன்.

1999இல் புதுக்கோட்டையிலிருந்து வந்தவாசிக்கு நான் குடிமாறி வந்தேன். திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அருகேயுள்ள குவளை எனும் கிராமத்தில் பிறந்தவர் கவிஞர் தாராபாரதி என்பதை மிகத் தாமதமாகத்தான் நான் தெரிந்துகொண்டேன். கவிஞரை அவர் பிறந்த மண்ணுக்கே அழைத்துவந்து பாராட்ட வேண்டுமென்கிற ஆவல் எனக்குள் எழுந்தது. உள்ளூர் நண்பர்கள் சிலரோடும் கலந்து அதற்கான திட்டமிடலில் இருந்தபோதுதான் அந்தப் பேரிடி வந்து தாக்கியது.

2000ஆம் ஆண்டின் மே 13ஆம் தேதியன்று கவிஞர் தாராபாரதி இந்த மண்ணுலக வாழ்விலிருந்து விடைபெற்றார் எனும் செய்தி என்னை நிலைகுலைய வைத்தது. ஆகா... ஒரு மகத்தான எழுச்சிக் கவிஞரை இவ்வளவு விரைவாகக் காலம் எடுத்துச்சென்று விட்டதே என்று மனம் கலங்கினேன்.

ஆனாலும் காலத்தின் பக்கங்களில் என்றென்றும் அழியாத கல்வெட்டு வரிகளாய்ப் பொதிந்திருக்கும் கவிஞர் தாராபாரதியின் கவிதை வரிகளை யாராலும், எதனாலும் அழித்துவிட முடியாது என்பது அந்தக் காலத்திற்கும் தெரிந்த ஒன்றுதானே..!

கல்விப்பணியைத் தேசப் பணியாகவும், கவிதைப்பணியை நேசப்பணியாகவும் செய்துவந்த கவிஞர் தாராபாரதியின் இயற்பெயர் இராதாகிருஷ்ணன் என்பதாகும். 1947ஆம் ஆண்டு பிப்ரவரி 26 அன்று துரைசாமி – புஷ்பம் அம்மாளின் மகனாகப் பிறந்தார். இயற்பெயரில் முன்பாதியைத் திருப்பிப்போட்டு, அதில் தனது கவிதை ஆசானான பாரதியின் பெயரையும் இணைத்துக்கொண்டு 'தாராபாரதி'யானார்.

பிறந்த ஊரான குவளை கிராமத்தில் தொடக்கக் கல்வியைக் கற்றவர், கீழ்க்கொடுங்காலூரில் உயர்நிலைக் கல்வி பயின்றார். இராணிப்பேட்டை மற்றும் சைதாப்பேட்டையில் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படித்தார். பி.ஏ. (வரலாறு), எம்.ஏ. (தமிழ்), பி.எட்., பட்டங்களைப் பெற்றார். மைசூர் சென்று ஊனமுற்றோர் சிறப்புப் பயிற்சியையும் பெற்றார்.



'பதினாறு வயதுமுதலாகத் 'தாரா

பாரதி'க்குப் பாட்டெழுதும் பயிற்சி உண்டு!

நதிநீரை அதன்கரைகள் அறியும்; இந்த

நண்பர்கவித் திறமையைநான் அறிவேன்!'

- என்று உவமைக்கவிஞர் சுரதா அவர்களால் பாராட்டப்பெற்ற பெருமையுடையவர் கவிஞாயிறு தாராபாரதி.

கல்லூரியில் படிக்கும்போதே 1976இல் கவிதைப் போட்டியில் முதல் பரிசினைப் பெற்றார். கல்லூரிக் கட்டுரைப் போட்டியில் வெள்ளிப் பதக்கப் பரிசினை வென்றார்.

இல்வாழ்க்கைத்துணையாக 22.08.1974 அன்று சந்தானலெட்சுமியின் கரம் பிடித்தார். இந்தத் தம்பதியினர் விவேகானந்தன், லோகுதுரை, ஆண்டாள் என்ற மூன்று மக்கட்பேறு பெற்றனர்.

34 ஆண்டுகாலம் சிறப்பான முறையில் ஆசிரியப் பணியைச் செய்த கவிஞர் தாராபாரதிக்கு, 2000த்தில் தமிழக அரசு டாக்டர் இராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருதினை வழங்கிக் கௌரவித்தது.

அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்திலுள்ள சித்திரக்கூடம் பள்ளியிலும், காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்திலுள்ள பரனூர் பள்ளியிலும், கூடுவாஞ்சேரியிலுள்ள காமராசபுரம் பள்ளியிலும் தனது கல்விப்பணியை ஆற்றினார். கவிஞர் பணியாற்றிய இந்த மூன்று பள்ளிகளையும் ஒன்றியத்தின் சிறந்த முன்மாதிரிப் பள்ளிகளாக மாற்றியதில் கவிஞரின் பங்கு முதன்மையாக விளங்கியது.

கல்விப்பணிகளுக்கிடையிலும் கவிஞரின் கவிதைப் பணிகளும் இடையறாது தொடர்ந்துகொண்டேயிருந்தன. தேர்ந்த வார்த்தைகளைக்கொண்டு கவிஞர் படைத்த




கவிதைகள் அத்தனையும் வாசகர் தோள்களில் கவி மாலைகளாக அணி சேர்த்தன.

**'வெறுங்கை என்பது மூடத்தனம் – உன்**

**விரல்கள் பத்தும் மூலதனம்!**

**கருங்கல் பாறையும் நொறுங்கிவிழும் - உன்**

**கைகளில் பூமி சுழன்று வரும்...'**

- என்று படிப்பவர் நெஞ்சினை நெம்புகோல் வரிகளால் நிமிர வைத்த பெருமகனார் கவிஞாயிறு தாராபாரதி.

**'விழிவிழி உன்விழி நெருப்புவிழி - உன்**

**விழிமுன் சூரியன் சின்னப்பொறி'**

- என்று காற்றின் திசைகளெங்கும் தன் கவிப்பொறியைப் பறக்கவிட்டார்.

**'தோள்கள் உனது தொழிற்சாலை - நீ**

**தொடுமிட மெல்லாம் மலர்ச் சோலை!**

**தோல்விகள் ஏதும் உனக்கில்லை - இனி**

**தொடுவானம்தான் உன்எல்லை!'**

- என்றெழுதி, முயற்சிகளின் எல்லைக்கோட்டைத் தொடுவானமாக உயர வைத்தார் உயரிய சிந்தனையாளரான தாராபாரதி.

**'விரக்தி யென்னும் சிலந்தி வலைக்குள்**

**வேங்கைப் புலிநீ தூங்குவதா? - நீ**

**இருட்டைக் கிழிக்கும் வெளிச்சக் கீற்று**

**எங்கே கிழக்கெனத் தேடுவதா?'**

- எனக் கேள்விகளால் இளைஞர்களின் இதயங்களில் வேள்வித்தீயை மூட்டினார்.

**'எத்தனை உயரம் இமயமலை! – அதில்**

**இன்னொரு சிகரம் உனது தலை'**

- என்று இளைஞர்களின் தலைகளை இமயம் கடந்து, வானம் தொட இலக்கு நிர்ணயித்தார்.

**'நெஞ்சக் கதவைத் திறந்துவிடு;**

**ஒரு நேசக் காற்று வீசட்டும்...'**

- எனத் தோழமைக்காற்று மனித உள்ளங்களைத் தொட்டுத் தாலாட்ட வேண்டுமென்கிற பெருவிருப்பத்தைத் தன் கவிதைகளால் பதியமிட்டார்.

**'மூலையில் கிடக்கும் வாலிபனே - தினம்**

**முதுகில் வேலையைத் தேடுகிறாய்!**

**பாலை வனம்தான் வாழ்க்கையென - வெறும்**

**பல்லவி எதற்குப் பாடுகிறாய்?'**

- எனச் சோம்பிக் கிடக்கும் இளைய தலைமுறையைத் தன் கனல் தகிக்கும் வரிகளினால் தட்டியெழுப்பினார்.

இளைய தலைமுறையைத் தனது கவிதை வரிகளின் வழியே வீறுகொண்டு எழ வைத்த கவிஞாயிறு தாராபாரதி, தன் முன்னோடிகளையும் கவிதைகளில் கொண்டாடத் தவறவில்லை.

வள்ளுவரைப் பற்றி எழுதுகையில் -

***'தாய்ப்பால் குடிக்காமல்***

***தமிழ்ப்பால் குடித்தவன்நான்;***

***வாய்ப்பாலாய் முப்பால்***

***வார்த்தவனை, வணங்குகிறேன்!'***

***- என்று வணங்கினார்.***

***மகாகவி பாரதியைப் பாடுகையில் -***

***'பலரது எழுச்சிவெறும்***

***பள்ளி எழுச்சியெனில்,***

***புலவனே, உன்எழுச்சி***

***புதிய 'படையெழுச்சி!''***

- என்று பாரதியின் எழுச்சியைக் கம்பீரப்படுத்தினார்.

***'விதியற்று வெளுத்திருந்த***

***விதவைப்பெண்ணின்***

***வெறும் நெற்றி யில்நீயே***

***பொட்டு வைத்தாய்!'***

- என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் பெருமையைப் போற்றினார்.

மகாத்மா காந்தியைப் பற்றிய கவிதையில்

***'கையேற் றேங்கிய அன்னைக் காகக்***

***கைராட் டையில் நூல்நூற் றவன்நீ!***

***பாதிநூல் தாய்க்குச் சேலையாய் ஆனது;***

***மீதிநூல் கொடிக்குச் சீலையாய் ஆனது!'***

- என்று கவிதை நூலால் வடம் பிடித்தார்.

***'ஒழுக்கம் மானம் பண்பா டென்று***

***உரைக்கும் வள்ளுவர் குறள்நாடி;***

***அழுக்கை விலக்கிக் கிழக்கை வெளுத்தது***

***அதுதான் பெரியார் வெண்தாடி!'***

- என ஈரோட்டில் பிறந்த பகுத்தறிவுப் பகலவன் பெரியாரின் பெருமையைப் பகிர்ந்தார்.



**‘முற்பட்ட சாதிகட்கே**

**மூலதனம் மூளையென்று**

**கற்பித்த தப்பிதத்தைக்**

**களைந்தெறிந்த மாமனிதர்!’**

- என்று மாமேதை அம்பேத்கரின் சிறப்பினை எடுத்துக்காட்டினார்.

‘இது எங்கள் கிழக்கு’ நூலில் கவிஞாயிறு தாராபாரதி எழுதியிருக்கும் ‘வானம் திறக்கும் சூரிய வாசல்’ எனும் முன்னுரையில் இப்படியாக எழுதியிருப்பார்;

“எட்டயப்புரத்துக் கவிஞன், தன் எழுதுகோலில் விட்டுவைத்த மையின் மிச்சத்தை, என் எழுதுகோலில் நிரப்பிக்கொண்டு எழுதுகிறேன்.”

“எளிமை எனக்குப் பிடிக்கும்; என்னைப் போலவே என் கவிதைக்கும்! மனித நேயத்தின்மீது என் எழுதுகோலுக்கும் விருப்பம்; அதுபோலவே எனக்கும்!” (கவிஞாயிறு தாராபாரதி கவிதைகள் – பக்கம்: 18) என்று தன்னைப் பற்றிய சுய அறிமுகமாகக் கவிஞர் எழுதியிருக்கும் வரிகள் அத்தனையும் சத்தியமானவை என்பதைக் கவிஞரது கவிதைகளை வாசிக்கும் அனைவருமே உணர்ந்துகொள்ளலாம்.

2010ஆம் ஆண்டில் சமச்சீர் கல்விக்கான புதிய பாடநூல்களை உருவாக்கும் குழுவில் நானும் என் இலக்கிய இணை வெண்ணிலாவும் இருந்தோம். ஆறாம் வகுப்பு தமிழ்ப் பாடத்தில் கவிஞாயிறு தாராபாரதியின் ‘வெறுங்கை என்பது மூடத்தனம்’ எனும் கவிதையை வைக்க வேண்டுமென்று கூறினேன். குழுவினரும் ஏற்று, மிகச் சிறந்த முறையில் அழகான படத்துடன் அந்தக் கவிதையும் பாடநூலில் இடம்பெற்றது. இன்றைக்கும் பள்ளி மாணவர்களின் நாவில், அந்தக் கவிதை வரிகள் உச்சரிக்கப்படுகையில் என் உடல் மெல்லச் சிலிர்க்கும். கவிஞாயிறுவின் மகத்தான கவிதையொன்றினை மாணவர் மனங்களில் சேர்த்துவிட்ட மனநிறைவு எனக்குள்.

பூமியைத் திறக்கும் பொன்சாவி (2001), இன்னொரு சிகரம் (2002), வெற்றியின் மூலதனம் (2004), கவிஞாயிறு தாராபாரதி கவிதைகள்



(2007), திண்ணையை இடித்துத் தெருவாக்கு, விரல்நுனி வெளிச்சங்கள் எனப் பல நூல்கள் கவிஞரின் மறைவுக்குப் பிறகும் வெளிவந்து, தமிழ் வாசகர்களால் பெரிதும் வரவேற்பைப் பெற்றன. 2010-2011ஆம் ஆண்டில் தமிழக அரசு கவிஞாயிறு தாராபாரதியின் படைப்புகளை நாட்டுடைமையாக்கியது.

கவிஞாயிறு தாராபாரதியின் கவிதைகளை வாசிக்கையில் நம்பிக்கையும் நமக்குள் ஒரு சுய ஊக்கமும் பிறக்கும் என்பது திண்ணம். கவிஞரெழுதிய சிறு கவிதைகளிலும் ஏதேனுமொரு அழுத்தமான செய்தியை, சிந்தனையை உள்வைத்து எழுதும் சிறப்பினைக் காண முடிகிறது.

கடவுளுடன் நேர்காணல், இன்னும் ஒரு சுதந்திரப் போர் ஆகியன கதைத்தன்மையுடன் கூடிய நீண்ட கவிதைகளாக நம் கவனத்தை ஈர்க்கின்றன. அதிலும் குறிப்பாக, ‘கவரிமான் சாதி’ என்றொரு கவிதையில், தமிழ்ப் புலவர்கள் எந்நிலையிலும் தங்களது சுயமரியாதையை இழக்காத பண்பினைச் சிறுசிறு வரிகளில் தொட்டுக்காட்டியிருப்பார் கவிஞர். இந்த

ஒவ்வொரு வரிக்குப் பின்னும் ஒரு கதை இருக்கிறது, அதைத் தேடிப் படியுங்கள் எனச் சொல்லாமல் சொல்லியிருக்கும் இந்தக் கவிதைக்குள் கலந்திருக்கும் கதைக் கவிதையை வாசிப்போமா..!

**‘கவரிமான் சாதி யாகக்**
**கவிஞர்கள் வாழ்ந்த தால்தான்**
**கவரிகள் வீசி அந்நாள்**
**காவலர் போற்றி நின்றார்!**
**பண்பாடும் ஆசிரி யப்பா**
**பாதத்தில் தலையை வைத்து**
**வெண்பாமேல் வெயில் படாமல்**
**வெண்கொற் றக்குடை பிடித்தார்!**
**நெற்றிக்கண் திறந்த போதும்**
**நேரெதிர் நிமிர்ந்து நின்று**
**குற்றமென் றான்நக் கீரன்**
**குனிந்தானா கடவு ளுக்கு?**
**கொற்றவன் தவற்றைக் கோவூர்**
**கிழார் சுட்டிக் காட்டவில்லை?**
**பெற்றதோர் பரிசி லுக்குப்**
**பெருஞ்சித் திரன்தாழ்ந் தானா?’**

இந்தச் சின்னஞ்சிறு வரிகளுக்குள்தான் எத்தனையெத்தனை தமிழ்ப் புலவர்களின் கதைகள் மேற்கோளாகச் சுட்டப்படுகின்றன. மேலும், கவிஞர் தொடர்கிறார்;

**‘மன்னவன் மதிப்பைப் பெற்றார்**
**மாங்கு மருதன் – நேரில்**
**தென்னவன் தூதாய்ச் சென்று**
**திருத்தங்கள் செய்தார் அவ்வை!**
**இறைவனைச் சூடச் சாடி**
**எழுதிற்றே வள்ளுவன் கை!**
**துறவிதான் இளங்கோ – ஆனால்**
**துறந்தாரா தமிழ் வீரத்தை?**
**பரிசிலைப் பெறும் பொருட்டு**
**பாயிரம் யாத்த தில்லை;**
**அரசினை வாழ்த்திப் பாடி**
**அணிந்துரை எழுத வில்லை!**
**பகைவென்ற வீரவாளை**
**பனையோலை வென்ற காலம்!**
**மகுடத்திற் காக யாரும்**
**மகுடிகள் ஊதவில்லை!**
**உவமானம் கவிதைக் கென்றால்**
**உயிர்மானம் கவிஞர்க் கன்றோ?**
**கவிதைக்கும் கற்பு வேண்டும்;**
**காசுக்கு விற்க வேண்டாம்!’**

- என்றெழுதிய கவிஞர், தமிழ்க் கவியுலகில் என்றைக்கும் இலட்சியத்திற்காக எழுதும் கவிஞர்கள் இருக்கிறார்கள் என்கிற உறுதிப்பாட்டோடு கவிதையை இவ்வாறு முடித்துள்ளார்.

**‘என்றைக்கும் மாறி டாமல்**
**எழுந்தநாள் கொள்கையோடு**
**இன்றைக்கும் இருக்கின் றார்கள்**
**இலட்சியக் கவிஞர் சிலபேர்!**
**இனமானம் காத்து நிற்கும்**
**எழுவானச் சுடர்கள்; இந்தத்**
**‘தனித்தன்மைக் கவிஞர்’ களைநான்**
**தலைமீது தாங்கிக் கொள்வேன்!’**

இளைஞர்களின் மன வானில் என்றும் சுடர்விடும் எழுச்சிமிகு வரிகளைத் தந்துள்ள கவிஞாயிறு தாராபாரதியின் கவிதைகளைத் தமிழர்களும், தமிழ் மொழியும் என்றென்றும் தங்களின் தலைமீது தாங்கிக்கொண்டிருக்கும் என்பதே காலம் நமக்குச் சொல்லும் உண்மை.

- இன்னும் சொல்வேன் ■

● கவிஜி

# வாழ்வின் பெரும் முடிச்சுகள்




## திரைப்படம் : CAST AWAY

ஒரு விபத்து.. வாழ்வின் அடுத்த புள்ளியைச் சற்று நகர்த்திவிட்டுச் சென்றுவிடுகிறது. கதைநாயகன் விமான விபத்தில் கடலுக்குள் விழுந்துவிடுகிறான். அங்கிருந்து பாதுகாப்பு உபகரணங்கள் மூலமாக ஒருவழியாகத் தப்பி ஒரு தீவுக்குள் மாட்டிக்கொள்கிறான். நான்கு வருடங்களுக்கு மேல் அவன் தனிமையில் இருக்கிறான். தன்னோடு விழுந்த வாலிபால் ஒன்றிற்குத் தன் குருதியால் முகம் வரைந்து அதனோடு பேசுகிறான். அது காணாமல் போகும் ஒவ்வொரு முறையும் தன் குழந்தை காணாமல் போனதைப் போலப் பரிதவித்துப் பிதற்றி அழுது கதறுகிறான். யாருமற்று இருக்கையில் டிவியை ஓடவிட்டுக்கொண்டே வேலை செய்யும் நிலைக்கு ஒப்பான நிலை அது. தனியாகப் பேசிப் புலம்புகிறவர்களை நாம் வேறு மாதிரி பார்க்கிறோம். ஆனால் அது அப்படி இல்லை. நிஜமாகவே அவர்களுக்குப் பேச ஆளில்லை. அவர்களைக் கேட்க காதில்லை. அதன் நீட்சியின் எதிரொலியே தானாகப் பேசிக்கொள்ளுதல். அதற்கும் முகப்பூச்சு பூசவே தாங்களாகவே ஒரு உருவத்தை உருவாக்கி அதனோடு பேசுவது. அப்படித்தான் அங்கும் அவன் செய்கிறான்.

அவன் விமானம் ஏறுவதற்குச் சற்றுமுன் தன் காதல் மனைவி கொடுத்த கடிகாரத்துடன் இணைக்கப்பட்ட அவளின் புகைப்படத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கிறான். அதுவும் அவனைப் பார்த்துக்கொண்டே இருக்கிறது. அது மட்டும்தான் இந்தத் தனிமையின் நம்பிக்கை. மிச்சத்தின் துளி.

அந்தப் புகைப்படத்தின் சாயலாகவே அவன் வசிக்கும் குகையில் சித்திரம் தீட்டிவைக்கிறான். அவன் விமானத்திலிருந்து கீழே விழுந்த சில நாட்களுக்குள் ஒரு பிணம் மிதந்துவருகிறது. அது அவன் வந்த விமானத்தின் ஓட்டுநரின் பிணம். அதை இழுத்துக்கொண்டு வந்து அழுதபடியே புதைக்கிறான். புதைக்கும் முன் அந்தப் பிணத்தின் பேண்ட் பாக்கட்டில் இருந்து பர்ஸை எடுத்துத் திறந்து பார்க்கிறான். அதில் அவரின் குடும்பப் புகைப்படம் இருக்கிறது. அவரின் வருகைக்காகக் காத்திருக்கும் புன்னகை அதில் தவழ்ந்துகொண்டிருக்கிறது. இறுகிய மனதோடு... கலங்கிய விழிகளோடும் கொப்பளிக்கும் முணங்கலின் ஒலியோடும் அந்தப் புகைப்படத்தை அந்தப் பிணத்தின் சட்டைப் பாக்கெட்டில் வைத்து மண்ணைப் போட்டு மூடுகிறான். சாம்பல் ஊறிய உடல்

கால்களை மடக்கிக்கொண்டு மண்ணுக்குள் மறைந்து போகிறது. யாருமற்றுச் சாவதுதான் கொடுமையின் ஜனனம். அது நிகழ்கிறது. எதிரே இருக்கும் பாறையில் புதைக்கப்பட்டவரின் பெயர் பிறப்பு இறப்பை எழுதிவைக்கிறான். அவரின் ஐடி செவ்வக அட்டையில் சாட்சியாகிறது.

தகவல்தொடர்பு... கற்காலங்களில் இப்படித்தான் இருந்தது.

ஒரு செய்தி பின்வரும் காலத்துக்கோ அடுத்துவரும் யாருக்கோ தெரிவிக்க இந்தக் குறியீடுகள் பயன்பட்டன. மனித இனம் இடம் விட்டு இடம் பெயர்ந்துகொண்டே இருக்கிறது. காலத்தின் நகர்தலுக்காக அப்படி நகர்ந்தாலும்... தங்கிவிட்ட கால இடத்தின்மீது இனம் புரியாத தீராப் பற்று மேலோங்குவதை இந்தப் படத்திலும் காண்கிறோம். தட்டுத் தடுமாறி ஒருவழியாக மரங்களை இணைத்து... படகு போலத் தெப்பம் ஒன்றைக் கட்டி அதில் அந்தத் தீவை விட்டு எப்படியாவது தப்பிவிட வேண்டும் என்ற முடிவோடு செல்கையில்... தூரத்தில் தன்னை விட்டு நகர்ந்துகொண்டேயிருக்கும் தீவை ஆசையாக அசை போட்டபடி பார்க்கும் நாயகனுக்குச் சொற்கள் இல்லாமல் போகின்றன.

சொல்லவும் தோன்றாத மொழி நடை அது.

தீவுக்கு வந்த புதிதில் மீன் பிடிக்கத் தெரியவில்லை. தேங்காய் உடைக்கத் தெரியவில்லை. தீயை உருவாக்க அவன் படும் பாடு.. அப்பப்பா சொல்லி மாளாது. அந்தக் காட்சி முடியும் வரை மனதுக்குள் ஒரு தீவு தலையில் எரிந்து கொண்டிருப்பதை உணர முடியும். தப்பி வீடு வந்த பிறகு லைட்டரில் தீயை ஆன் பண்ணி அர்த்தத்தோடு பார்ப்பான். அது நாம் எதையெல்லாம் கவனத்தில் கொள்ளவில்லையோ அது எல்லாமே சேர்ந்துதான் இந்த வாழ்வில் நம்மைக் கட்டியமைக்கின்றன என்பதைப் புரியவைக்கிறது.

பிறகு லாவகமாக மீன் பிடித்துத் தின்பதாகட்டும். தானாகவே அந்த வாலிபால் பொம்மையிடம் பேசிக்கொண்டும் முணங்கிக்கொண்டும் ஒவ்வொரு வேலையும் செய்வதாகட்டும். இந்தத் தருணங்களின் அர்த்தம் சற்றே கோணல்மாணலாக எனக்குள் சிந்தனையைக் கிளறிவிட்டது. இவ்வுலகில் மனிதன் தனித்திருக்கவே முடியாது. அவன் பேசுவதற்குத் துணை வேண்டும். அவனைக் கேட்பதற்காவது துணை வேண்டும். பரிமாற்றம் இல்லாமல் பரிணாமம் கண்டிப்பாக இல்லை.

உலகை விட்டு ஒதுங்கி இருப்பது அத்தனை சுலபமானது இல்லை. சொல்லப்போனால் அது ஒப்பனைகளால் சூழப்பட்டது.

நான் தனித்திருக்கிறேன் என்று இனி யார் சொன்னாலும் மெல்ல நகைத்துவிட்டுச் சென்றுவிடலாம். இவ்வுலகில் யாரும் தனித்திருக்க முடியாது. ஒரு மனிதனின் தயவால் மற்றவன்.. அவன் தயவால் மற்றவன். இப்படி ஒரு மனிதச் சங்கிலி கண்ணுக்குத் தெரியாமல் இங்கே பயணிக்கிறது. இந்தக் கோணத்தில் சிந்தித்ததில் கண்டிப்பாக சாதி... மானம்... கௌரவம்... ஒரு மண்ணும் கிடையாது. அரிசியும் குழம்பும் தட்டுக்கு வருவதற்கு எத்தனைக் கைகளும் கால்களும் மனதுகளும் மூளைகளும் சேர வேண்டி இருக்கிறது.





தனித்திருக்கையில் பசித்திருக்கையில் விழித்திருக்கையில்.. இவ்வுலகம் வேறு மாதிரி சுழலுகிறது.

கரையோரத்தில் இருக்கும் அலைகளைத் தாண்டுவதுதான் கடினம் என்ற அறிவியல் ஞானத்தை அவன் அங்கே கற்றுக்கொள்கிறான். நடுக்கடல் மௌனம் நிரம்பியவை. முதல்முறை கொண்ட முயற்சியில் அலை அடித்து நொறுக்கிவிடுகிறது. பிறகு முதிர்ந்த யோசனைக்குப்பின் அனுபவத்தின் சாயலோடு அவன் கரையை விட்டுக் கடலுக்குள் நுழைகிறான். எல்லாம் முடிந்தது. இனி ஒன்றுமில்லை என்று போராடிச் சோர்ந்து துவளுகையில் அவனை விட்டு அந்தப் பொம்மை கடலுக்குள் விழுந்துவிடுகிறது. தன்னோடு நான்கு வருஷம் எல்லாத் துக்கங்களையும் பகிர்ந்துகொண்ட அதைக் காப்பாற்ற அவன் கடலுக்குள் நீந்திக்கொண்டே தடுமாறும்போது அன்பின் வெளிப்படுதலுக்குச் சுவர்கள் தேவை இல்லை, சித்திரங்கள் தாங்களாகத் தானாக முளைத்துவிடும் என்று அறிந்தேன்.

அன்பைப் பெறத்தான் அடையாளங்கள் வேண்டும். தருவதற்கு அடையாளங்கள் தேவை இல்லை. ஆள்கூட தேவை இல்லை. அவன் ஒரு கட்டத்தில் தெப்பத்துக்குத் திரும்புகிறான். அழுதுகொண்டே மயங்கிவிடுகிறான். அவன் முகத்தை மிட் ஷாட்டில் காட்டிக்கொண்டு திரை இருக்க, திரைக்குள் பா.....ர்ம் எனச் சத்தமிட்டுக்கொண்டே ஒரு பெருங்கப்பல் நுழைகிறது. நமக்கு 'அப்.........பாடா' என்றிருக்கிறது. கடலை விட்டு வெளியே வருகையில் அவன் வீட்டைப் பிரிவது போல பாவனைகளால் சூழப்படுகிறான். கடத்திக்கொண்டு போனவன்மீது காதல் வரும் மனோதத்துவம் இது. தீவும் கடலும் அவனைக் கொல்லக் காத்திருந்தபோதும் அதன்மீது எதுவும் புரியாத பிணைப்பு வந்துவிடுவதில்.. ஆதிமனிதனின் வாசம் நமக்குள் வீச ஆரம்பிக்கிறது.

வீட்டுக்கு வந்து கதவைத் தட்டினால் நாயகன் இறந்துவிட்டான் என நினைத்து மனைவி இரண்டாவது திருமணம் செய்துகொண்டு ஒரு குழந்தையோடு இருக்கிறாள். நாயகன் என்ன செய்வதெனத் தெரியாமல் பாவமாய் நிற்கிறான். மனைவியின் கணவன் பதில் உரைக்க முடியாமல் தடுமாறுகிறான். தமிழ்ப்படமாக இருந்தால் திரை நனைந்திருக்கும். அத்தனை சோகமயமானது அந்தக் காட்சி. அதிர்ந்துகொண்டே இருக்கும் இதயங்களில் இன்னும் நான்கு சுவர்கள் கீறப்படுகின்றன.

“வசந்த ராகம்” என்ற தமிழ்ப்படம் கூட இதே கதையில்தான் வந்தது. எல்லாரும் அவன் திரும்பி வந்ததற்குச் சந்தோசப்பட்டார்கள். அவன் மட்டும் துக்கப்படுகிறான். தன் காதல் மனைவிக்கு இப்படி ஒரு சங்கடத்தைக் கொடுத்துவிட்டோமே என்று தானாகக் குமைந்து தவிக்கிறான்.. அழுகிறான்.. அரற்றுகிறான். துக்கத்தின் தோளில் தானொரு செத்த பறவையைப் போல அமர்ந்திருக்கிறான்.

அன்றிரவு காதல் துரத்த... வீட்டுக்கே சென்று காலிங் பெல்லை அழுத்த முற்படுகையிலேயே அவள் கதவைத் திறக்கிறாள். மெல்ல அணைத்துக்கொள்கிறார்கள். தலையைத் துவட்டச் சொல்லி டவல் கொடுத்துவிட்டுக் காபி போட்டு வர உள்ளே செல்கிறாள். அவன் அந்த வீட்டைச் சுற்றிச் சுற்றிப் பார்க்கிறான். இப்போதும் தீவில் இருப்பது போலத்தான் உணர்கிறான். குழந்தையின் புகைப்படத்தைப் பார்த்துக்கொண்டே குழந்தை அழகு என்று சொல்லி `இன்னும் நிறைய குழந்தைகள் பெற்றுக்கொள்` என்கிறான். அவனுள் ஒரு குழந்தை வீறிடுகிறது.

“சரி கிளம்பறேன்...” என்று நான்கு வருடம் தன்னோடு தீவில் இருந்து தன்னைச் சோர்ந்து போகாமல் காத்த அவளின் புகைப்படத்தை அவளிடமே தந்துவிட்டு... அவள் இத்தனை நாள் பாதுகாத்து வைத்த தன் காரை எடுத்துக்கொண்டு மழைக்குள் ஒரு தீவைப் போல நகர்கிறான். முன்னாள் காதல் மனைவி உடைந்து நொறுங்கி உள்ளார்ந்த சிக்கலின் செயலியின் நடுக்கத்தில் நிற்கிறாள். கார் தெரு வளைவு தாண்டிவிட்டது. இனி முடியாது என.. அவன் பெயரைச் சொல்லிக் கத்திக்கொண்டே மடைதிறந்த அழுகையோடு வீதிக்கு ஓடிவருகிறாள். இங்கிலீஸ்க்காரனுக்குக் காதலும் கல்யாணமும் இரண்டாம் பட்சம்தான் என்று பித்துத்தனமான 90களின் கற்றல் அடித்து நொறுக்கப்படுகிறது. இவ்வுலகில் எங்கும் காதலே ஜெயம். காதலே நிதர்சனம்.

அவள் கூப்பிடும் ஒரே சத்தம். அவன் கார் வேகமாய்ப் பின்னால் வந்து நிற்கிறது. இறங்கி ஓடிச் சென்று அவளை வாரி அணைத்து இதழும் இதழும் புனைந்து மாறிமாறி அன்பை முத்தமாக்குகிறார்கள். அழுது கட்டிக்கொண்டு பிரிய மறுக்கிறார்கள். இரண்டு நாட்களாக மூடிக்கொண்டே இருந்த மேகம் பெருமழையைப் பொழிந்தது போல இருக்கிறது.

அவள் “நான் உன்ன லவ் பண்றேன்... என்ன கூட்டிட்டுப் போ”னு சொல்லி இன்னும் இறுக்கிக்கொள்கிறாள். மழை சாட்சியாய்ப் பிழிகிறது. மனைவியை யாரோவாகக் காதலிக்கும் இந்த நிலை அவனின் பெருந்துக்கமென அவள் மேல் கவிகிறது.

அவளைக் காருக்குள் அமரவைத்துக் காரைக் கிளப்புகிறான். அந்தக் கார் மீண்டும் அவளின் வீட்டுக்கே செல்கிறது. அவள் இரண்டாவது கணவனோடு குழந்தையோடு இருப்பதுதான் சரி என்று சொல்லாமல் சொல்லி அவளை இறக்கிவிட்டு மீண்டும் ஒருமுறை “காதலிக்கிறேன்” என்று சொல்லி அவன் சென்றுவிடுகிறான். காதல் அங்கே கோபுரமாய்ச் சரசரவென வளர்ந்துநிற்பதை உணர முடிகிறது.

கடலில் விழுகையில் தன்னோடு விழுந்த லாஜிஸ்டிக்ஸ் பொருள்களை எல்லாம் தீவில் தேவைக்குத் தகுந்தாற்போல உபயோகப்படுத்திவிட... ஒரே ஒரு பார்சலை மட்டும் பிரிக்காமல் பாதுகாத்திருக்கிறான். அதை இப்போது உரிய முகவரிக்குக் கொண்டு சென்று கொடுக்க முனைகிறான். கதவு தட்டுகிறான். வீட்டில் யாரும் இல்லை. அதை வாசலில் வைத்து, “இதுதான் என் உயிரைக் காப்பாற்றியது” என்று ஒரு கடிதமும் எழுதி வைத்துவிட்டுத் திரும்புகிறான். அதற்குள் என்ன இருக்கிறது என்று யாருக்கும் தெரிவதில்லை.. நாயகன் உள்பட.

வாழ்வின் பெரும் பெரும் முடிச்சுகள் இப்படித்தான் போடப்படாமலே இருக்கின்றன.

அவன் வெளி ஒரு தீவால் சூழப்பட்டது போல இருக்கிறது. அங்கே அவன் ஓர் ஆதிமனிதனாக... தனியனாக வாழத் தொடங்குகிறான். நாமும் கூட அந்தத் தீவுக்குள் இப்போது மாட்டிக்கொள்கிறோம்.

அது பிடித்திருக்கிறது. ■

## பதின்மத்தைத் தொட்ட தொன்மம்

நள்ளிரவைக் கடந்தும்
மூட மறுக்கும் கண்களை
இறுக்க மூடிய மூடலில்
அதுவாய்ப் பளீரிடுகிறது
பிரகாசமான இருள்.

கால காலத்தின் பக்கங்களில்
விரிந்து விரிகிறது பிம்பம்.

தெள்ளத் தெளிவாய்த் தென்படும்
பதிந்த காட்சிகளை
மூத்த மரத்தின் கிளைகளில்
வந்தமர்ந்து செல்லும் பறவையின்
நட்சத்திர வடிவிலான தடத்தில்
தொன்மத்தின் தடங்கள்.

பச்சையம் மிதக்கும் காற்றில்
இளைப்பாறுகிறது பதின்மம்.

நினைவு கொலுசை
வாங்கும் ஆழம் வரை இறங்க
கயிற்றில் தட்டுப்படும் அந்நாளை
சேதாரமற்று விலக்குகிறேன்
நிமிட நேரம் தொட்டுத் தடவிய
தலைமுறைக்கான பிம்பத்தை.

இறங்கியபோது இருந்த ஆர்வம்
வெளியேறுதலில் வெளியேறுகிறது.
மெல்லத் தடவிய ஆறுதலில்
அமைதியான அமைதியில்
ஓசையற்று நழுவிவிடுகிறது
ஆழம் தொட்ட
மேல் மட்டத்தின் நுனியை.

மிதக்கும் மேகமாய் நகரும்
நாளது இறுதி மணித்துளிகள்.
நள்ளிரவைக் கடக்கும் நேர் பாதையில்
பயணிப்பவர்களைச் சுமக்க
கிழக்கின் சூரியத் தேர்.

– துரை. நந்தகுமார்

•

அக்குளுக்குள்
சுருட்டித் திணித்த
துண்டைப் பிடுங்கியெடுத்து
விரித்துப் பார்த்தேன்,
அதில்
ஒரு தலைக் கட்டுக்கோ
இரண்டு அங்கவஸ்திரத்திற்கோ
உரித்தான நீளமிருந்தது.

– துளசி வேந்தன்

ஒரே படகில் புறப்பட்டவர்கள்
இருவேறு கரைகளில்
நிற்கிறார்கள்.
மீண்டுமொரு பயணத்தின்போது
சந்தித்துக்கொள்ள
முடியுமென்ற நம்பிக்கை
கை நழுவிப் பறக்கும் பலூன்
கிடைத்துவிடுமென்று
நம்பும் குழந்தையைப் போல்
அவர்களுக்குள்ளும்
அசைவாடிக் கொண்டிருக்கிறது
விரும்பிய பிரதேசத்தில்
இறங்க முடியாமல்
வலுக்கட்டாயமாய்
இறக்கிவிடப்பட்ட
காயங்களுடன் தவிக்கும்
இரண்டு கூடுகளுக்குள்
சிக்கிக்கொண்டு
ஆடும்
ஒற்றைப் பறவையின்
படபடப்புச் சத்தம் மட்டும்
ஆயுள் ரேகையின்
எல்லைவரை
முடிவின்றி
கேட்டுக்கொண்டேயிருக்கிறது...

– சந்துரு ஆர்.சி.

•

போட்டோ புடிச்சா
ஆயுசு குறைந்துவிடும்
என்று
அடிக்கடி சொல்லும்
அப்பத்தா
பேரன் பேத்திகளோடு
எடுத்துக்கொண்ட
புகைப்படங்கள்
வீடு முழுக்க
சுவற்றில் தொங்குகின்றன
இப்போது மட்டும்
ஆயுசு குறையாதா
என்று கேட்டால்..
கண்களில் நீர் கோர்க்க
மெல்லிய குரலில்
சொல்லும்
'மாத்துத் துணிக்கும்
மரக்கால் நெல்லுக்குமே
மல்லுக்கட்டிட்டு
வாழ்ந்தப்போ
போட்டோ புடிக்க
ஏது ராசா –
காசு......'?!

– அழ. இரஜினிகாந்தன்

•

அப்பா கொள்கைக்காய்
தீக்குளித்தார்..
அவருக்குத் தெரியாது
கொள்கைகள்
மாறிக்கொண்டே இருக்கும்
என்று..
நான் மீம்ஸ் போடுகிறேன்..
எனக்கும் தெரியாது
எதிரெதிர் நின்றவர்கள்
எல்லாம்
கூட்டணியென்ற பெயரில்
ஒரே வரிசையில்
அமர்வார்கள் என்று..
தலைமுறைகளாய்த்
தொண்டராக வாழும்
ஆசிர்வதிக்கப்பட்ட
குடும்பத்தில்
மகனுக்கு
என்ன வேலை
கொடுக்கலாம்.. என
யோசித்துக்கொண்டிருக்கிறேன்

– ஆனந்த குமார்

•

ஒவ்வொருமுறை தும்மும்போதும்
'நூறு ஆயுசு' என
நெகிழ்ந்துகொள்கிறாள் அம்மா.
அன்னிச்சையாய்த் தடவிக்கொள்கிறேன்
ஆயிரமாவது முறையாய்
வெட்டுண்ட சிறகுகளை...

– தீபிகா நடராஜன்

•

தினமும்
கடந்து செல்லும் மரம்தான்...
நெடுநெடுவென வளர்ந்திருக்கிறது
கிளை பரப்பியிருக்கிறது
தளிர் நிரம்பியிருக்கிறது
மொட்டு விட்டிருக்கிறது
பூத்திருக்கிறது
காய்த்திருக்கிறது
பழுத்திருக்கிறது
பிரதான சாலையின் நடுவே
இருக்கிறது.
இனி ஏதோவொரு கடவுளை
துணைக்கு நிற்க வைக்க வேண்டும்....

– தோழன் பிரபா

•

எல்லா அழுகையையும்
அடக்க வேண்டிய
அவசியம் இல்லை,
ஆனாலும்
குரல்வளையில் அத்தனை
பிடிவாதமாய் அடைத்து வைத்திருக்கிறேன்..
ஏந்தாத கரங்களுக்கு முன்
அழுதுவிடக் கூடாது என்ற
கர்வம்தான்..
பெரிதாய் வேறொன்றும் இல்லை.

– அனு பாரதி

• ப.தனஞ்ஜெயன்
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன், அன்பழகன்,



# கினையன்

வந்தவர்கள் அங்கு ஒலித்த மேள சப்தத்திற்கு ஏற்றவாறு உள்ளுக்குள்ளே ஆடி ரசித்தார்கள். அங்கு போடப்பட்டுள்ள நாற்காலியில் சிலர் அமர்ந்து பறை அடியை உள்ளுக்குள் வாங்கினார்கள். அது மனதிற்கு இதமாகவும் இருந்தது. ஏதோ இறப்பை உணர்ந்தவர்கள் போலத் தத்துவம் பேசினார்கள். எல்லாம் இந்த ஆறடி மண்தான் மிஞ்சும் என்றார்கள். போகும்போது என்ன மிஞ்சப்போவது சூத்துல இருக்கிற அரைஞாண் கயிற கூட விடறது இல்ல எனப் பேசினார்கள். இது மனதின் ஆட்டம்.

கினையன் தன் வாத்தியத்தை ஓங்கி ஓங்கி அடித்து ஆரவாரம் செய்தான். அவன் உடல் தாளத்திற்கு ஏற்றவாறு வளைந்து ஆடியது. சாராய வாடை அவன் மேல் கும்மென்று வீசியது. அது ஏனோ தெரியவில்லை.. அவன் உடலின் வணக்கம் மிகப்பெரிய கொடூரங்களைக் கண்டே காலம்காலமாய் வளர்ந்துள்ளது தெரிந்தது. யாராவது கொஞ்சம் மிடுக்காய் வேட்டி சட்டையோடு வந்தால் சாமி... என்று அப்படியே வளைந்து வணங்குவான்.

சவத்திற்கு மாலை எடுத்து வருபவர்களை வரவேற்றுப் பறையை அடியோ அடியென அடித்துப் பிணம் படுத்திருக்கும் இடத்திற்கு வாசல் வரை விட்டுவிட்டு, வருவான் கினையன். மாலையைப் பிணத்தின் மேல்

போட்டுவிட்டு வரும்வரை காத்திருந்து தலையை அவர்கள் முன் சொறிவான். "ஐயா சாமி ஏதாவது கொஞ்சம் பாருங்க…" என்பான். அவர்களும் ஏதாவது சில்லறையைக் கினையனுக்குத் தருவார்கள். அதை இரண்டு கைகளால் பெற்றுக்கொண்டு கும்பிடுவான்.

மீண்டும் வாத்தியத்தின் உள்நுழைந்து ஆடிக்கொண்டே அவன் நிலையாக நின்றிருந்த இடத்திற்கு வந்து வாசிப்பான். அவன் இடுப்பில் கட்டியிருந்த துண்டு அவிழாமல் அப்படியே இருந்தது. அவ்வளவு இறுக்கம்.

கினையன் அடிக்க அடிக்க, அந்த அடி வயதானவர்களிடம் ஒப்பாரிப் பாடலையும் கொஞ்சம் இளகிய நெஞ்சங்களிடம் கண்ணீரையும் கிளப்பிவிடும். எப்பொழுதும் பறை இசைக்கு என உடல் தனித்து ஏங்கிக் கிடக்கும். அதனால் மரணித்துக் கிடக்கிற மனிதனுக்கு நீண்ட நேரம் அஞ்சலி செலுத்துவது மரபாகிவிட்டது. பறையின் இறுதிச் சொல் நெருக்கமாக உடலை ஆனந்தமாக்கி உடலிலிருந்து உயிர் பிரிந்தவுடன் கொண்டாட்டமாக்கிவிடுகிறது அந்த நாளை.

வாசித்துக்கொண்டே இருந்தவனுக்குப் பசி அகோரமாக எடுத்தது. எழவு வீட்டிலிருந்தவர்கள் தன் வேலையைப் பார்ப்பதும் அதோடு தெரியாமல் சென்று சாப்பிட்டு வருவதும் கினையனுக்குத் தெரியும். சாப்பிட்டு வரும் பெரிய மனிதர்களை அப்படியே பார்ப்பான்.

"ம்.. அங்க பார்த்தயா சாமிவோ எல்லாம் சாப்பிட்டு வருதுவோ" என்று சொல்லுவான். கையில் வாசிக்கும் குச்சியோடு "சாமி பசி எடுக்குதுங்க" என்று தலையைச் சொறிந்தான்.

"இருடா கினையா, சேகண்டி வாசிக்கறவன பார்க்கப் போய் இருக்கிற ஆனந்தன் வரட்டும். வந்தவுடன் காசு வாங்கித் தரண்"என்றான் முத்து.

"சாமி நீங்க இருந்தாக் கொடுங்க" என்று கெஞ்சினான் கினையன். முத்து தருவதாக இல்லை.

"இவர்களெல்லாம் இப்படித்தான். நாம வாசித்துக்கொண்டே இருக்கவேண்டும். நாம மனிதர்கள்தானே. நமக்கும் வயிறு இருப்பதையும், பசி எல்லோருக்கும் ஒன்னுதானே என்பதையும் உணரவேயில்லை இதுவரைக்கும். இந்தப் பறையை எவ்வளவு வேகமாக அடித்தாலும் அவர்கள் காதில் நாம் மனிதர்கள் என்ற நினைப்பே இருப்பதில்லை" என்று முணுமுணுத்தான்.

"யாரு இந்த முத்துசாமியோட சொந்தச் சித்தப்பன்தான செத்துட்டாரு, சாப்பிட பணம் தந்தாதான் என்ன, ஒருவேளைப் பசிக்கு இப்படிக்குக் கெஞ்ச வேண்டியதா இருக்குதே" என்றான் கினையன்.

புல்லட் சப்தம் காதைப் பிளந்தது. ஆனந்தன் சேகண்டி வாசிக்கிற ஆசாமியோடு வந்திறங்கினான். இவ்வளவு இனிமையாக வாசிக்கக்கூடிய இந்த மனிதர்களுக்கு எந்த அடையாளமும் இல்லை.

கழுத்தில் ருத்ராட்சத்துடனும் காவி உடையில் நீண்ட தாடியோடும் வந்திறங்கி ஒரு ஓரமாக அமர்ந்து சேகண்டியைப் பையிலிருந்து எடுத்துக்கொண்டே கினையனைப் பார்த்துத் தலை அசைத்தான் சேகண்டி வாசிக்கும் சிவனாண்டி.

அந்த நேரத்தில் முத்து ஆனந்தனிடம் "டேய் கினையன் கும்பலுக்குச் சாப்பாட்டுக்குக் கொஞ்சம் காச கொடுத்தனுப்புடா. போய்ச் சாப்பிட்டுவிட்டு வரட்டும்" என்றான்.

"இரு மாமா" என்று கால்சட்டையில் கைவிட்டான் ஆனந்தன்.

"டேய் கினையா அதிகமாகக் குடிக்காதீங்க. சாப்பாடு மட்டும் சாப்பிட்டு வாங்கடா" என்று கொஞ்சம் பணத்தை எடுத்துக்கொடுத்தான்.

"சாமி பத்தாதுங்க. நாங்க நாலு பேர், சேகண்டி ஒரு ஆள்" என்று தலையைச் சொறிந்தான்.

"டேய் இப்பத்தான் சேகண்டி வந்தான்,



அதுக்குள்ளேவா போங்கடா போதும்" என்று முறைத்தான் ஆனந்தன்.

கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு அங்கிருந்து நாலு பேரும் கிளம்ப ஆயத்தமாகிப் பறைகளைக் கட்டுக்கட்டி வாசிக்கும் கழிகளைப் பறைக்குள்ளே சொருகி வைத்தார்கள். அந்தப் பறைக்கு இணையாக ஒரு பெரிய பறை தும் தும் என்று கேட்கும் இடத்தில் பழைய ராகம் குழு என்று எழுதியிருந்தார்கள்.

அதற்குள் சற்றுநேரம் சேகண்டி வாசித்துவிட்டு சிவனாண்டியும் அவர்களோடு சேர்ந்துகொண்டான். அவனையும் அழைத்துக்கொண்டு சாராயக்கடையை நோக்கிப் புறப்பட்டான் கினையன். அவர்கள் வாசித்த பறை மற்றும் பேண்டுசெட் வாத்தியங்கள் அனைத்தும் சாவு வீட்டிற்கு வந்தவர்கள் போட்டுச் சென்ற மாலைக் குவியலின் அருகில் அமைதியாக இருந்தன. அருகில் சேகண்டியின் பையும் இருந்தது.

அப்பொழுது அங்கிருந்த மாலைகளில் ஒன்று தலைமை வகித்து அந்தப் பறைகளோடு பேசத்தொடங்கியது.

"எங்க வேலை முடிஞ்சிப்போச்சி. இதோடு பிணத்தைத் தூக்கும்போது எங்களைப் பிய்த்துத் தெருக்களிலும் சுடுகாடுகளிலும் கசக்கி வீசுவார்கள். வழியெங்கும் எங்கள் கண்ணீர்." அவற்றை விளைய வைத்த விவசாயிகளைப் பற்றியும் அவர்களின் வாழ்வாதாரம் பற்றியும் அதை வாங்கி நார்கொண்டு தொடுக்கும் பூக்கடைக்காரர்களின் வலியைப் பற்றியும் சொல்லின.. மாலையோடு நாரிலிருந்த பூக்கள்.

"விவசாயி ஏமாளி, பூக்கடைக்காரனுக்குச் செடியில் இருந்து பிரிந்த அன்றே வியாபாரம் ஆகிவிடவேண்டும் நாங்கள். மலரும்வரை துடிப்பு, மலர்ந்துவிட்டால் ஒருநாள் வாழ்க்கை. அப்படியில்லை என்றால் தெருக்களில் குப்பைகள் நாங்கள்" என்றது.

"நீங்கள் எத்தனையோ மரணத்தைப் பார்ப்பவர்கள். நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்" என்று பூக்கள் பறையைப் பார்த்துக் கூறின.

பறைக்குச் சிரிப்பு வந்தது. பூக்கள் பேசியதைத் தொடர்ந்து பறை பேசத்தொடங்கியது. ஆனால் சப்தம் கேட்கவில்லை. மௌனமான குரலில் பறை, "ஆமாம் பல தலைமுறையாய்க் கினையன் வீட்டில் கிடக்கிறோம். அவன் முப்பாட்டன், பாட்டன், அப்பன் பிறகு கினையன்..." எனத் தனது வாழ்வைப் பேசத்தொடங்கியது.



“நாங்கள் சோகத்தையும் இன்பத்தையும் ஒலித்தே மறைத்து வைத்து உள்ளோம். பெரும்பாலும் எங்களுக்குத் துன்பம்தான் அதிகம்” என்றது. பூக்கள் வியந்து விரிந்து பறையின் காலம் கடந்த மௌனக் கதைகளைக் கேட்கத் தொடங்கின.

மேலும் பறை, “எங்களுடைய முதலாளி கினையன் விரல்களை நாங்கள் முத்தமிடுவோம். அவர் எழுப்பும் ஒலியால் ஒளிபெறும் பிணங்களின் மேல் இசையாக வீழ்வோம்” என்றது. “ஆனால் அவர் இந்த மனிதர்களோடு படும் துன்பங்களை எங்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை” என்றது.

அப்படித்தான் கினையனின் முன்னோடியான முப்பாட்டனைப் பற்றி எடுத்துச் சொல்லச் சங்ககால வெண்புறாவை மார்பில் ஏந்தியது பறை. “வெண்புறாவின் இறகு பறையில் பட்டதும் ஓடி வந்து துள்ளிக் குதித்தான் முப்பாட்டன் சாக்கையன். அரசன் வெண்குடையை எடுத்துச் சாக்கையனிடம் கொடுத்தான். ஒருபுறம் சாக்கையனின் சகாக்கள் சிவனின் பாடலை மனதோடு உருகிப் பாட இசை ஆறு பெருகியது. வெண்குடை எடுத்துச் சாக்கையன் நடக்க, அவனது சகாக்கள் இருபுறமும் வெண்குடை எடுத்துச் செல்ல சிவன் வீதியுலா அழைத்துச் செல்லப்பட்டான். சாக்கையனின் பாடலில் சிவனே வந்துவிடுவான் போல் இருந்தது. அவர்களது பாடல், ஆன்மீகத் திறமைகள், இசை என அரசனையே நடுங்கவைத்தது. இவர்கள் சக்தி வாய்ந்தவர்கள் என நினைத்துப் பிராமணர்கள் திட்டம் ஒன்றைப் போட்டார்கள். இவர்களுடைய அமானுஷ்ய சக்தி அரசரைப் பாதிக்கும், இப்படியே போனால் அரசன் சீக்கிரம் இறந்துவிடுவான் என்றும் சாக்கையனின் இசை மன்னனுக்கு மரணத்தைத் தரும் என்றும் சிண்டு முடித்தார்கள். இவர்களைத் தனித்துக் குடி வைக்க வேண்டும் என்று

பிராமணர்கள் திருவிழாக் கூட்டத்தில் பேசிக்கொண்டார்கள்.

அங்கு தோள் கொடுத்த பிராமணர்களும் சாக்கையனின் சகாக்கள் வாசிக்கும் தாளத்தில் உருகி ஆடினார்கள். சிவனும் ஆடிக்களித்தான் எனப் பேசிக்கொண்டார்கள். அரசன் மனதிற்குள்ளே ஆடினான். நானும் ஒரு கருவியாய் ஒளிர்ந்தேன். இன்பமான பொழுதுகள் விடிவதும் மறைவதுமாக இருந்தது எங்களுக்கு" என்றது.

"கடவுளோடு இவ்வளவு நெருக்கமாக இருந்த அழகும் வாசிப்பும் பிரமிக்க வைக்கிறது" என்றது பூமாலை. பறை பேசத்தொடங்கியது.

"பொறு பொறு. பிரிட்டிஷ்காரன் நம் தோலில் எழுதத் தொடங்கியபோது அதிகாரம் பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அரசர்கள் காலத்தில் போடப்பட்ட திட்டத்தை நிறைவேற்றினார்கள். கினையனின் பாட்டன் வேட்டுவனிடம் இருந்த காடுகள் பறிக்கப்பட்டன. அவனது வேட்டைத் தொழிலுக்கும் சுதந்திரத்திற்கும் தடை விதித்தார்கள். வேட்டுவன் அவன் நிலத்தில் இருந்து துரத்தப்பட்டதும் மனிதர்களிடம் தஞ்சம் புகுந்தான். போராட விடவில்லை அதிகாரம் படைத்தவர்கள். அந்த அளவிற்கு அடக்குமுறை பாய்ந்தது.

ஒருநாள் அப்படித்தான் தான் வேலை பார்த்த இடத்தில் பசிக் கொடுமையால் வாடிக்கிடந்தான். பண்ணையாரின் வீட்டிலிருந்த மாடு இறந்துவிட்டது. அதை அப்புறப்படுத்த வேட்டுவனை அழைத்தார் பண்ணையார்.

"டேய் வேட்டுவா சீக்கிரம் இந்த மாட்டை அப்புறப்படுத்திப் புதைத்துவிடு" என்றார் பண்ணையார். பசி என்றாலும் உடலில் தெம்பு இருந்தது. அந்த மாட்டைத் தன் குழுவில் ஒருவனோடு நீண்ட கழியைக் கட்டி இரண்டு இரண்டு கால்களாகத் தூக்கி கழியில் அமர்த்தித் தூக்கிச் சென்றார்கள்.

மாமிசம் சாப்பிட்டு எவ்வளவு நாட்கள் ஆகிறது. இறந்துபோனால் என்ன என்று மாட்டின் தோல் உரிக்கப்பட்டு எனக்குத் துணையாக மற்றொரு பறை செய்யப்பட்டது வேட்டுவனால். இதோ அந்தப் பறைதான் இது" என அருகில் உள்ள மற்றொரு பறையை அதற்குக் காண்பித்தது.

பிரிட்டிஷாரின் வாசனை அந்தப் பறையில் வீசியது. "அவர்களுக்கு அடிமையாகவும் நாங்கள் வாசித்திருக்கிறோம்" என்றது பறை.

ஆச்சரியப்பட்டது பூமாலை.

"அடுத்ததாக, கினையனின் அப்பா பெயர் சாம்பான். இவரது காலத்திலும் பண்ணையார்களுக்கும், ஜமீன்தார்களுக்கும், கங்காணிகளுக்கும், ஒசந்த சாதிக்காரங்களுக்கும் அடிமையாய்க் கிடந்தோம். யாரும் பார்க்க முடியாத, கண் படாத பகுதியில் ஊருக்கு ஒதுக்குப்புறமாய்த் தங்க இடம் கொடுத்தார்கள். நாகரீகம் அவர்களுக்கு எட்டாத தூரத்திற்கே இருந்தது. புழங்கப் போதுமான இடம் தரவில்லை. கூண்டுகள் போன்ற வீடுகள். கழிப்பிடம் இல்லை. எங்க சனம் மலத்தை ஆங்காங்கே கழித்தார்கள். வெளியில் சென்று மலம் கழிக்கவும் உரிமையில்லை. இடம் சேறும் சகதியுமாக மாறியது. அதற்கு அரசும் உடந்தையாய் இருந்தது. சேரியும், சாம்பானும் சாதிக்கொடுமைகளோடு அடிமையாய்ச் சொற்பக் கூலிக்கு உழைத்தார்கள். சாம்பானும் சாணி வாரினான். மனிதன் மலத்தை வாரினான்.

"ஆண்ட, எங்களுக்குக் கூலி கட்டவில்லை, கொஞ்சம் சேர்த்துக் கொடுங்கள்" என்று வாயைத் திறந்தால் போதும்.. அவன் மேல் கடும் சொற்களும் கம்பும் கையும் பாயும். பயந்தான். வயிறு பசிக்கிறது. வாழ்க்கை நகர்கிறது. பொண்டாட்டி பிள்ளைகளுக்குக் கஞ்சி ஊத்த பணம் வேண்டும். காலணாவில் வயிறு கழுவிய காலம்.

இன்றும் அப்படியேதான் இருக்கிறது அவர்களது வாழ்வு. மீந்தசோறு, வீணாய்ப்போன பட்சணங்கள் என மாடுகளுக்குக் கூட

பிடிக்காத உணவுப்பொருளை எடுத்து வந்து கினையனுக்கு ஊட்டுவான் சாம்பான்.

ஓய்வு நேரங்களில் இறந்தவர்கள் வீட்டிற்கு வந்து வாசிப்பான். அவனோடு சந்நியாசி சங்கு ஊதுவான். பெருத்த தொப்பைக்காரன். இடுப்பில் ஒரு துண்டு. தோளில் வெண்கலச் சங்கு வைத்திருப்பான் சந்நியாசி. அவன் தொப்பையில் கினையன் படுத்துக் கிடப்பான்.

கினையனுக்கு சந்நியாசிதான் என்னை அறிமுகப்படுத்தினான். அந்தப் பஞ்சு விரல் என் மீது பட்டதும் நூற்றாண்டின் குரல்களாய் விடுதலை என முழங்கியது என் தோல்" என்றது பறை.

"எங்களில் கொம்பூதிய கடைசி மனிதனாகச் சந்நியாசி எங்களது இசையோடு விடைபெற்றான். அவ்வளவு பெரிய வெண்கலக் கொம்பை ஊத இப்பொழுது ஆளே இல்லை" என்று பேச்சைக் கண்ணீர் மல்க முடித்தது பறை.

பூமாலை தன்மீது பட்டிருந்த கண்ணீர்த் துளியை உதறியது.

"ஏல வாங்கடா சீக்கிரம், என்னடா இவ்வளவு நேரம்" என்றான் முத்து.

நன்றாகச் சாப்பிட்டுக் குடித்துவிட்டுச் சாவு வீட்டை நோக்கி வந்தான் கினையன்.

"டேய் கினையா, வாடா சீக்கிரம் தட்டுங்கடா" என்றார்கள் கூட்டமாக.

"ஆகட்டும் சாமி" என்று பறையை எடுத்துத் தோளில் மாட்டி "டங் டங்..டங் டங்.." எனத் தட்டி வார் பிடித்தான்.

பறை கொஞ்சம் நனைந்தது போன்று இருந்தது. கினையன் தீயை மூட்டினான்.

பறை பட்டையைக் கிளப்பியது. தனது ஆழமான குரலில் சாராயத்தோடு உற்சாகமாகப் பாடி அடித்தான். எதிரில் இருந்த சிலர் சாராய போதையால் அடிக்குத் தகுந்தாற்போல் ஆடினார்கள். பொழுதுகள் இன்பமாக இல்லை, வியர்த்தது கினையனுக்கு.

சவத்தைத் தூக்கினார்கள். மயானம் சென்றடைந்தது சவம். பறைக்குச் சற்று அவகாசம் கிடைத்தது. சவத்தை அடக்கம் செய்துவிட்டு வரும் வரை கூலிக்காகப் பறையைத் தோளில் மாட்டியவாறு கினையன் தன் சகாக்களோடு ஒதுங்கி ஓரமாக நின்றிருந்தான்.

"டேய் கினையா இங்க வாங்கடா" என்று அழைத்தார்கள் ஆனந்தனும் முத்துவும்.

"இதோ வரஞ்சாமி" என்று கும்பிட்டுக்கொண்டே ஓடினார்கள் பழைய ராகம் குழுவினரும் கினையனும். பேரம் பேசிக் கூலியைக் குறைத்தார்கள். எந்த எதிர்ப்பையும் காட்டாமல் கூலியை வாங்கிக்கொண்டான் கினையன்.

"டேய் கினையா, நாளைக்குப் பால் தெளிக்கோணும் டா... நீ மட்டும் வந்துடு" என்றான் முத்து.

"சரிங்க சாமி" என்று உத்தரவு பெற்றான் கினையன்.

மயானத்தில் கூட்டம் கலைந்தது. யாருமற்ற தனிமையில் ஒரு சில மனிதர்களின் அன்பில் எரிந்தது பிணம். கினையனின் சகாக்களில் ஒருவனான தொப்பையன் எரிந்தும் அடங்காமல் மேலே எழும்பும் பிணத்தைக் கழியால் ஓங்கி அடித்தான்.

அங்கு வாய்க்கரிசி போட்டு மீந்துபோன அரிசி கொஞ்சம் ஓரமாக இலையில் இருந்தது. அந்த அரிசியை ஆசை தீர கினையன் தன் துண்டில் போட்டு முடிந்தான். அரிசியில் கிடந்த சில்லறையைப் பிணத்தை வேகவைக்கும் தொப்பையனிடம் கொடுத்தான். அரிசியையும் ஓரமாகக் கிடந்த வாய்க்கரிசி போடப் பயன்படுத்திய புது வேட்டியையும் எடுத்துக்கொண்டு கினையன் நடந்தான். சாலை முழுவதும் கிடந்த வதங்கி உதிர்ந்துபோன பூக்கள் கினையனை அப்படியே பார்த்தன. ■

**நூல் விமர்சனம்**

● ஆண்டன் பெனி

# இறைக்காமத்தின் இன்னொரு வெளியில் இருக்கும் கடவுள்




***நூல்: விண்ணைச் சூடியாடும் இரு நீல வளையங்கள்***

***ஆசிரியர்: கார்த்திக் திலகன்***

***வெளியீடு: படைப்பு பதிப்பகம்.***

சக்திநெறிப் பழம், மால்மருத வேர், அங்கயற்கண் விதை, சித்தலிங்கப்பூ, புனல் வரிகள், அந்தராத்மா, நிதம்ப பரிகாரம், டமருகம், ககனவெளி, மகிஷமுகம், கன்றாவின் மனம் இப்படி ஒவ்வொரு கவிதைக்குள்ளும் ஒரு சொல்லாவது இருக்கிறது ஆன்மாவைத் தேடும்படியாக. நான் இந்த வார்த்தைகளை இப்போதுதான் கடந்துபோகிறேன். என் தாகத்திற்குத் தண்ணீர் போதும் என்றபோதும் பெரிய மண்கலயங்களில் பதநீர் நிறைத்து வைத்திருக்கிறார். ஒவ்வொரு கவிதையும் வனங்களில் தொலைந்து தொலைந்து தெரியும் நீளமான பாதையாக இருக்கின்றது. பாதை நெடுகிலும் ஆச்சர்யங்களும் அதிசயங்களும். ஆனாலும் என் ஆன்மாவிற்கு இந்தப் பயணம் மிகுந்த ஆறுதலாக இருந்தது.

“உண்மை என்பது வெளியில் இருக்கும் ஒன்றைக் கண்டுபிடிப்பதல்ல, உள்ளுக்குள் இருக்கும் ஒன்றை உணர்வது” ஓஷோ சொன்ன ஒற்றை வரியாகத்தான்

உணர்கிறேன் இந்தத் தொகுப்பின் மொத்தக் கவிதைகளையும்.

சங்க இலக்கியங்களில் காமம் தொடர்பான பாடல்களின் நீட்சியாக, நவீனத்துவத்தில் தனக்கேயான இறைமொழியில் கவிதைகளை முயன்றுள்ளதாக நான் நினைக்கிறேன். காமம் என்பது காதலிலிருந்து மேலேறும் படிக்கட்டுகள். உடலியக்கம் தாண்டிய காதலின் பக்குவமான மேன்மை நிலையினைக் காமம் என்று சொல்லலாம். அதனால்தான் திருவள்ளுவர் காமத்தின் அகம் புறம் இரண்டையும் இவ்வாறு குறிப்பிடுகிறார்.. “மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன் செவ்வி தலைப்படு வார்” என்றும் “மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித் தும்மல்போல் தோன்றி விடும்” என்றும். ஓஷோவும் “அதீத காமத்தின் வெளிப்பாடே கலைகள் அனைத்தும்” என்பார்.

எனவேதான், கலையின் இன்னொரு வடிவான காமத்தினை, அல்லது காமத்தின் முதிர்ந்த வடிவான கலையினை, ஒரு வழிகாட்டுதலாக வெளிப்படுத்த கலைஞர்கள் முயற்சிக்கின்றனர். காமம் பழகாத மனதினைக் கையாளுவது மிகவும் கடினம். இந்தத் தொகுப்பின் பெரும்பாலான கவிதைகள் மனதிற்கு இடறாமல் காமத்தினைப் பழக்குகின்றன. அதன் மாய நூலிழையினை அறுத்து, அதுவும் கையாளத்தக்கதான ஒரு உணர்வே என்று சொல்கின்றன.

சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு, இவள் உயிர்தவச் சிறிது, காமமோ பெரிதே! என்ற அகத்திணைப் பாடலின் உணர்ந்ததன் வெளிப்படுத்துதல் காமம் போல், கார்த்திக் திலகனின் இந்தக் கவிதைகளில் இருப்பது ஒப்படைத்தல் அல்லது சரணாகதி. காதலுக்கும் காமத்திற்கும் சரணாகதி மிகவும் முக்கியம், சரணாகதியிலும் ஒரு தோற்ற மயக்கம் அவசியமோ அவசியம்.

**என் முத்தங்களை**

**கனிகளில் பதுக்கியிருக்கிறேன்**

**என் இளமையை**

**வேர்களில் பதுக்கியிருக்கிறேன்**

**என் முத்தங்களைப் பெறுவதற்கு**

**என் மீது கல்லெறிந்தாலும் போதும்**

**என் இளமையைத் தரிசிப்பதற்கு**

**என்னை வேரோடுதான் நீ சாய்த்தாக வேண்டும்.**

இதில் அந்தத் தோற்ற மயக்கமும் சரணாகதியும் அப்படியே இருக்கிறது. “அலமரல் அசைவளி அலைப்ப, என் உயவு நோய் அறியாது, துஞ்சும் ஊர்க்கே” என்கிற ஔவையின் வெளிப்படுத்துதலுக்கு இணையானதாகவே நினைக்கிறேன் இந்தச் சிறகு முளைத்துப் பறக்கும் யோனிக் கவிதையை..

**விருட்டென்று**

**என் இரவைத் தூக்கிக்கொண்டு**

**பறந்து மறைகிறது**

**சிறகு முளைத்த உன் யோனி.**

இறைக்காமம் இப்படித்தான் இருக்கும், அதுவொரு வழிபாடு, அதுவொரு வேண்டுதல், அதுவொரு சரணாகதி, அதுவொரு தாலாட்டு, அதுவொரு இயங்குதல், அதுவொரு உணர்வற்ற நிலை, அதுவொரு நிறைவு. மடியில் தவழும் காமத்தைச் சமுத்திரத்தின் பெருமூச்சு உத்திகளால் உள்ளிழுத்துக்கொள்ளும் தந்திரம்.

**சமுத்திரத்தின் பெருமூச்சை**

**விட்டுக் கொண்டிருக்கிறேன்**

**அலைகளின் கரிசனத்தோடு**

**மடியில் துள்ளுகிறாய்**

கவிதைகளுக்குள் ஒரு ஆழ்ந்த தியானத்தில் ஒப்புவிக்கும்போது, நானும் நீங்களும் ஒரு அணுத்திரளின் ஒற்றை வடிவு கொள்ளலாம். இதிலிருக்கும் கவிதைகளும் அதன் அசைவுகளில் எதுவும் வெடித்துச் சிதறாதபடி ஒவ்வொரு அணுவாகத் தேவை கருதி அதனை

மலர்த்திப் பார்க்கின்றன.

***கோடானு கோடி அண்டங்களின்***

***அணுத்திரள் வடிவுகள் அசைகின்றன***

***மானியும் யோனியும் கலந்த குறியசைவில்***

ஆழ்மனதில் அறுக்க அறுக்க முளைவிடுகின்ற கீரை வயல்தான் காமம். இறைக்காமத்தின் இன்னொரு வெளியில் இருக்கும் கடவுள் இந்தக் கவிதைகளால் என்னை முழுவதுமாக ஆசீர்வதிக்கிறார். குறியீடுகளும் படிமங்களும் பின் நவீனத்துவத்தில் வெளிச்சம் பாய்ச்சுகின்றன.

***மரமே மரமே***

***உன் இலைகளுக்கும்***

***அதன் பச்சை நிறங்களுக்கும் இடையில்***

***நான் கொஞ்சம்***

***தூங்கிக் கொள்ளட்டுமா***

***ஒரு சிலைக்கும்***

***அதன் மீது படிந்திருக்கும்***

***நம்பிக்கைக்கும் இடையில்***

***கடவுள் தூங்குவதைப் போல***

ஒரு கவிஞன் தன் இருப்பை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ள விரும்பாதபோதும், கவிதைகள் ஒளிந்து விளையாடும் குழந்தைகள் போல, தன்னையும் காட்டிக்கொடுத்து, பிறரையும் காட்டிக்கொடுத்துவிடும். அப்படித்தான் கார்த்திக் திலகனையும் இந்தக் கவிதைக் குழந்தைகள் காட்டிக்கொடுத்துவிடுகின்றன. நான் சார்ந்த வருவாய்த்துறையில் கார்த்திக் திலகனுக்குள் இருக்கும் ஓஷோ மொழியினை அறிந்து வியப்பில் இருக்கிறேன். டேவிட் நோலன் திரைமொழி அறிய குறைந்தபட்சம் ஐந்தாம் வாய்ப்பாடு மனப்பாடமாகத் தெரிந்திருக்க வேண்டும் என்கிற என் அதே நிலைப்பாடுதான் கார்த்திக் திலகன் கவிதைகளிலும். கவிதைகளின் ரகசியத்தைக் கவிதைகளுக்குள்ளே ஒளித்துவைத்திருக்கிறார்.



***தரையில் இருந்து ஒரு பாதை***

***மேலேறிப்போய்***

***மலைமீது குடிகொண்டிருக்கும்***

***அதுல்ய நாதேஸ்வரரையே***

***பார்த்துக்கொண்டு நிற்கிறது***

***மலைக்கு அந்தப் புறம் ஒரு பாதை***

***மலையிலிருந்து***

***கீழே இறங்கிவருகிறது***

***அதன் முகத்திலும்***

***அவரைப் பார்த்த அதே மகிழ்ச்சி***

இப்படியான கவிதைகளில்தான் ஒரு கவிஞனின் விசாலமான பார்வை வெளிப்படுகிறது. இனி என் மலைப் பயணங்களில் ஏறும் இறங்கும் பாதைகளால் உச்சிக் கோவில்களில் கடவுள்களுக்குப் பதிலாகக் கார்த்திக் திலகன் இருப்பார்.

என் கவிதை உலகம் என்பது மிகச் சிறியது. அந்தக் குடிசை வீட்டுக்குள் பெரிதாக ஒளிந்துகொள்ளமுடியாது. அப்படித்தான் என் கவிதைகளும், கதவைத் திறந்தாலே போதும் அங்கு நானிருப்பேன். சிதிலமடைந்து கிடக்கும் பழைய ஜமீந்தார் வீட்டைக்கூட அரண்மனை என்று நினைத்தே வாய்திறந்தபடி பார்த்துக்கிடப்பேன். கார்த்திக் திலகனின் இந்தக் கவிதைத் தொகுப்பு நிஜமான அரண்மனை. இந்தக் கவிதைகளில் உங்களைக் காண ஆயிரம் கதவுகளைத் திறக்க வேண்டியதாகிவிட்டது. அங்கு கவிதை சிம்மாசனத்தில் நீங்கள் கம்பீரமாக இருந்தீர்கள். ஒரு மனு கொடுத்துவிட்டுத் திரும்பிவிட்டேன். ஆனாலும் அலைகளின் கரிசனத்தோடு இன்னும் என் மடியில் துள்ளுகிறீர்கள்.

***இருளின் பொதியில் ஊறிக்கிடந்த***

***வெளிச்சத்தை ஊதி ஊதி***

***உதடுகளே***

**திருவெண்பிறைகளாக மாறிய**

**ஒருவன் வருவான்**

**கைநிறைய மணிகளாக**

**உங்களை அள்ளி**

**உதடுகளைக் குவித்து ஊதுவான்**

ஒரு கவிதைத் தொகுப்பினை வாசித்த பின்னும் ஒரு அரூபத்தின் நிழல்போல் தொடருகின்றன இப்படியான பல கவிதைகள். காமம் பற்றிய புரிதலோடு விரவிக்கிடக்கும் கவிதைகளில் காமத்தில் நனைந்து திளைக்கிறார் கடவுள்.

**கண்கள் எனும் உயிர்த் திரளிலிருந்து**

**பார்வை நரம்பசைவுகள்**

**சுருள் சுருளாகப் புகைந்து தூபமிட**

**உதடுகள் என்னும் இரண்டுவரி மந்திரத்தை**

**உன் பாதத்தின் மீது பதித்ததும்**

**காலத்தின் சூடத்தின்மேல்**



**வந்தமர்ந்த திருச்சுடர் உன் யோனி**

இந்தக் காமத்தின் நிழலினை யாரால் உதறிவிட முடியும்? இந்தக் காமத்தின் நிலைதான் ஞானம். கவிதைகளிடம் அந்தப் பெருவெளியை அடையாளம் கேட்டால், காமத்தின் பெரு மச்சத்தினையும், காமத்தில் இரு பெரும் தழும்பையும் காட்டுகின்றன. எனக்கும் அது பிடித்திருந்தது. அதிலிருந்த இறைவெளியை அடைவது யாருக்கும் எளிது. ஆனாலும் அது பேசும் மொழி புதிது. நானதை விரும்புகிறேன், நிழலை உதறமுடியாத உங்களின் நாயைப் போல.

**வெளியில் நிற்கும் நாய் ஒன்று**

**வேகவேகமாகக்**

**கால்களை உதறுகிறது**

**தன் நிழலை**

**அவ்வளவு எளிதாக**

**உதறிவிட முடியவில்லை அதனால்**

உங்களின் கவிதைகளை உங்களால் மட்டுமே எழுத முடியும் என்பது பெரிய வெற்றி கார்த்திக். பொதுவாக நானறிந்த கவிதைகளும் என் கவிதைகளும் நாவல் பழங்கள்தான். மரம் ஏற வேண்டியதில்லை. காற்று கிளையசைத்தால் போதும் காலடியில் கொட்டிக்கிடக்கும். ஆனால் நீங்கள் சக்திநெறிப் பழம்.

**உன் கையில் இருப்பது**

**எழுதுகோல் அல்ல**

**கடவுளின் குறி**

**நீ பூ என்று எழுதினால் அது பூவாகும்**

**பாழ் என்று எழுதினால் அது பாழாகும்**

இப்படி, உங்களைப் பற்றி நான் சொல்ல விரும்புவதையும் நீங்களே சொல்லிவிட்டால் நான் என்ன செய்வது கார்த்திக் திலகன்? ஆனாலும் உங்களுக்குக் கவிதை எழுதத் தெரிந்திருக்கிறது. நீங்கள் விரும்பாவிட்டாலும் கவிதைகள் எப்படியாவது உங்களை வைத்து எழுதிக்கொள்ளும். ■

கவிதையியல் குறித்த நேர்காணல்கள் - 14

● மௌனன் யாத்ரிகா

# கற்பதுவே.. கேட்பதுவே..!

## ஆதிரன்

**கவிதை ஓர் அறிவுத்துறைதான். இருப்பினும், அதை ரசனை சார்ந்த நுகர்வுப் பண்டமாகக் கருதுவதில் தவறு இருக்கிறதா?**

இல்லை என்ற ஒற்றை வார்த்தையைத் தவிர இந்தக் கேள்விக்குப் பொதுவான பதிலேது. ஆயினும் இந்தக் கேள்வியை முன்வைத்துச் சில புரிதல்களைப் பகிர்ந்துகொள்கிறேன். ஏனென்றால் எனது பதில் தவறு என்பதாகவே இருக்கிறது. முதலில் கவிதை என்பது அறிவுத் துறை என்றால் இல்லை என்றுதான் சொல்லுவேன். மொழிதான் அறிவுத்துறை. மொழியின் பாண்டித்துவம் ஒருவருக்குக் கவிதை வனைய உதவலாம். கவிதைக்கு என்ன தேவை என்றால் அன்றாடங்களின் மீதான கூர்மை மற்றும் தனித்துவமான பார்வைக் கோணம் (perception) அவ்வளவே. அது அவரவர் அனுபவம். அதனாலேயே 90 சதமானக் கவிதைகள் வெறும் அடையாளச் சிக்கல்களோடு வார்த்தைக் குப்பைகள் என மடிந்துவிடுகின்றன. மீதமிருக்கும் பத்து சதமானமும் அடையாளச் சிக்கல்கள்தான், ஆனால் அதில் நிச்சயமாக மேற்சொன்ன தனித்துவமான அனுபவம் இருக்கும். மேலதிக மேட்டிமை மொழி உருவாகும். மிகத் துல்லியமான சார்பு புலப்படும்.

எடுத்துக்காட்டாக ஜெயமோகனோ சாருவோ ஏன் கவிதை எழுதுவதில்லை என்கிற அரசியல் புரிபடும். கவிதை அதை எழுதுபவரைச் சமரசமின்றிக் காட்டிக் கொடுத்துவிடும் அல்லவா. மேலும் ரசனை என்பதை ஒற்றைத் தன்மையுடன் புரிந்துகொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறேன். அப்படியென்றால் இந்தக் கேள்வியின் அபத்தத்தையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு எளிமைக்காக விகடனில் வரும் சொல்வனம் கவிதைகளுக்கும் தனியாக ஒரு கவிஞரிடம் கேட்டு வாங்கப்பட்டு அதே பத்திரிக்கையில் வரும் கவிதைகளுக்கும் ஹயரார்க்கி எத்தகையது? காலச்சுவடுவில் வரும் கவிதைக்கும் வாரமலரில் வரும் கவிதைக்கும், இடையில் பல்வேறு பத்திரிக்கைகளில் பிரசுரம் ஆகும் கவிதைகளுக்கும் எத்தனை விதமான ரசனைப் பட்டியல் இருக்கிறது? ரசனை சார்ந்த நுகர்வுப் பண்டம் என்கிற விவரிப்பு ரசனை இல்லாத நுகர்வுப் பண்டம் என்கிற ஒரு பயங்கரத்தை என்னுள் உருவாக்குகிறது.

அவரவர் சார்பு சார்ந்து கவிதை என்பது அவரவர் ஆயுதம். ஆயுதம் சந்தேகமே இல்லாமல் நுகர் பொருள். ரசனை சார்ந்து ஒருவர் தனது ஆயுதத்தை வாங்கிக்கொள்ளலாம். இடையில் ஒரு சிறு பரிந்துரை என்னவென்றால் கவிதை எழுத நினைப்பவர்கள் தயவுசெய்து சங்கரின் பொயட்ரி இதழில் வந்த சச்சிதானந்தின் பேட்டியைப் படித்து அதைப் புரிந்துகொள்ள முயலுங்கள். எவ்வளவு புரிகிறதோ அவ்வளவுக்கு எழுதுபவரின் பண்டம் விலை போக வாய்ப்புள்ளது. எனவே, இப்படிப்பட்ட சிக்கல்களில் கவிதை ரசனை சார்ந்த பண்டம் என்று ஏன் வைத்துக்கொள்ளக் கூடாது என்றால், சமரசம் செய்துகொள்வது அழிவில் முடியும்.

இதன் இடைவெளி மிகப் பிரமாண்டமானது. மெண்ட்டல்ஸ்டமுக்கும் (Osip Emilyevich Mandelstam) விக்கிரமாதித்தியனுக்கும் உள்ள இடைவெளி அது. மனித சமத்துவம் என்பது நமது நோக்கம் என்றால் எது சரியான கவிதை என்பதன் புரிதலில் கவனம் செலுத்துவது தவிர வேறு வழியே இல்லை. பாரதியா அல்லது பாரதிதாசனா.. எது உங்களது ரசனை? அதுவே எனதும்.

**கவிஞரையும் வாசகரையும் ஒரு புள்ளியில் சந்திக்க வைக்காத கவிதைகள் வரலாற்றில் தோற்றுப்போய் விடுமா?**

சுவாரஸ்யத்திற்காக உருவாக்கப்பட்டபோதும் கடுமையான உள்ளர்த்தம் தொனிக்கும் கேள்வி. வரலாறு என்பது நேர்கோட்டுச் சித்திரம் இல்லை என அறிவோம்தானே. ஸாப்போவின் கவிதையும் தமிழ்நாட்டு ஓரினப் புணர்ச்சியாளனும் சந்தித்துக்கொள்ள வரலாறு எத்தனை காலம் எடுத்துக் கொள்ளும்? எந்த வரலாற்றில் கமலா தாஸ் எவ்வாறு தோற்கக் கூடும்? இப்படி ஒரு சிந்தனை என்றால், மாற்றாக அடையாளத்தில் மாட்டிக்கொண்ட கவிஞரின் நோக்கம் வாசகரைச் சில்லறை கொடுத்து உருவாக்கவும் செய்யும் என்பது எனது தாழ்மையான எண்ணம். கவிஞரையும் வாசகரையும் ஒரு புள்ளியில் சந்திக்க வைக்காத கவிதைகள் வரலாற்றில் அனுபவம் எனும் ஆமையாக ஊர்ந்துகொண்டிருக்கிறது அல்லவா?

**தனிமனித அனுபவத்தைச் சமூக அனுபவமாக மாற்றும் பொறுப்புணர்வு தற்காலக் கவிதைகளில் இருக்கிறதா?**

பொதுவாக இல்லை என்றுதான் சொல்லுவேன். ஏனென்றால் கவிதை எழுத வரும் பெரும்பாலோருக்குச் சமூக அனுபவம் குறைவு என்பது எனது அனுபவம். மேலும் தாராளமய பொருளாதாரம் பொறுப்புணர்வுக்குக் கேலிக்குரிய பொருளை உருவாக்கிவிட்டது. சுவாரஸ்யத்திற்காக ஒரு ஒப்புமையைப் பார்ப்போம். சுதந்திரவல்லி அவர்களின் கவிதைகளுக்கும் ஜே. ரோசலின் (மரங்கள் பற்றிய இவரது அவதானிப்பு வரிகள் பொருட்படுத்தத் தக்கவை) அவர்களின் கவிதைகளுக்கும் உள்ள வேறுபாடு பற்றியது அது. சமுதாயத்தின் மீச்சிறு அலகான குடும்பம் பற்றிய இருவரின் புரிதல் என்பது மிகக் கடுமையான தலைமுறை இடைவெளி எனவே புரிந்துகொள்கிறேன். என்னால் இரண்டையும் போட்டுக் குழப்பிக்கொள்ள முடியாது. இரண்டிலும் உருவாக்கப்படும் எள்ளல் தொனியில் இருக்கும் பொறுப்புணர்விற்கு மிகுந்த வித்தியாசம் உள்ளது.

போலவே வெய்யில், இளங்கோ க்ருஷ்ணன், நாராயிணி (பட்டியல் நீளமானது) போன்றோரின் கவிதைகளில் உள்ள சமூகப் பொறுப்புணர்வு எத்தனை பேருக்குப் புரிந்து கொள்ள முடியும் எனவும் தெரியவில்லை. கவிதை எழுதுவது எப்படி என்று என்னிடம் சிலர் கேட்டிருக்கிறார்கள் (எனக்கு நானே சிரித்து நாசமாய்ப்போன தருணம் அது). ஆனால் அவர்களிடம் நான் சொன்ன பதில் இதுதான்; உங்கள் கிராமத்தில் ரேசன் கடையில் ஒரு வாரமும், கிராம நிர்வாக அலுவலகத்தில் ஒரு வாரமும், அருகிலிருக்கும் காவல் நிலையத்தில் ஒரு வாரமும் வாசலில் நின்று நடப்பவற்றைப் பார்த்துவிட்டுப் பிறகு ஒருவாரம் வீட்டில் பாத்திரம் விளக்கிவிட்டு (பெண்களாய் இருந்தால் பதினைந்து நாட்கள் வீட்டை விட்டுத் தனியாக ஓடிப் போய்விட்டு) கூடவே உங்கள் பகுதியில் கிடைக்கும் மட்டமான மதுவின் சுவையையும் அறிந்துகொண்டு வாருங்கள்.. பின்பு கவிதை பற்றிப் பேசலாம் என்பேன். இதுவரையிலும் யாரும் வரவில்லை. பிறகு நான் பொறுப்புணர்வைப் பற்றி எப்படி விளக்குவது?

## அகரமுதல்வன்

**சமூக உறவில் இருப்பதுபோல் கவிதை போன்ற கலைச் செயல்பாட்டிலும் உட்பகை விளங்குவது ஏன்?**

ஏனெனில் கவிதை போன்ற கலைச்செயல்பாடும் சமூக உறவே.

**கவிதையை, எழுதியவரின் பொருட்டு மட்டுமே வாசிக்க முற்படுவதை, அபத்தமான அல்லது ஆபத்தான வாசிப்பு முறையாகக் கருதலாமா?**

அது வாசகனின் தேர்வு. அதில் எங்கிருந்து வந்தது அபத்தமும் ஆபத்தும்?

**கவிதையை அணுகுவதிலும் பொருள் கொள்வதிலும் தற்காலத் தமிழ் வாசகச் சூழல் மேம்பட்டுள்ளதா? பின் தங்கியுள்ளதா?**

மேம்பட்டும் பின்தங்கியும் - பின்தங்கியும் மேம்பட்டும் சுழற்சியோடு பயணிக்கிறது. நொந்துகொள்ள எதுவுமில்லை.

—

## முத்துராசா குமார்

**கவிதைகளை ஆவணங்களாகக் கொண்டது தமிழ்ச் சமூகம். அந்தப் புரிதலோடு உங்கள் கவிதைகளுக்கு அந்தப் பொறுப்புணர்வை ஏற்றுகிறீர்களா?**

ஒரு பொருளையோ (உயிருள்ள/உயிரற்ற) சொல்லையோ அல்லது இவையிரண்டும் ஒட்டியிருக்கும் வாழ்வியல் கூறுகளையோ, அதற்குண்டான சாட்சியங்களையோ இறந்த காலத்திற்குள் போகவிடாமல் பத்திரப்படுத்தி வைத்திருக்கையில் அவை ஆவணங்களாகின்றன. இறந்த காலத்திடம் எப்படியோ தப்பித்த மிச்சமானவைகளும் நிகழ்காலத்தில், எதிர்காலத்தில் ஆவணங்களாகின்றன. ஆவணத்தன்மை பொறுப்பென்ற முன் முடிவோடு நான் என் கவிதைகளை எழுதுவதில்லை.

கவிதைகளை எழுதி முடித்தவுடன் அல்லது சிறிய கால இடைவெளிக்குப் பிறகு அக்கவிதைகளைப் பகுப்பாய்கையில் ஏதாவது ஒரு ஆவணம் (நான் சார்ந்த நிலம் -நிலம் சார்ந்த அனைத்துக் காரணிகளும்) புனைவாக வெளிப்பட்டு நிற்கிறது. இந்த நிகழ்வுகள் எனது ஆழ்மனதில் சுழலும் இயல்பாகவே பார்க்கிறேன். இவ்வியல்பு எப்படி நிகழுகிறது என்பதை வாசித்து வாசித்து - எழுதியெழுதிப் பார்த்து அது சார்ந்து பயணித்துக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறேன். இப்படியான ஆவண சம்பவங்கள் நிகழுகையில் அக்கவிதையும் முனியேறிய உடம்பாக, கவிதை ஆவணங்களாகி, நீங்கள் சொன்ன பொறுப்புணர்வு தானாக உருவாகிக்கொள்கிறது.

**நடப்புச் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளைக் கவிதையில் உட்பொதியும்போது ஒரு கவிஞனாக அடையும் உணர்வெழுச்சிகள் எவ்வாறானவை?**

ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு பண்பாட்டுக் கூறுகள் உண்டு. நமது பண்பாட்டுக் கூறுகளைப் பற்றிப் பேசுகையில் காலங்களில் அவை எவ்வாறு பயணித்து வந்தன.. அந்தப் பண்பாட்டுக் கூறுகள் என்னுடைய இருப்பில் எப்படியான தாக்கம் செலுத்துகின்றன.. நான் அவற்றை என்னவாகப் பார்க்கிறேன்.. பண்பாட்டுக் கூறுகள் களவாடப்படுகிறதா திரிக்கப்படுகிறதா, அடிப்படையான மானுடத்திற்கு என்னவிதமான பண்பாடுகள் தேவை, தேவையில்லை, அப்பண்பாட்டுக் கூறுகள் ஆக்கப்பூர்வமான பெருமிதமா? இல்லை வெட்டிப் பெருமிதமா? அதிகாரங்களுக்கு ஏற்றபடி உருவாக்கப்பட்டிருக்கும் பண்பாடுகளின் சாதக பாதகங்கள் என்று நான் ஒரு பண்பாட்டுக் கூறினைக் கவிதையினுள் கொண்டுவருகையில் இம்மாதிரியான

உணர்வெழுச்சிகளை எனக்குள் எழுப்பி உரையாடித் தெளிவுகொள்ள முயல்கிறேன்.

**கவிதைக்கென்று கோட்பாடுகளை வைத்துக்கொண்டு எழுதும்போது கவிதைக்கு நியாயம் செய்ய முடியுமா?**

மொழி, அரசியல், வடிவம், சொல்லல் முறை, அழகியல் என்று பல துறை வகைமைகளில் ஒவ்வொரு காலகட்டத்திலும் கவிதைகளுக்கான கோட்பாடுகள் உருவாக்கப்பட்டுக்கொண்டேதான் இருக்கின்றன. வாசிப்பவர்களின் மனநிலைகள் பொறுத்து இவை மாறுபடும் குணம் கொண்டவை. அந்தக் கோட்பாடுகளை வைத்துக்கொண்டு கவிதை எழுதுவதில் நியாயம் செய்ய முடியுமா? என்று பார்த்தால், என்னைப் பொறுத்தவரையில் அக்கோட்பாடுகளைப் பக்கத்தில் வைத்து எழுதுகையில் ஒருவிதத் தடைகள் என்னைச் சூழ்வது போல உணர்வேன்.

அதிமூப்பு ஏறிய கவிவடிவை, மிகச் சுதந்திரமான கலைவடிவமாக நான் பார்க்கிறேன். கோட்பாட்டுப் பார்வைகள், சூத்திரங்கள் எல்லாவற்றையும் தாண்டி இறுதியாக அக்கவிதை வரிகள் எக்காலத்திலும் மனிதவுயிர் அகத்தோடு நெருக்கமாகிறதா, உணர்வுப்பூர்வத்தைக் கிளறிவிடுகிறதா என்பதே என்னளவிலான எளிய கருத்து. கோட்பாடுகள் கவிதைகளை மதிப்பிடும், தரம்பிரிக்கும், கவிதையில்லை என்று சொல்லும்.. அதனால் கோட்பாடுகளைப் புறந்தள்ளும் செயலல்ல இது. வளர்ப்புக் கிடாயின் விளையாட்டு முட்டுகள்.

---

## எஸ்.சண்முகம்

***ப**ழைய உரையாசிரியர்கள் தேவைப்படும் அளவுக்குக் கடினமான மொழிகளால், உள்ளடக்கங்களால், புரிந்துகொள்ள வாய்ப்பற்ற இசங்களால் எழுதப்பட்ட கவிதைகளையும் வெகு சுலபமாக உள்நுழைந்து பொருள் கவர்ந்து வெளியே வருவீர்கள். பார்த்திருக்கிறேன். எப்படி சாத்தியமாகிறது?*

முதலில் கவிதை எழுதிக்கொண்டுதான் இருந்தேன். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் முன்றில் இலக்கியக் கருத்தரங்கில் என் தலைமுறையினர் பலரை மடைமாற்றம் செய்த நூல் `ஸ்டரக்சுரலிசம்.` அதை எழுதிய எனது ஆசிரியர் பேராசிரியர் திறனாய்வாளர் திரு. தமிழவன் அவர்களை நேரில் சந்திக்கும் பேறு பெற்றேன். அவர் எண்பதுகளின் கவிதைகள் குறித்த கட்டுரை ஒன்றை வாசித்தார். அதில் எனது கவிதையொன்றைப் பற்றியும் பேசினார்.

கருத்தரங்கம் முடிந்தவுடன் தமிழவன் என் இல்லத்தில் அன்றிரவு தங்கினார். அன்று இரவு முழுவதும் அமைப்பியல், பின் அமைப்பியல், பின் நவீனத்துவம் மற்றும் தமிழ் மரபிலக்கியம் பற்றிப் பேசினோம். அப்போது எனது புத்தக சேகரத்தைப் பார்த்துவிட்டு நீங்கள் திறனாய்வு எழுதத் துவங்குங்கள் என்றார். அதோடு நில்லாமல் அவர் காவ்யா பதிப்பகத்திற்குத் தொகுக்கும் `மௌனி இலக்கியத் தடம்` நூலுக்குக் கட்டுரை எழுதும்படி பணித்தார்.

மௌனி குறித்து ஒரு நெடிய கட்டுரை எழுதி அனுப்பினேன். அதில் துவங்கி நண்பர்களும் திறனாய்வாளர்களுமான நாகார்ஜுனன், எம்.டி.முத்துக்குமாரசுவாமி, ஜமாலன், முபீன் சாதிகா என புதிய இளைஞர்கள்வரை எனது உரையாடல்களும் விவாதங்களும் தொடர்கின்றன. தொடர் கோட்பாட்டு வாசிப்பும் அதைப் பிரயோகம் செய்து தொடர்ந்து எழுதவந்ததன் பயனாகவும்; ஆசிரியர் தமிழவனும் மற்றும் திறனாய்வுக் கோட்பாடுகளும் அளித்த கொடையாகவும் இருக்கலாம், கவிதைகள் குறித்து நான் பேசுவதும் எழுதுவதும்.

***கவிஞன்/வாசகன்/திறனாய்வாளர் - மூன்று முரண்பட்ட ஆளுமைகளும் உங்களிடம் பாத்திரம் வகிக்கிறார்கள். இதில் யார் மிகவும் ஸ்பெஷல்.***

திறனாய்வாளன் - இரண்டாவது : கவிதை எழுதுபவன் - மூன்றாவது : வாசகன். இது என் வரிசைத் தேர்வு. வாசகர்களின் உளக்கிடக்கை என்னவென்று தெரியவில்லை. அறிந்துகொள்ள காத்திருக்கிறேன்.

● கரிகாலன்

# தேநீர் சாலை



## பழம்பெருமை எனும் எலிப்பொறி!

~

இன்று முழு லாக்டவுன். வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தேன். பொழுதைக் கழிக்க வழக்கம்போல் சினிமா பார்த்தேன். என்ன சினிமா பார்ப்பது? பழைய கிளாஸிக் ஏதாவது பார்க்கலாம்! தேடியபோது, கிடைத்த படம் எலிப்பத்தாயம்.

எனது பதின்ம வயதில் வெளிவந்த ஆடூர் கோபால கிருஷ்ணனின் படம். இன்றுதான் பார்க்கிற பேறு அமைந்தது. சினிமா பார்ப்பது பேறா? தோன்றலாம். நிச்சயமாக. 1981 எனும் காலம், அதன் மனிதர்கள், அதன் நிலம் எல்லாமே மாறிவிட்டது. மறைந்துவிட்டது. அந்தக் காலத்தை, மனிதர்களை, வாழ்வைக் காண முடிகிற பேறைத் தருவதே சினிமா.

80கள் உலக அரசியல், பொருளாதார, வரலாற்றில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கியிருந்தன. இரண்டாம் உலகப்போருக்குப் பின் அமெரிக்கா வல்லரசாகும் முனைப்பில் இயங்கியது. சோவியத் யூனியன் சிதறியது. உலகம் நகரமயமாகிக் கொண்டிருந்தது.

இந்தக் காலகட்டத்தில் வெளியான படம்தான் எலிப்பத்தாயம் (எலிப் பொறி). இந்திரா காந்தி ஜமீன்தாரி முறையை ஒழித்துப் பத்து ஆண்டுகள் ஆகியிருந்தன. நில உச்சவரம்புச் சட்டம் அமலுக்கு வந்திருந்தது.

இந்தியாவில் நிலவுடைமைச் சமூகம் சிதிலமடையத் தொடங்கியிருந்தது. ஜமீன்தார்கள், பெருநிலக்கிழார்களின் ஆடம்பரமான வாழ்க்கை முடிவுக்கு வந்திருந்தது. அவர்களது களஞ்சியங்களில் செல்வமில்லை. அவர்கள் குதிர்களில்

தானியங்கள் அருகியிருந்தன. அவர்களது வில்வண்டிகளை இழுக்கும் குதிரைகள் இளைத்திருந்தன. அவர்கள் வாழ்ந்த அரண்மனை போன்ற சுற்றுக்கட்டு வீடுகளுக்குச் சுண்ணாம்பு பூச முடியவில்லை. ஆனாலும் அவர்கள் மனசில் பண்ணையார்த்தனம் குறையவில்லை.

காபி குடித்த டம்ளரை எடுத்துச் செல்ல ஏவலாட்கள் இல்லாதபோது வீட்டுப் பெண்களை ஏவல் செய்யப் பணித்தார்கள். வெளியே நடக்கும் மாற்றத்தை விளங்கிக்கொள்ளாமல் தங்கள் இறந்த காலத்தின் எலிப்பொறியில் சிக்கிக்கொண்டார்கள்.

நாம் வாழ்வது ஒரு எலிப்பொறிக்குள் என உணராமல் அதையே ரசிக்கத் தொடங்கிவிட்டார்கள். பொறியில் அகப்பட்ட எலியைத் தண்ணீரில் மூழ்கிச் சாகடிப்பார்கள். நிகழ்காலத்துக்கு வரத்தெரியாத இவர்கள் இறுதியாக இறந்த காலத்துக்குள் மூழ்கி மூச்சுத் திணறினார்கள்.

இப்படி ஒருவன்தான் உன்னி (கரமன்ன ஜனார்த்தனன்). ஒரு அக்கா இரண்டு தங்கைகள். மூத்தவள் திருமணம் முடிந்து புகுந்த வீடு சென்றுவிட்டாள். அவ்வப்போது வந்து சொத்தில் பங்கைக் கேட்கிறாள். நடுவில் உள்ளவள் ராஜம்மை (சாரதா). சின்னவள் ஸ்ரீதேவி (ஜலஜா). உன்னியும் திருமணம் செய்துகொள்ளவில்லை. ராஜம்மைக்கு வரும் சம்மந்தங்களையும் குடும்பப் பெருமை பேசி விரட்டிவிடுகிறான். ராஜம்மை முதிர்கன்னியாகச் சகோதரனுக்குச் சேவகம் செய்கிறாள்.

அவன் வெளியே போகும்போது செருப்பு, துண்டு, குடை எடுத்துத் தருவது, குளிக்க வெந்நீர் போடுவது, சட்டை சலவை செய்து கொடுப்பது சகலமும் ராஜம்மை. எதற்கெடுத்தாலும் ராஜம்மைதான். ராஜம்மை அவனுக்கு இன்னொரு கை. வேலை செய்கிற ஒரே கை. அவள் உடம்பு இதயமில்லாத வெறும் கையாலானது. நிலவுடைமைப் பண்பாட்டில் பெண்ணின் இடம் இதுதான்.

சமூகத்தோடு ஒட்டி உறவாடாமல், வெட்டிக் கௌரவத்தால், ஆண்ட பரம்பரை மனோபாவத்தால் தனிமைப்படுகிறான் உன்னி. சகமனிதர்கள் மீது மதிப்பும் கௌரவமும் வைக்காமல் அந்நியப்படுகிறான். அச்சம் அவனது நீங்காத வியாதியாகிறது. ஒரு எலியைக் கண்டும் அஞ்சுகிறான்.

மாறிவிட்ட காலத்தின் அடையாளம் ஸ்ரீதேவி. அவள் ராஜம்மை போன்றவள் அல்லள். தனக்கானவனைத் தானே தேடிக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். அவளைத் தேடும் முயற்சிகூட செய்யாமல் செயலற்று வீட்டுக்குள்ளேயே முடங்கியிருக்கும் சகோதரன் மீது முதல்முறையாக எரிச்சல் கொள்கிறாள் ராஜம்மாள். இந்த நரகத்தை விட்டு விடுதலை கொடு! எனக் கடவுளிடம் வேண்டுகிறாள். விடுதலையை மரணத்தின் வடிவத்தில் பெறுகிறாள்.

பெரிய வீட்டில் அன்பு செலுத்த பரிவு கொள்ள, யாரும் இல்லாத உன்னியின் முடிவு என்ன? நிலவுடைமை மனதின் வீழ்ச்சியைக் கவித்துவமாகக் காட்டுகிறார் ஆடூர்.

இத்தகைய மனிதர்களை எங்களூரில், எங்கள் பக்கத்து ஊரில் நான் பார்த்திருக்கிறேன். நாம் வீழ்ச்சியில் இருக்கிறோம். இறந்த காலத்தைச் சுவாசிக்கிறோம். சமகாலத்துக்கு வரவேண்டும்! என்கிற யத்தனிப்பே இல்லாமல், ஈசிச் சேரில் காலம் கழித்தார்கள் ஆண்கள். தங்களுக்கு இணையான குடும்பப் பாரம்பரியம் இல்லாததால் பிரம்மச்சரியம் பேணினார்கள். பெண்கள் தங்கள் கனவுகள் மீது ஈரச் சேலையைப் போர்த்தி அப்பாவுக்கோ சகோதரனுக்கோ பணிவிடை செய்தார்கள். கடைசிவரை முதிர்கன்னியாக இருந்து செத்துப்போனார்கள்.

போலி கௌரவம் என்கிற பொறியில் சிக்கிய எலியாக உயிர் விடாதீர்கள். சிதிலமடைந்த பழைய வாழ்க்கை முறையிலிருந்து வெளியேறி விடுதலையை அனுபவியுங்கள்! என்கிறார் ஆடூர் கோபால கிருஷ்ணன்.

சாதிப் பெருமை, குடும்பப் பெருமை, குலப்பெருமை, ஆண்பெருமை எல்லாமே நிலவுடைமை எச்சங்கள். இத்தகைய எலிப்பத்தாயத்தில் மாட்டி யாரும் மூச்சுத் திணறக்கூடாது என்பதுதான் அம்மாபெரும் கலைஞனின் கனவு!

••

## தாவோ, ஃபுகோகா, ஔவை!

~

என்மீது அன்பு கொண்ட தோழிகள் கலாய்ப்பார்கள். அடிக்கடி 'உழுகுடிப் பிள்ளை!' என்கிறீர்களே, உங்களுக்கு ஏர் உழத்தெரியுமா? என்பார்கள். அப்போதெல்லாம், 'தொய்யாது வித்திய துளர்படு துடவை ஐயவி யமன்ற வெண்காற் செறுவின்' என்ற மலைபடுகடாம் பாடல் வரிகளைச் சொல்வேன்.

ஐந்திணை நிலங்களில் குறிஞ்சி வேளாண்மையே பழையது. 'தொய்யாது வித்திய' என்றால் உழாமல் செய்த வேளாண்மை என்று பொருள். குறிஞ்சியில் விலங்குகள் கிழங்குகளுக்காக அகழ்ந்த பள்ளங்களில் விதைகளைப் பயிரிட்டனர். இதைத்தான் ஜப்பான் விவசாய மேதை மசானபு ஃபுகோகா, "எதுவுமே செய்யத் தேவையற்ற வேளாண்மை (அ) உழவில்லா வேளாண்மை!" என்கிறார்.

எதுவுமே செய்யத் தேவையற்ற என்றால், படுக்கையில் இருந்துகூட எழுந்திருக்காமல் வாழும் மாய வாழ்க்கையல்ல. இதன் பொருள், எதையும் செய்யாமல் சும்மா இருப்பது! என்பதன்று.

மக்கள் தங்கள் அறியாமையால் வேளாண்மையில் தேவைக்கு அதிகமான காரியங்களைச் செய்கிறார்கள். தாங்கள் விரும்பிய விளைவைப் பெறுவதற்குத் தேவைக்கதிகமான உழைப்பை, பொருளைச் செலவு செய்கிறார்கள். இதைத்தான் தேவையற்றதைச் செய்யாமலிருப்பது என்றார் ஃபுகோகா.

கரிகாலன் ஃபுகோகாவின் *follower!* இது அவனுக்கு மோசமான காலம். அவனது இரைப்பையில் உணவைவிட மருந்து அதிகமாக இருக்கிறது. அவனது பகலுக்கு இரவின் தனிமை. இரவுக்குப் பகலின் விழிப்பு. ஆனாலும் அவன் தன் பிறவிக்குத் தேவையானவற்றைச் செய்தாக வேண்டும். இப்போது அவன் குறைவாகச் செயல்படுகிறான்.

தமிழின் முதற்பொருள் நிலமும் பொழுதும்தாம். கடவுள்கூட இல்லை. நிலமும் பொழுதுமே அவனுக்கு ஆசான்கள். உழவு அவனது பண்பாடு, வாழ்முறை. வேளாண்மை மனிதப் பசியைப் போக்குவது மட்டும் அல்ல.. நாகரீகத்தை வளர்ப்பது. மிகக்குறைந்த சக்தியோடும், தேவையான அளவில் இயங்க, அவனை இந்த வேளாண் வாழ்முறையே பழக்கியிருக்கிறது.

கிட்டத்தட்ட தாவோயியமும் இதே 'செயல்படாமை' தத்துவத்தைத்தான் வலியுறுத்துகிறது. செயல்படாமை என்பது மிகக்குறைந்த முயற்சியுடன், சரியான காலத்தில் ஒருவரின் இயல்பைச் செயல்பட அனுமதிப்பதாகும்.

நோய், மரணம் போன்றவை இயற்கையானவை. இத்தகைய விழிப்பு நிலைதான் நோயையும் மரணத்தையும் எதிர்கொள்ளவும், பக்குவப்படவும் செய்பவை. "ஆற்றங் கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழும்!" என்ற அவ்வைதான் 'உழுகுடி நாகரிகம் வீழாது!' என்று தைரியம் கூறுகிறார்.

ஔவை, தாவோ ஃபுகோகா, கரிகாலன் என்கிற வெவ்வேறு பாத்திரங்கள் இப்படி ஏதோ ஒரு சிந்தனைப் புள்ளியில் இணைகிறார்கள். அது நிலமாகவோ, பொழுதாகவோ, உழவாகவோ, பண்பாடாகவோ இருக்கிறது!

••

~

புறநானூற்றின் முதல் பதிப்பை 1894இல் கொண்டு வந்தவர் உ.வே.சாமிநாதையர். இவரைப் போலவே பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் போன்றோரும் சங்க இலக்கியங்களைப் பதிப்பித்திருக்கிறார்கள்.

இவர்கள் பதிப்பித்த சங்கப் பாடல்களில் பாட வேறுபாடுகள் காணப்படுவதில் வியப்பில்லை. சங்ககால நூல்கள் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டவை. ஓலைச் சுவடிகளில் மெய் எழுத்துக்களின் மீது புள்ளி வைக்க முடியாது. கி.மு. காலத்தில் எழுதப்பட்ட சங்கப் புலவர்களின் மூலச்சுவடிகள் உ.வே. சா போன்றோர் காலத்தில் கிடைக்க வாய்ப்பில்லை. மூலச்சுவடிகளைப் பார்த்து எழுதிய வழிச்சுவடிகளே இவர்களுக்குக் கிடைத்தன.



மூலச்சுவடியைப் பார்த்துப் படி எடுத்த எல்லோரும் தமிழில் விற்பன்னர்கள் அல்லர். குறைந்த ஊதியத்துக்கு எழுதியிருக்கிறார்கள். சில இடங்களில் சார்போடும் கவனமின்மையோடும் எழுதியிருப்பார்கள். இதன் விளைவாக சங்க இலக்கியங்களில் பாட வேறுபாடுகள் தோன்றியிருக்கின்றன.

சங்க இலக்கியப் பனுவல்கள் வடமொழித் தாக்கத்தால் எழுதப்பட்டவை என நிறுவும் முயற்சிகளும் இதன்வழி நிகழ்ந்தன. பரிமேலழகரின் திருக்குறள் உரையில் ஆரியச் சார்புகள் அதிக அளவில் காணப்படுகின்றன. இவரைப் போலவே குறளுக்கு உரை எழுதிய ஆர்.இராமச்சந்திர தீட்சிதர், கே.வி. இராமசாமி ஐயங்கார் போன்றோர்கள், கி.வ.ஜ போன்றோர்கள் திருக்குறளை இந்துமத நூலாக நிறுவும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

அறத்துப்பால் மனுவை அடிப்படையாகவும், பொருட்பால் அர்த்தசாஸ்த்திரத்தை அடிப்படையாகவும், இன்பத்துப்பால் வாத்சாயரின் காமசாஸ்த்திரத்தை அடிப்படையாகவும் கொண்டவை என இலக்கியப் பரப்பில் நிறுவுகிற முயற்சியில் ஈடுபட்டனர்.

இம்முயற்சிகளை முறியடிக்கும் பணியைத் தமிழ் அமைப்புகளும், திராவிட இயக்கங்களும் செய்யத் தொடங்கின. திருக்குறளுக்குப் பகுத்தறிவு நோக்கிலான உரையை எழுத திரு.வி.க தலைமையில் குழு ஒன்றை அமைத்தார் பெரியார். பாரதிதாசன், நெடுஞ்செழியன், கு.ச.ஆனந்தன், கருணாநிதி உள்ளிட்ட திராவிட இயக்கத்தினர் குறளுக்கு உரை எழுதினார்கள். காலப்போக்கில் பரிமேலழகர் உரை வழக்கொழிந்தது. மு.வ

அவர்களின் உரை தமிழ் வெகுசனப் பரப்பைச் சென்றடைந்தது.

உலகில் தனித்த சிறப்புடைய பழம்பெரும் செம்மொழித் தமிழுக்கு, காவி வண்ணம் பூசும் முயற்சி காலந்தோறும் நடந்த வண்ணம் இருக்கிறது. இன்று புறநானூற்றில் 34வது பாடல் குறித்து எழுத விரும்பினேன். இந்தப் பாடலின் ஒரு சொல் உ.வே.சா பதிப்பில் ஒன்றாகவும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்பில் வேறு ஒன்றாகவும் இடம் பெற்றுள்ளது. ஆகவேதான் இங்கு பாட வேறுபாட்டைப் பற்றிப் பேச வேண்டிய அவசியம் உருவானது.

ஆலத்தூர் கிழார் எழுதிய அந்த புறநானூற்றுப் பாடலை (சை.சி.நூ.ப.க-34) காண்போம். பாடலை வாசிப்பதற்கு முன்பாக, இப்பாடல் எழுதப்பட்ட பின்னணியைத் தெரிந்துகொள்வோம்.

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கரிகாலனின் பரம்பரையில் வந்த சோழ மன்னன். புகாரைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்டவன். கிள்ளிவளவன் ஆலத்தூர் கிழாருக்கு நிறைய பரிசுகளை அளித்தான். அவற்றைப் பெற்று விடைபெறும் கிழாரிடம், 'நீங்கள் என்னை நினைத்து மீண்டும் வருவீர்களா?' எனக் கேட்டான் கிள்ளிவளவன்.

'செய்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை. உன்னை எந்நாளும் மறவேன். உன்னைப் புகழ்ந்து பாடாவிட்டால், கதிரவன் தோன்றமாட்டான். நீ நீண்ட நாட்கள் வாழ்க!' என்று ஆலத்தூர் கிழார் சோழ மன்னனை வாழ்த்தும் வகையில் இப்பாடல் அமைந்துள்ளது. பாடாண்திணை, இயன் மொழித் துறையில் அமைந்த பாடல் இது.

`பசுவின் முலையை அறுத்து உண்ணும் பாவிகள், மகளிரின் கருவை அழித்தவர்கள், பெற்றோர்களுக்குத் தவறிழைத்தவர்கள் போன்றோரது பாவச் செயல்களுக்கும் பரிகாரம் உண்டு. ஆனால், ஒருவன் செய்த நற்செயல்களை அழித்தவர்களுக்கு அவற்றின் விளைவுகளிலிருந்து விடுதலை இல்லை! என அறநூல்கள் கூறுகின்றன. தேர்ந்தெடுத்த அணிகளை அணிந்தவளின் கணவனே! காலையிலும் மாலையிலும், புன்செய் நிலத்தில் விளைந்த புறாவின் முட்டை போன்ற, வரகரிசியைப் பாலிலிட்டுச் சமைத்த சோற்றில், தேனும், கொழுத்த முயலின் இறைச்சியும் கலந்து, இலந்தை மரத்தடியில், வஞ்சமில்லாத உள்ளத்தோடு, பாணர்கள் உண்டு மகிழ்வார்கள். அப்பாணர்களுக்குத் தனது பெருஞ்செல்வம் அனைத்தையும் அளித்த என் தலைவன் கிள்ளி வளவன் வாழ்க! என உன்னை நான் பாடவில்லை எனில், கதிர்களை உடைய கதிரவன் தோன்றமாட்டான். நான் எளியவன். தலைவா, இவ்வுலகில் சான்றோர்கள் செய்த நற்செயல்கள் உண்டாயின், இமயத்தில் திரண்ட மேகங்கள், இனிய ஓசையுடன் பெய்த பெருமழையின் துளிகளைவிட அதிக நாட்கள் நீ வாழ்க!` என்று கிள்ளி வளவனை வாழ்த்துகிறார் ஆலத்தூர் கிழார்.

சை.சி.நூ.ப.கழகம் பதிப்பித்த இப்பாடலின், 'குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும்' எனும் வரி உ.வே.சா பதிப்பில், 'பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்', என அமைந்திருக்கிறது. இது பரிமேலழகரின் உரைவழி நிகழ்ந்த பாட வேறுபாடாகும்.

பரிமேலழகரை முன்வைத்துக் குரவர் என்பதைப் பார்ப்பார் எனப் பதிப்பித்திருக்கிறார் உ.வே.சா. குரவர் எனும் சொல்லுக்குப் பெற்றோர் என்பது பொருள். மனுதர்மம் அடிப்படையில் பரிமேலழகர் அறத்தை விளக்குவதால் குரவர், பார்ப்பார் ஆகியிருக்கிறார்.

உணவில் மட்டுமல்ல, மொழியிலும் கலப்படங்கள் செய்யப்படுகின்றன. ரஷ்ய நாவல்களை மொழிபெயர்த்த நூலோர்கள் 'ஓ காட்' என்பதை ஈஸ்வரா என்றெல்லாம் மொழிபெயர்த்தார்கள்.

தமிழில் மதக்கறை படிய அனுமதிக்கக் கூடாது என்பதால்தான் செம்மொழி இலக்கியங்களை இப்படி மீள்வாசிப்பு செய்ய வேண்டியிருக்கிறது! ■

● கனகா பாலன்
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்



# சில நேரத் திருப்பங்கள்

சேவல் கூவுதோ, இல்லையோ... வள்ளியம்மைக்கு நாலரை மணியாயிடிச்சுனா படக்குனு முழிப்புத் தட்டிரும். அப்போ எந்திரிக்கிறவதான் பம்பரமாச் சுழண்டு வேலை செய்வா.

விடியுறதுக்கு முன்னாடியே தொழுவுல கெடக்கிற சாணியெல்லாம் அள்ளி நல்லாச் சுத்தப்படுத்திட்டுப் பாலைப் பீச்சி வீட்டுல கொண்டுவந்து வச்சான்னா வரிசையா ஒவ்வொருத்தரா வாங்கிட்டுப் போவாக.

வந்தமா, பாலை வாங்குனோமான்னு கிடையாது. வீட்டுக்கு வெளியில இடுப்பளவு உயரத்துக்கு கிடக்கிற ஆட்டுரலுல சாஞ்சிக்கிட்டும், வாசப்படில உட்கார்ந்துகிட்டும், ஊர்க் கதையெல்லாம் பேசிட்டுத்தான் போவாக, பொம்பளைக.

செவனைய்யாவுக்குக் கோபம் கோபமா வரும். அந்த மனுசனுக்குக் கருப்பட்டிக் காப்பிக்கு முன்னாடி ரெண்டு மூனு சொக்கலால் பீடியை இழுத்துவிடணும்னு நினைப்பாரு. உள்ள போறதும் வெளிய போறதுமா, குட்டிபோட்ட பூனைமாதிரி தட்டழிஞ்சிட்டுக் கிடந்தாரு மனுஷன்.

ஆளாளுக்கு நூறு, இருநூறு வாங்கிட்டுப் போனாகன்னா, ஏழு மணிக்குள்ள பால் வித்துரும். சாயந்திரம் நாலு மணி வரைக்கும் வீடே வெறிச்சோடிப்போயிருக்கும்.

அவுகளுக்கு பிள்ளை குட்டிக கிடையாது. நாலஞ்சு குறுக்கம் தோட்டமும் கரிசக்காடு மூனு ஏக்கரும் இருக்குறதுனால, அதுல கொஞ்சம் விவசாயத்தைக் கூலி கொடுத்து ஆளுகள வச்சிப் பார்த்துக்கிட்டும் நாலு மாடுகளையும் வளர்த்துக்கிட்டும் பொழுதக் கழிச்சிட்டு இருக்காக.

செவனைய்யா, எட்டுமணி வாக்குல நிலைவாசல் பக்கத்துல கிடந்த மூங்கில்

நாற்காலியில உட்கார்ந்துகிட்டுப் பொட்டணம் மடிச்சிக் கொடுத்த பேப்பர்ல படம் பார்த்துக்கிட்டு இருந்தாரு.

அப்போதான் சரட்டு சரட்டுனு தோல்செருப்பு தேய கோணல்மாணலா நடந்து வந்துக்கிட்டு இருந்தான் குண்டாலம். அவன்தான் அவுக வீட்ல மாடு மேய்க்கிறதுக்கு வச்சிருக்குற ஆளு.

“என்னலே! இன்னைக்குக் கொஞ்சம் நாழியாயிடிச்சி போல?”

நேரத்துக்கு வந்தாத்தானே வேலைக்கு நல்லதுனு, செவனைய்யா கடிந்து கேட்டாரு.

எப்பவும் சிரிச்சிக்கிட்டே இருக்குறமாதிரி பேசுவான் குண்டாலம். மருந்துக்குக்கூட ஒத்தப்பல்லு வாயில இல்ல. கண்ணைப் பார்த்து மட்டும்தான் கண்டுபிடிக்க முடியும், அவன் சோகமா இருக்கானா? சந்தோஷமா இருக்கானான்னு.

“ஆமாங்க ஐயா, உடம்புக்கே அசதியா இருந்துச்சி, ராவெல்லாம் ஒருபொட்டுத் தூக்கமில்லை. ஒரே வறட்டுத் தொரத்தலா வந்து உசுர வாங்கியிருச்சி”ன்னு சொல்லிக்கிட்டே... அவர் முகத்தைக்கூட ஏறெடுத்துப் பார்க்காம, கக்கத்துல இடுக்கி வச்சிருந்த வாழையிலையை முன்னாடி விரிச்சிப் போட்டு சுவத்துல சாஞ்சிக்கிட்டுக் குத்துக்காலு வச்சி சாப்பிடத் தோதா உட்கார்ந்துக்கிட்டான்.

குண்டாலத்தோட சத்தத்தைக் கேட்டுட்டு “அட, என்னப்பா இப்படி சொல்லுதே. நீ படுத்துக்கிட்டேன்னா எங்க மாடுகளை யாரு பாத்துக்கிடுவா”ன்னு வள்ளியம்மா சீறிக்கிட்டு வெளிய வர,

“அட கூறுகெட்டவளே, அவனும் மனுசன்தானே. அவன மட்டுமென்ன இரும்புலயா செஞ்சிருக்கு. போ... போ...”ன்னு வள்ளியம்மையை விரட்டினாரு செவனைய்யா.

முகத்தைச் சிலுப்பிக்கிட்டுக் கொசுவம் வச்சிக் கெட்டுன அந்த ராமர் பச்சை கலரு சேலை முந்தானையைச் சுருட்டி இடுப்புல செருகிக்கிட்டு வீட்டுக்குள்ள போனா.

உள்ள போனவ தோசை, தேங்காய்ச் சட்னி, கூடவே எள்ளுப்பொடியும் கொண்டுவந்து இலையில வச்சிட்டு அடுப்படிக்குள்ள போயிட்டா.

அவன் வாய்க்குள்ள தோசையைப் பிச்சிப் போட்டாம்னா, அது என்னடான்னா பிதுங்கிப் பிதுங்கிப் வெளியே வரும். பல்லு இருந்தாத்தானே மெல்லுவான். ஒருவழியா தண்ணியக் குடிச்சிக் குடிச்சித் தோசையை முழுங்கிட்டான் குண்டாலம்.

“இந்தாப்பா, இதைக் குடிச்சிட்டுக் கிளம்பு”ன்னு வள்ளியம்மை சுக்கு, கொத்தமல்லி, கிசுமுசு போட்டு, கருப்பாகக் கசாயம் வச்சிக் கொடுத்துட்டு நின்னா.

“என்னடா இவ. கோபமா உள்ள போனவ ஒரு தாயிமாதிரி இருந்துல்ல அவனுக்குச் செய்யுறா. இந்தப் பொம்பளைகள புரிஞ்சிக்கவே முடியாது”ன்னு மனசுக்குள்ள சொல்லிக்கிட்டாரு செவனைய்யா.

டம்ளரைக் கையில் நடுங்கிக்கிட்டே வாங்குன குண்டாலம், “எம்மா, எதுக்கும்மா இதெல்லாம்..”னு சொல்லிக்கிட்டே, ஆள்காட்டி விரலை டம்ளருக்குள்ள விட்டு கசாயத்தை அண்ணாக்கக் குடிச்சான்.

“ஏலே, குண்டாலம். உன் தம்பி அம்மணையன் ஊரைச் சுத்திக்கிட்டுக் கிடக்கான். எந்நேரமும் சின்னப் பிள்ளைகளை பயப்பட வச்சிக்கிட்டுத் திரியுறானே. கூடமாட அவனையும் மாடு மேய்க்கக் கூட்டிட்டுப் போகலாம்ல. உனக்கும் இந்தமாதிரி நேரத்துல ஒத்தாசையா இருக்கும்ல”ன்னு செவனைய்யா சொல்ல,

“ஐயா, அவனுக்குக் கூறு காங்காது. முரட்டுப் பய வேற. திடீருனு கம்பு எடுத்து மாடுகளை விளாசித் தள்ளிருவான். பாவமய்யா வாயில்லா சீவனுக. அதுவும் போக, வேகாத வெயில்ல அவன் எதுக்குய்யா... வீட்டக் காத்திட்டு கிடக்கட்டும்”னு சொல்லிக்கிட்டே, முட்டில கைய வச்சிக்கிட்டுத் தள்ளாடி எழுந்தான்.

“எம்மா, நான் போயிட்டு வாரேன்.”

“சாயங்காலம் கம்பவுண்டரு ஊருக்குள்ள வந்தா, ஒரு ஊசியைப் போட்டுறணும். அப்போத்தான் எம் பேச்சைக் கேட்கும் இந்த

உடம்பு"ன்னு வாய்க்குள்ள முணுமுணுத்துப் போனவனை, "இன்னைக்கு நீ மாடு மேய்க்கப் போகவேண்டாம்"னு ஆறுதலுக்கு ஒரு வார்த்தைகூட சொல்லல, அந்த ரெண்டு பெருசுகளும்.

வெளிச் சுவத்துல சாத்தி வச்சிருந்த அந்தப் பெரிய கம்பை எடுத்துக்கிட்டு, தெக்காம தொழுவத்துப் பக்கம் கிளம்புனான் குண்டாலம்.

திடீருனு செவனைய்யா குரலு கொடுத்தாரு, "ஏலே, இன்னைக்கு எந்தப்பக்கம் மாட்டைப் பத்திட்டுப் போற. ஓட்டக்குளத்துக்கு ஓரமா போயிட்டு வா. எந்தப் பிஞ்சையிலும் ஏடாகூடமா மாடுக உள்ள புகுந்துராம பார்த்துக்கோ..."

"சண்டைக்கு வந்துறப் போறாகலே. இந்தா, இதை வாயில போட்டுக்க"ன்னு வீட்டுக்குள்ள டப்பால கிடந்த நாலைஞ்சி தேன்மிட்டாய கையில கொடுத்தனுப்பினாரு செவனைய்யா.

தேங்கா நாருல சாம்பலைத் தொட்டு, கரிப் பிடிச்ச சட்டிகளையெல்லாம் சர்ரு சர்ருனு தேச்சிக் கழுவிக் கவுத்துப்போட்டா வள்ளியம்மை.

ஊருக்கு மத்தியில இருக்குற மந்தையில பொழுதுக்கும் உட்கார்ந்து சீட்டு விளையாடுறதுதான் செவனைய்யாவுக்குப் பொழுதுபோக்கு. படிக்கலைன்னாலும் ரேடியோவும் டீ.வி.யும் பார்த்து அரசியல் நல்லாப் பேசுவாரு. சிரிச்சிக்கிட்டே, பிடிக்காத அரசியல்காரங்களை வார்த்தையாலே வகுந்து எடுத்துடுவாரு. இதைக் கேட்குறதுக்குன்னே நாலைஞ்சி கிழடு கெட்டைக அவரை எதிர்பார்த்துக் காத்திருப்பாக.

"வாருமய்யா. இம்புட்டு நேரம் என்ன பண்ணீரு"ன்னு உரிமையா ஆரம்பிச்சி, ஒருத்தருக்கொருத்தர் பேச, அந்த இடமே களை கட்டுச்சு. நேரம் போறதுகூட தெரியாம அவுகவுக பேசிட்டு இருந்தாக.

"சித்தம் போக்கு சிவன் போக்குன்னு நீரு பாட்டுக்கு இங்க வந்து உட்கார்ந்தீட்டுரு. மாடு அவுத்துட்டுப் போனவனை ஏச்சிட்டு, மாடுக எல்லாம் நாலா திசைக்கும் ஓடிப்போச்சாம்."

"பிஞ்சைக்குள்ள போய் நாசம் பண்ணிருச்சேன்னு ஆளாளுக்கு சண்டைக்கு வருவாகளே என்ன செய்ய. இப்போ எந்தத் திசையில எந்தக் காட்டுல கிடக்கோ. வாரும், போவோம்..."னு வெளமெடுத்துப் போய் அவரை வஞ்சிக்கிட்டே முன்னாடி வேகமா நடந்தா வள்ளியம்மை.

"என்ன கழுதை சொல்லுத. காலையிலயே அவன் ஆள் சரியில்லை. மாடுமேய்க்க போக வேண்டாம்னு சொல்லலாம்னு நினைச்சேன். நீ பேராசைப்பட்டு வைத்தியமெல்லாம் பாத்து மாட்டோட அவனையும் காட்டுக்குப் பத்தணும்னே குறியோட இருந்த. மனுஷனாப் பொறந்தா மனிதாபம் வேணும் கிறுக்கி"ன்னு, பொரிஞ்சிக்கிட்டே நடையை வீசிப் போட்டாரு செவனைய்யா.

அவரு சொன்ன எதையும் வள்ளியம்மை காதுல வாங்கிக்கல. பதைபதைக்க ஆளாளுக்கு ஒரு மூலையில பிரிஞ்சித் தேடிக்கிட்டே போனாக. இவுகளோடு இன்னும் இரண்டு மாட்டு வீட்டுக்காரர்களும் சேர்ந்துக்கிட்டாக.

நல்லா, மத்தியான வெயிலு நேரம். வயசு ஏறிப்போனதுல காடெல்லாம் தேடி அலுத்துப் போயிட்டா வள்ளியம்மை. ஒரு வேப்ப மரத்துக்குக்கீழ வேர்த்து ஒழுகுற மூஞ்சியை சேலை முந்தானையால தொடச்சிக்கிட்டு, ஒரு கையை நெத்திமேல அணை கட்டுறமாதிரி வச்சிக்கிட்டு சுத்திசுத்திப் பார்த்தா.



கண்ணுக்கெட்டுற தூரம்வரை அவகூடத் தேடப்போன மனுசங்களையும் காணோம். மாடுகளையும் காணோம்.

அது ஒரு ஒற்றையடிப்பாதை, ஒரு சைக்கிள் போகலாம். அவ்வளவுதான் அகலமிருக்கும். ஆளுக நடந்து நடந்து பாதையாகிக் கிடந்தது.

"எம்மா... என்ன இங்க இருக்கீக, மாடுகளைத் தேடி வந்தீகளா? அதையெல்லாம் கண்டுபிடிச்சி வந்துக்கிட்டு இருக்காக ஐயா. நீங்க போங்கம்மா வீட்டுக்கு"ன்னு சைக்கிள்ல வந்து தொரைச்சாமி சொன்னான்.

"மாடுக கிடைச்சிரும் ராசா. எனக்குத் தெரியும். அந்தப் பய குண்டாலம் எங்க கிடக்கானோ. காலையிலயே ஒருமாதிரியா இருந்தான். அவனுக்கு என்ன ஆச்சோ, ஏது ஆச்சோ"ன்னு கண்ணீர் வராத குறையா வருத்தப்பட்டுச் சொன்னா.

"எய்யா, தொரைச்சாமி. நான் உன் சைக்கிள்ல உட்காந்துக்கிறேன். அவனை ஒரு சுத்துத் தேடிட்டு வருவோமாய்யா"ன்னு கேட்டா, வள்ளியம்மை.

"சரி, வாங்கம்மா. பெரிய கேரியலுதான். மெல்ல ஏறி உட்காருங்க"ன்னு அவ உட்கார்ந்த பிறகு கொஞ்சதூரம் சைக்கிள உருட்டி ஜங்குனு சைக்கிளை ஓட்டுனான்.

இரண்டுபேரும் ஒத்த வார்த்தை பேசாம, சுத்திமுத்தித் தேடிட்டே போனாக.

"நிறுத்தப்பா! நிறுத்தப்பா. அந்தா கிடக்காம் பாரு நம்ம குண்டாலம். அடக் கடவுளே, உனக்குக் கருணையே இல்லையா. எம் புள்ளைக்கு இந்தச் சோதனையக் குடுத்திட்டியே"ன்னு எந்திக்க முடியாம, வலியில முணங்கிக் கிடந்த குண்டாலம் பக்கத்துல ஓடுனா, வள்ளியம்மை.

"ஏ ராசா, எந்திரி ராசா..."

"அடேய், தொரைச்சாமி. அந்த மோட்டரு தொட்டியில தண்ணியிருந்தா வெரசா மோந்துட்டு வாடா"ன்னு அவனை விரட்டுனா.

குண்டாலம் தலையைத் தன் மடியில வச்சித் தண்ணிய மூஞ்சியில சலுப்பு சலுப்புனா ஓங்கி ஓங்கித் தெளிச்சா, வள்ளியம்மை.

பாதிக் கண்ணைத் திறந்தவன், "மாடுகளைத் தேடுங்க, போங்க"ன்னு, கண்ணச் செருகிக்கிட்டே சொன்னான்.

"குண்டாலம், அடேய் குண்டாலம்... மாடெல்லாம் நல்லாயிருக்கு. நீ கண்ணத் தொறடா"ன்னு கத்துனா.

கொஞ்சநேரத்துல மாடுகளோட தேடிப்போன ஆளுகளும் வந்துட்டாக. ஊருக்குள்ளயிருந்து மாட்டு வண்டிய வரவழைச்சி, பக்கத்து ஊரு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்ச் சேர்த்துட்டாக. ஒருபொட்டு கண்ண மூடாம, அவன் பக்கத்திலயே உட்கார்ந்துக்கிட்டு அவனையே பார்த்துட்டுக் கிடந்தா வள்ளியம்மை. செவனைய்யாவும் அவனப் பாக்க உள்ள வர்றதும், ஆஸ்பத்திரிக்கு வெளியில போறதுமா இருந்தாரு. மறுநாள் காலையில நல்லா முழிச்சிப் பார்த்தான்.

"எம்மா, நீங்க எங்கம்மா இங்க..."ன்னு குண்டாலம் சொன்னதும்..

"என்னை மன்னிச்சிருப்பா. உடம்பு சரியில்லாத உன்னை எங்க சுயநலத்துக்காக வேலை வாங்க அனுப்பிட்டேன். அதுக்குத்தான் கடவுள் எனக்குப் பாடம் நடத்த உன்னைக் கஷ்டப்படுத்திட்டாரு. என்னை மன்னிச்சிரு"ன்னு மறுபடியும் ஒரு தடவை கண்ணீர்விட்டுச் சொன்னா வள்ளியம்மை.

குண்டாலம் திகைச்சிப் போயிட்டான்.

"அடக் கழுத, எதுக்கு இப்படிப் பேசுற. அவன் நம்ம புள்ளைத்தா. அப்பனுக்கும் ஆத்தாளுக்கும் வேலை செய்யாம யாருக்கு செய்யப்போறான்"ன்னு, கோபுரத்துல உசத்தி வச்சிட்டாரு செவனைய்யா.

அவுகள, தெய்வமா நினைச்சிக் கையெடுத்துக் கும்பிட்டான் குண்டாலம். ஆனா அந்தப் பிள்ளைக இல்லாத பெருசுக இரண்டுக்கும் இப்போ அவன் மாடு மேய்க்கிறவனாத் தெரியல. மடியில பிறந்த மகன் மாதிரிதான் தெரிஞ்சான்.

பல்லு இல்லாத அந்த நாற்பது வயது பொக்கைவாய் குண்டாலத்துக்கு அறுவது வயசு அப்பனையும் ஆத்தாவையும் பார்க்குறமாதிரியே இருந்துச்சி. ■

**கோ.அருண்பிரகாஷ்,**
எஸ்.எம்.ஆர். கல்வியியல் கல்லூரி,
திருச்சி.

# க.மு. - க.பி.




**பொ**துவாகக் காலத்தைக் கி.மு - கி.பி என வகுப்பார்கள். ஆனால் நான் வாழ்ந்த நாட்களையும் வாழும் நாட்களையும் க.மு - க.பி என வகுக்க நேரிட்டது. ஆம் 'கழிவறை இருக்கை'க்கு முன் - 'கழிவறை இருக்கை'க்குப் பின். இந்த நூலை எனது தோழர்கள் கோகுல் மற்றும் இரவிக்குமார் எனக்குப் பரிந்துரைத்தார்கள். முதலில் தலைப்பைக் கேட்டவுடன் கழிவறை பற்றிய புத்தகமா....? என்ன இருக்கப்போகிறது என்றே எண்ணினேன். புத்தகம் வாங்குவதற்கு முன் ஒரு பக்கம் வாசிப்போம் என வாசித்தேன். பிறகு நேசித்தேன். நித்தம் சுவாசித்துக்கொண்டே இருக்கிறேன்.

அப்படி என்னதான் இருக்கிறதென்றால், வேறொன்றுமில்லை..

- காமம் சார்ந்த தெளிந்த நீரோடை இதில் ஓடிக்கொண்டிருக்கிறது.
- இதுவரை பெரியாரே பேசாப் பெண்ணியம் இதிலுண்டு.
- உரிமைகளில் மட்டுமில்லாமல் உணர்வுகளில் அடிமைப்படுத்தப்பட்ட எத்தனையோ பெண்களின் செந்நீர் வங்கிகள் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன.
- காமப்பசியால் அலையும் காட்டேறிப் பேய்களை அடித்துத் தோலுரிக்கும் சாட்டைக் கோடாங்கியாக விளங்குகிறது.
- ஆணுக்கு மட்டுமே காமம் என்னும் உணர்வு என்ற போலி ஆவணத்தைக் கிழித்து காலி செய்துள்ளது.
- பெண் என்பவள் இன்றைக்கும் ஆண்களின் கழிவறை இருக்கையாகப் பயன்படுத்தப்படுகிறாள் என்பதை மிக அழுத்தமாய் ஆணாதிக்கச் சமூகத்திற்கு எடுத்துரைத்துள்ளது.

இதுவரைக்கும் இந்தச் சமூகத்தில் நான் உட்பட காமம் என்ற சொல்லாடலைத் தீஞ்சொல் என்றே தவறான பார்வையில் பார்த்தோம். இனிய செயல்களைக் குறிக்கும் சொல் இன்சொல். காமம் என்ற உணர்வு இனிமையாக இருக்கும்போது அதனைக் குறிக்கும் சொல் மட்டும் எப்படி தீஞ்சொல்லாக முடியும் என்ற கேள்வியை நமக்குள்ளாகவே கேட்கவைக்கிறது. ஒருவேளை அது தகாதவையாக இருந்திருந்தால் கோயில்களிலும் கோயிலின் கோபுரங்களிலும் நம் முன்னோர்கள் ஏன் அதனை வடித்திருக்கப்போகிறார்கள்? என்பதையும் உணர்த்தியுள்ளது. காமம்

என்பது மனிதத்தோடு தொடர்புடையது. அது தெளிவுபடும்போது புனிதமடைகிறது. ஆதலால், காமம் புனிதமானது என்ற புரிதலைக் கொடுக்கிறது.

எழுத்தாளர், தலைப்பை ஆறாவது அத்தியாயமாக வைத்துள்ளார். இந்தத் தலைப்பை மிகவும் கவனமாய் அணுக வேண்டியிருந்தது. எப்பா...! இத்தனை துயரத்திற்கா ஆண்களால் பெண்கள் பாதிப்படைகின்றனர் அதுவும் உணர்வுகளால்! ஆண்கள் காம உணர்வுகூட அவர்களுக்கே உரியது என்றும் பெண்ணுக்கு அந்த உணர்வே இல்லாதது போன்றும் தவறாக எண்ணி வாழ்கிறார்கள் என்பதையும் உணர்த்துகிறது கழிவறை இருக்கை. ஆண்கள் தங்களின் தேவைக்கு / ஆசைக்கு / உணர்வு கலங்கி உச்சமடைந்தவுடன் உறங்குகிறார்கள். அதன்பின் தூண்டிவிடப்பட்ட பெண்களின் தூய ஆன்மாக்கள் திரிந்து அலைகிறது. ஓ... அதனால்தான் பெண்களைப் பேய், ஆவி என்கிறார்களோ...?

அப்படியானால் பெண்களை ஆவிகளாக்கிய பாவிகளே ஆண்கள்தான் என்ற போக்கியலை எடுத்தியம்புகிறது.

அன்பு என்பது இயற்கையாகத் தோன்ற வேண்டும். வற்புறுத்தலால் ஒருபோதும் அன்பை உருவாக்கலாகாது. காமம் என்பது கரைபுரண்டோடும் காதலால் வருவது. இப்படி இருக்கும்போது இந்தச் சமூகம் திருமணம் என்ற உடன்படிக்கையால் அறிமுகம்



இல்லா இருவரைக் கலவியில் ஈடுபடுத்துதல் எந்த விதத்தில் சரியாகும்...? கலவி என்பது உடல் சார்ந்தது மட்டுமில்லை உணர்வு சார்ந்தது என்று ஆண்களுக்குப் புரியாதவரை பெண்கள் கழிவறை இருக்கையாகவே பயன்படுத்தப்படுவார்கள் என்று பெண்களின் பெருந்துயரத்தை மௌன ஒப்பாரியாய் ஓலமிடுகிறது.

நட்பு பற்றிய துல்லியப் பார்வையைக் கொடுக்கிறது. 'நட்பு நம்மைச் சிறைப்படுத்துவதில்லை. நம் மீது எதையும் திணிப்பதில்லை. எனக்கு மட்டும் நீ என வசனம் பேசுவதில்லை. ஏனென்றால் நட்பு இயற்கைத்தன்மை கொண்டது. எல்லா உறவுகளுக்கும் நட்பே அடித்தளம்' என்கிறது. 'நட்பில் நாம் ஒருவரை ஒருவர் கட்டுப்படுத்த நினைப்பதில்லை. ஆனால் உறவுக்குள் என் கட்டுக்குள் நீ என்றோ, எனக்காகவே நீ என்றோ ஒரு செயற்கையான கயிற்றைக் கட்டிவைக்க விழைகிறோம். இந்தச் செயற்கைக் கயிறே பல பிரச்சனைகளுக்குக் காரணியாக விளங்குகிறது. எந்த வகை உறவுகளாயினும் நட்பே அடித்தளம் ஆகட்டும்' என்கிறது.

ஒருநாள் என் தம்பி நவீனும் நானும் விவாதித்தபோது ஆண்கள் பெண்களை வன்புணர்வு செய்தால் ஆண் இனத்தையே சாடும் இந்தச் சமூகத்தில் பெண்கள் ஆண்களை வன்புணர்வு செய்வதில்லையா...? என்ற கேள்வியை முன் வைத்தான். நான் வேறு எங்கும் எதிலும் தேடி பதில் சொல்லவில்லை. கழிவறை இருக்கையை எடுத்தேன். அவன் கையில் கொடுத்தேன். பக்கம் 57, 2வது பத்தியை வாசிக்கச் சொன்னேன். புரிந்துவிட்டது என்ற பொருளில் மௌனித்தபடியே இடம் நகர்ந்தான்.

அரசு சொல்லுகிறது வீட்டுக்கொரு 'கழிவறை இருக்கை' இருப்பின் சமூகமும் சுற்றுப்புறமும் தூய்மையாக இருக்கும் என்று. 'லதா' அம்மாவின் இந்தக் 'கழிவறை இருக்கை' வாசிக்கும் நம் ஒவ்வொருவரின் உள்ளத்தைத் தூய்மித்து, பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்புகள் கொடுக்கக் கற்றுத்தருகிறது.

காமம் சார்ந்து இனியும் எத்தனை நூல்கள் வந்தாலும் 'கழிவறை இருக்கைக்கு என்றும் அரியாசனமே'! ■

● ஆதிரன்



# மனநிலைக் குறிப்புகள்-16

## தத்துவ மனநிலை

பொதுவாக தத்துவம் என்றாலே மனித வாழ்வு குறித்தும் சமூகம் குறித்தும் பேசப்படுபவைதான் இல்லையா? அதேநேரம் மனிதன் சமூகத் தத்துவத்தை அறிவியல்ரீதியாக அணுகியதும் சமூக விஞ்ஞானம் மனிதத் தத்துவத்திற்குப் புதுப்பாதையை வழிவகுத்தது. இதிலிருந்து பல்வேறு வகையான அறிவியல் தத்துவங்கள் உண்டாக்கப்பட்டு மிக விரிவான, எளிய மனிதரால் கற்பனை கூட செய்யமுடியாத அளவிற்கு ஆராயப்பட்டன. தர்க்கரீதியாக அவற்றின் முடிவுகள் மனிதப் புரிதலினைத் தலைகீழாக்கின. அல்லது தொடர்ந்து நிறைய கண்டுபிடிப்புச் சாதனைகள் உருவாக்கப்பட்டன. மொத்தத்தில் அறிவியல் தத்துவங்கள் சமூகத் தத்துவங்களை மிகக் கடுமையான கேலிக்குள்ளாக்கின என்றால் அது மிகையில்லை.

எனைப் பொறுத்தவரையில் அறிவியல் தத்துவங்கள் அடிப்படை அலகாக காலம், வெளி மற்றும் பொருள் *(time, space and matter)* ஆகியவற்றைக் கொண்டுள்ளன எனலாம். காலம் பற்றிய அறிவியலும் பிரபஞ்ச வெளி பற்றிய அறிவியலும் வெகுசன மக்களிடமிருந்து வெகு தூரத்தில் இருக்கின்றன. ஆனால் மனிதர்களின் அளவிடமுடியாத அறிவியல் தத்துவங்கள் உண்மையில் மிகப் பிரமாண்டமான பாய்ச்சலை மனித குலத்தினிடையே நிகழ்த்தியிருக்கின்றன. உலகத்தின் அனைத்துப் போதைகளையும் விட அறிவுப் போதையும் அதனடிப்படையில் மனிதனுக்குள் நிகழும் அதிகாரப் போதையும்

அதிகம் சக்தி வாய்ந்தன. இருக்கட்டும் இந்தப் பத்தியில் சற்று வித்தியாசமான சில அறிவியல் தத்துவங்கள் பற்றிய அறிமுகம் பார்க்கலாம்.

ஒரு சிறந்த நடிகரான கீனு ரீவ்ஸ்-இன் 'மேட்ரிக்ஸ்' படங்களை நமது திரையரங்குகள் மக்களின் பார்வைக்குத் தெறிக்கவிட்டிருந்தனர். அந்தத் திரைப்படம் நான்கு வகையான அறிவியல் தத்துவங்களின் கலவையில் உருவாக்கப்பட்ட திரைக்கதையினாலானது. பொதுமக்களின், குறிப்பாக உழைக்கும் வர்க்கத்தின் சமூகத்தினைப் பற்றிய புரிதல் என்பது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினால் உருவாக்கப்பட்ட 'மிகையுணர்வு யதார்த்தம்' *(hyper reality)* ஆகும். மனிதனின் தவறான 'தன்னுணர்வினால்' *(self-conscious)* நம்பப்படும் நுகர்வுப் பண்பாடு *(consumer culture)* அது. இந்தத் தத்துவம் மிகை யதார்த்தத்தின் அடிப்படையிலானது. இது பற்றிய விரிவான ஆய்வினைத் தனது *Simulacra and Simulation* என்கிற புத்தகத்தில் ஆராய்கிறார் *Jean Baudrillard.*

நுகர்வுப் பண்பாடு எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதற்கான எளிய விளக்கமாக நமது விளம்பரங்களில் ஒருங்கிணைத்துச் சொல்லப்படும் 'ஆரோக்கிய உணவு' பற்றிய பிரச்சாரத்தைக் கூறலாம். உள்ளூர் பலகாரங்கள் எதுவும் ஆரோக்கியம் இல்லாதவை மாறாக அவர்கள் உற்பத்தி செய்யும் அனைத்தும் 99.99 சதம் ஆரோக்கியமானவை என்கிற யதார்த்த உருவாக்கம். இது குழந்தைகளின் அறிவில் என்னவகையான தாக்கத்தை உருவாக்குகிறது என்பதுதான் ஒட்டுமொத்த நோக்கம். அவர்கள், குழந்தைகளை நுகர்வோர் ஆக்குவதன் மூலம் எதிர்காலத்தின் லாபத்தை உறுதி செய்கிறார்கள். அவ்வளவே.

இரண்டாவதாக பிளாட்டோவின் குகை உருவகத் தத்துவம் *(Plato's Allegory of the Cave).* 'என் கனவில் பட்டாம்பூச்சி வருகிறதா அல்லது பட்டாம்பூச்சியின் கனவில் நானிருக்கிறேனா?' என்கிற பிரசித்திபெற்ற வாக்கியத்தின் வேறுவகை விளக்கம் பிளாட்டோவுடையது என்று சற்று எளிமையாக வரையறுக்கலாம். மனிதனை உள்ளடக்கிய இந்த உலகம் தன்னியல்பானதா அல்லது வேறொன்றின் கட்டுப்பாட்டில் இயங்குகிறதா? கடவுள் என்ற கருத்தாக்கத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. ஏனென்றால் பிரபஞ்ச வெளியிலிருந்து பரவிக்கொண்டிருக்கும் அண்டக்கதிர்களை *(cosmic rays)* விஞ்ஞானிகள் கணக்கில் கொள்கிறார்கள். நமது வெளியில் திரியும் அதிசக்தி கொண்ட புரோட்டான்களை *(please refer 'Greisen–Zatsepin–Kuzmin limit')* விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இதுதான் மனித வெளியில் இதுவரையில் கண்டறியப்பட்டுள்ள மிகமிகச் சிறிய பொருள். பூமி சார்ந்த பிரபஞ்சத்தில் இதன் இருப்பின் தேவையைப் பற்றிய புரிதலுக்கு மனித இனம் இன்னும் வந்தடையவில்லை.

1641இல் ஃப்ரஞ்சு தத்துவவியலார் டெகார்டே*(rené descartes)*வால் எழுதப்பட்ட *Meditations on First Philosophy* என்ற புத்தகத்தினடிப்படையில் சில விசயங்களை மேற்படி படத்தில் விவாதிக்கின்றனர். 'நான் சிந்திக்கிறேன். அதனால் நான் இருக்கிறேன்...' என்ற புகழ்பெற்ற வாக்கியத்தை இவர் இந்தப் புத்தகத்தில்தான் எழுதினார். எனது கனவுகளை என்னால் கட்டுப்படுத்தவியலாதபோது எனது புலனுணர்வை எப்படி நம்புவது என்று கேள்வியை எழுப்பிய டெகார்டே ஏன் நம்மை ஒரு அயல் பிசாசு *(evil demon)* கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடாது என்று கேள்வி எழுப்பினார். இந்தக் கேள்விதான் மேட்ரிக்ஸ்-இன் அடிப்படை.

ஆக, 1. மனிதவகைப் பிரபஞ்சம் வெளியின் ஒரு துகள் கட்டுப்பாட்டில் உள்ளதா? 2. மனம் மட்டும்தான் உள்ளது மற்ற எதுவும் இல்லையா? நாம் பார்க்கும் அனைத்தும் யதார்த்தத்தின் நிழல் மட்டும்தானா? 3. இங்கு அனைத்தும் ஒன்றேதானா? மேலும் இங்கு நடப்பவை எல்லாம் ஒரே நேரத்தில் நடக்கிறதா? (அதாவது கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் எல்லாம் ஒரே நேரத்தில் நடக்கிறதா?) என்கிற கேள்விகளை முன்வைத்துப் பிரபஞ்ச அறிவியலாளர்கள் மேற்கொள்ளும் ஆய்வின் தத்துவ விளக்கங்கள் இவை. இவை எளிய கடவுள் நோக்கிய தத்துவமென்று தயவுசெய்து புரிந்துகொள்ள வேண்டாம். ஏனென்றால் இவை அனைத்திற்கும் பொருளடிப்படையிலான

மாதிரிகள் உண்டு. ஒருவகை மிகஅதிக சக்திவாய்ந்த அண்டக்கதிர் ஒன்றின் பெயரே 'O my God' particle என்றுதான் வைத்திருக்கிறார்கள். ஏனென்றால் உணர்ச்சிப் பெருக்கின் உச்சியில் அம்மாவிற்குப் பின் கடவுளே என்கிற பதம்தான் மனிதனால் உச்சரிக்கப்படுகிறது. நம்பமுடியாத நிகழ்விற்கு நேரடி சாட்சியாக 'அம்மாவும்' இல்லாத ஒன்றாக 'கடவுளும்' இருக்கிறார்கள். இதுபோன்ற தத்துவங்களின் அடிப்படையில் நிறைய திரைப்படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மனிதன் தனது ஒட்டுமொத்தப் பயணத்தில் எந்த யதார்த்தத்தை நோக்கிப் பயணிக்கிறான் என்பதில் எனக்கு ஆச்சர்யம் கலந்த சுவாரஸ்யம் உண்டு. ஏனென்றால் தத்துவத்தின் அடிப்படையில் உண்மை என்பது ஒருமை அல்ல.

• •

## இலக்கிய மனநிலை

உலகில் பல்வேறு வகையான பழங்குடி மற்றும் நாட்டார் பாடல்கள் தோற்றம் பெற்றுள்ளன. தமிழின் நாட்டார் பாடல்கள் மிகுந்த சொற்செறிவையும் படிமங்களையும் கொண்டு விளங்குகின்றன. பெரும்பான்மையான பாடல்கள் காமத்தின் தனிமையைப் பாடுபவை என்றாலும் இயற்கை சார்ந்த சடங்குப் பாடல்களில் நிலம் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற்றிருப்பதையும் காணலாம்.

தமிழின் தனிப்பாடல்களில் கையில் கிடைத்தவையே பெரும் பொக்கிசமாக இருக்கின்றன. மேலும் அவற்றினூடாக ஆதிமனிதப் புலனுணர்வுகளையும் நேரடியான மொழிச் சொற்களையும் பாதுகாக்க முடிகிறது.

பழங்குடிகளின் வழக்காறுகள் மனிதச் சமூகத்தின் ஆதிப்பண்புகளை அதன் முழுக் கூறுகளுடன் பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றன என்பதைப் பல்வேறு ஆய்வாளர்கள் தொடர்ந்து கவனப்படுத்தி வருகிறார்கள்.

போலவே உலகம் முழுவதுமே இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலாக பெண்கள் தங்கள் வழக்காறுகள் மூலமாக நிறைய பாடல்களைப் புனைந்துள்ளனர். தமிழின் பெண்பாற் புலவர்களின் வரலாறு தனித்துவமானது. பழங்குடிச் சடங்குகளில் பாடப்படும் பாடல்களில் இன்றளவும் பழங்கூறுகள் நிறைந்துள்ளதுடன் நடைமுறையில் மறைந்துபோன மூலச்சொற்கள் அப்படியே உபயோகப்படுத்தப்படுவதைக் காணமுடிகிறது. இங்கு நான் ராமச்சந்திர குஹாவின் புத்தகமான 'வெர்ரியர் எல்வினும் அவரது பழங்குடிகளும்' என்கிற பிரசித்திபெற்ற நூலில் இடம்பெற்றுள்ள கோண்டு பழங்குடிகளின் நாட்டார் பாடல்களை எடுத்தாண்டுள்ளேன். நன்றி.

..

உனக்கு இந்தக் கிராமம்

நிலவைப்போல நேசமானது

பெரும் நகரத்திலிருந்து என்னை

இழுத்து வந்திருக்கிறாய்

இங்கே உனக்குக் காகிதம் வேண்டுமென்றால்

உன் உடைகளைத்தான் கிழிக்க வேண்டும்

எழுத மை வேண்டுமெனில்

உன் கண் மையைத்தான் எடுக்க வேண்டும்

இருந்தாலும் இந்தக் கிராமம்

உனக்கு நிலவைப்போல நேசமானது

•

வீட்டுக்கு வெளியே பார்த்துக்கொண்டிருக்கிறேன்

சூரியன் மலைக்கு மேலே

மூங்கில் தண்டின் உயரத்தில் இருக்கிறான்

இவ்வளவு தாமதமான பிறகு

நீ எங்கே போக முடியும்?

என்னை இதயத்தில்
பிணைத்துக்கொண்டிருக்கும்

என் காதலா..

காற்றில் காய்ந்து அசையும் வாழையிலை போல

நீ எப்போதும் காற்றில் விலகிவிடுகிறாய்

மீண்டும் நெருங்குகிறாய்,

இவ்வளவு தாமதமான பிறகும்

நீ எங்கே போக முடியும்?

•

தேர்ந்தெடுக்கப்பட்ட கற்களால்

ஒரு அரண்மனை உருவாக்கப்பட்டிருக்கிறது

கதவுகளும் கற்களால் அமைக்கப்பட்டிருக்கிறது

ஒவ்வொரு மூலையிலும் விளக்குகள் ஒளிவிடுகின்றன

ஆனால் ஒரு பெண் இல்லாமல் உள்ளே எங்கும் இருள்

புதிய பாதையின் முன் வேகமாய் உருளும் சக்கரங்கள்

அதுமாதிரி என்னால் உன்னை

என் இதயத்திற்குள் இழுக்க முடியுமா?

உள்ளே ஒரு பெண் இல்லாமல்

வீடு இருண்டிருக்கிறது.

••

## ஓவிய மனநிலை

இரண்டாயிரத்து ஐநூறு வருடங்களுக்கும் மேலான பண்பாடு கொண்ட வார்லி பழங்குடியினரின் ஓவிய வகைப்பாடு மிகமிக அழகானது. விக்கிபீடியாவின் பத்தியை நகல் செய்து அளிக்கிறேன். அதுவே போதுமானதாக உள்ளது. இந்த ஓவியங்களின் கொண்டாட்டமும் கோலாகலமும் பார்ப்பவர்களிடம் உடனே தொற்றிக்கொள்ளும் சிறப்பு வாய்ந்தன.

விக்கிபீடியா: ‘வார்லி ஓவியம் *(Warli painting)* என்பது ஒரு பழங்குடியின மக்களின் ஓவியக் கலையாகும். இக்கலை இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மகாராட்டிரம், குசராத் மாநில எல்லைப்பகுதியில் வாழும் ஆதிவாசிகளான வார்லி மக்களால் வளர்க்கப்பட்ட கலையாகும். இந்த ஓவியக் கலைக்கும் இந்தியாவின் பிற வட்டார ஓவியக் கலைக்கும் மிகப் பெரிய வித்தியாசம் என்னவென்றால் இந்த வார்லி ஓவியக் கலையில் தெய்வ உருவங்கள் உருவாக்கப்படுவதில்லை; மேலும் இதில் இந்து மதச் சடங்குகளோ வழிபாடுகளோ இல்லை என்பது இதன் தனிச்சிறப்பு. இது தற்போது இந்தியா மட்டுமல்லாது உலகம் முழுவதும் பரவியுள்ளது. யசோதர தால்மிய என்பவரின் புத்தகமான வார்லிகளின் ஓவிய உலகம் என்ற நூலில் வார்லி ஓவியக் கலை கி.மு. இரண்டாயிரத்து ஐநூறு முதல் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஓவியப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியைக் கொண்டது, தொன்மையுடையது என்று கூறப்பட்டுள்ளது. மனிதன் குகைகளை வசிப்பிடமாகக் கொண்டிருந்த காலகட்டத்தில் தங்கள் அன்றாட நிகழ்வுகளை, சடங்குகளை அறிவிக்கும் வகையில் வரையப்பட்ட ஓவியங்களே வார்லி ஓவியங்கள். இந்த ஓவியக் கலைக்கும் மத்தியப் பிரதேசத்தின் பீம்பெத்கா பகுதியில் கி.மு.500 அல்லது 3000 ஆண்டுகளைச் சேர்ந்ததாகக் கருதப்படும் குகை ஓவியங்களுக்கும் தொடர்பு உள்ளது. இந்த இரு பகுதிகளின் ஓவியக் கலையும் ஒரே காலகட்டத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது. இந்த வார்லி ஓவியங்கள் எளிய அடிப்படை வடிவங்களைக் கொண்டே வரையப்படுகின்றன. வார்லி பழங்குடியினர் தங்கள் வீட்டுச் சுவர் கட்டுமானத்துக்கு மண்ணைக் குழைத்துப் பயன்படுத்துகிறார்கள். இவர்களின் வீட்டின் உட்சுவர்களில் காவி வண்ணம் பூசுகிறார்கள். இந்தக் காவி பின்புலத்தில்தான் ஓவியங்கள் வரையப்படுகின்றன. காவிப் பின்புலத்தில் தெளிவாகத் தெரிவதற்காக வெள்ளை நிறத்தைப்

பயன்படுத்துகிறார்கள். வெள்ளை நிறத்துக்கு அரிசி மாவைத் தண்ணீரில் குழைத்துப் பயன்படுத்துகிறார்கள். ஓவியங்களை வரைய மூங்கில் குச்சிகளின் முனையை நசுக்கித் தூரிகைபோல பயன்படுத்துகின்றனர். இந்த ஓவியங்களைப் பெரும்பாலும் திருமணம், அறுவடைவிழா போன்றவற்றிற்காக வீட்டை அலங்கரிக்கும் விதமாக வரைகின்றனர். இவற்றை வரைந்து 1970வரை பாதுகாத்தவர்கள் பெண்களே என்பது குறிப்பிடத்தக்கது.





## பொதுவான மனநிலை

போனமாதம் வில்ஸ்மித்தின் வெல்கம் டு எர்த் தொடர் நெட்ஃப்ளிக்ஸ்-இல் இருக்கிறது எனத் தவறாகச் சொல்லிவிட்டேன். முதல் சீசனில் ஆறு பாகங்களாக டிஸ்னி ஹாட்ஸ்டாரில் வெளியிட்டிருக்கிறார்கள்.

பூமி என்ற எவ்வளவு பெரிய அதிசயத்திற்குள் இருக்கிறோம் நாம் என்று நிரூபணம் செய்திருக்கிறார்கள். ஒரு முழு நிலவு நாளின் நள்ளிரவில் தெளிந்த வானத்தில், ஒரு பெரிய அருவியில் நிலவொளியால் உருவாக்கப்பட்ட ஒரு வானவில்லைப் படம்பிடித்திருக்கிறார்கள். கண்ணீர் மிதக்க மிதக்க பார்த்துக்கொண்டிருந்தேன்.

பூமி என்பது ஒரு ஒற்றை உயிரி. எல்லாம் எல்லாவற்றுடன் சார்ந்து இருக்கிறது. இருளின் மத்தியில் இந்த நிலம் தன்னை எப்படி வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதைக் காணக்காண மனிதனின் அற்பத்தனத்தை எண்ணி விம்முவது தவிர வேறு வழியே இல்லை என்றாகிவிட்டது எனக்கு.

இந்தத் தொடர் முழுவதும் ஸ்மித்துடன் பயணம் செய்யும் சாகசக்காரர்கள் அனைவரும் மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்கள். ஒரு பெண் ஸ்மித்தைக் கடலுக்குள் ஒரு கிலோ மீட்டர் ஆழத்திற்கு அழைத்துச் செல்கிறார். மற்றொரு காலிழந்த மனிதன் காட்டாறு ஒன்றில் அவரைப் படகில் அழைத்துச் செல்கிறார். பார்வை இழந்த ஒரு நபர் அவருடன் உலகின் பெரிய எரிமலைக்குள் இறங்குகிறார். எல்லாவகையான இயற்கைவளமும் இருக்கும் இந்தியத் துணைக்கண்டத்தில் மனிதர்கள் வெற்று நுகர்வோர்களாகச் சிறுத்துப்போய் நிற்கிறோம்.

வைல்ட்பீஸ்ட் விலங்குகளின் உணவுக்கான வருடாந்திர நகர்வு. பூமியில் நிகழும் அதிசயங்களுள் ஒன்று. அதன் பெரும் எண்ணிக்கையிலான ஒரு திரள் மொத்தமாக ஒரு கணத்தில் ஒற்றை உயிரியாய் மாறி எப்படி தன்னைத் தகவமைத்துக்கொண்டிருக்கிறது

என்பதை நீங்கள் இந்தத் தொடரில் நிதானமாக ரசிக்கலாம். மனிதக் கும்பலின் போதாமையை எளிதில் விளக்கும் விலங்குகளின் செயல்பாடுகள் பிரமிக்கவைக்கின்றன. தன்னைத்தானே சீரழித்துக்கொண்டதால் இப்பிரபஞ்சத்தின் பேரதிசயங்களில் ஒன்றான மனிதகுலம் அருவருப்பாகிப்போனது என்பதுதான் எதிர்கால வரலாறு.







## பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள்

● ஜின்னா அஸ்மி

ஏன் நடுங்குகிறாய்
எனக் கேட்டபடியே
வந்தான் அவன்...

இருளென்றால்
கொஞ்சம் பயம் என்றேன்

பகலென்றால் பயமில்லையா?
விழிகளை மூடிக்கொண்டால்
வெளிச்சம் வெளியேறிவிடுமே
என்ன செய்வாய் என்றான்

இருள் என்பது
கருப்பு என்றும்
வெளிச்சம் என்பது
வெள்ளை என்றும்
இயற்கையை நிறமென
நினைத்துக்கொள்
பயமிருக்காது என்றான்.

நிறமாறும் ஓணான்களைப் போல
இயற்கையும் ஒரு பச்சோந்தி
என்றேன்.

நிறமாறுவது பச்சோந்தி அல்ல...
குங்குமப்பூ சாப்பிட்டால்
குழந்தை சிவப்பாகப் பிறக்கும் என
நிறம் மாற்றத் துடிக்கும் நீங்களே
பச்சோந்தி என்றான்.

இருள் தரும் இரவு எதற்கு?
பகல் மட்டும் போதாதா
என்றேன்.

கருப்பு எதற்கு என்று
கருவிழியை எடுத்துவிட்டால்
கண்கள் எதற்கு?
வெள்ளை மட்டும் வைத்துக்கொண்டு
வேடிக்கைப் பார்க்க முடியாது.
விழி வெள்ளையாகிவிடும்
பார்வை இருளாகிவிடும்
என்றான்.

இப்போது
உன் பேச்சு பயமாகிவிட்டது
நீ போய்விடு
நான் உறங்கச் செல்கிறேன்
என்றேன்

இருள் என்பது
உன் உறக்கத்தைப் போல
இயற்கைக்கான ஓய்வும்
இயற்கை எய்தியவர்களுக்கான
ஓய்வும் என்றான்.
அவன் மேலும் சொன்னான்...
இனி இருளைப் பார்த்துப்
பயம் கொள்ளாதே...
கருவறையில் தொடங்கி
கல்லறையில் முடிவதைப் போல
இருளிலிருந்து தொடங்கி
இருளுக்குள் முடிவதே வாழ்வு
என்றான்...

– அவன் இன்னும் சொல்வான்.

● மெய்யன் நடராஜ்
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்



# விடியல்

படுக்கையில் கிடந்த குப்புசாமிக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. புரண்டு புரண்டு படுத்தவருடைய சிந்தனை எல்லாம், நாளை கிழங்கு வாங்குவதற்காக வண்டியுடன் வரவிருக்கும் முதலாளியைப் பற்றியதாகவே இருந்தது. ஏழு மணிக்கெல்லாம் வண்டி வந்துவிடும். இன்னும் காணியில் கிழங்கு தோண்டவில்லை. ஊருக்குள் ஒரு நாலைந்து பேரை அழைத்திருந்தார். 'வருகிறேன்' என்று கூறிப்போனவர்கள் ஒருவரும் வரவில்லை. அன்று மதியம்வரை பார்த்துக்கொண்டிருந்தவர், இனி வரமாட்டார்கள் என்பது உறுதியானபோது கிழங்குக் கடை முதலாளியிடம் தொலைபேசியில் விசயத்தைக் கூறினார்.

'எனக்கு அதெல்லாம் தெரியாது, நாளைக்கு நான் கொழும்புக்குக் கிழங்கு அனுப்புறதா சொல்லிட்டேன். கட்டாயம் அனுப்பித்தான் ஆகணும். நீ என்ன செய்வாயோ தெரியாது, வண்டி அனுப்புவேன். எனக்கு நாளைக்குக் கிழங்கு வேணும்,' பதிலுக்குக் காத்திராமல் அழைப்பைத் துண்டித்துக்கொண்டார்.

ஊரில் மேலும் பலரைக் கேட்டுப் பார்த்தார். 'அரசாங்கமே ஒரு வாரம் விடுமுறை கொடுத்திருக்கு. நீ கொடுக்கிற எழுநூற்றி ஐம்பது ரூபாய்க்காக நாங்க நோய் வந்து சாகணுமா,' முகத்தில் அடித்தாற்போல் இருந்தது பலரது பதில்கள். அடுத்த ஊருக்குப் போய் ஒரு பத்துப்பேரை கூட்டிவரலாம் என்றாலும் பாழாய்ப்போன இந்த வைரஸ் நோய் பயத்தால் யாரும் வருவார்களோ என்ற சந்தேகம். இறுதியில், எதுவும் முடியாமல் வெறுமனே கழிந்தது ஒருநாள்.

ஊர் விவசாயிகள் எல்லாம் வெவ்வேறுவகை தானியங்களையும் மரக்கறி வகைகளையும் பயிரிட்டுக் கொண்டிருக்கையில், குப்புசாமி மட்டும் இந்தப் பருவக் காலத்தில் உருளைக்கிழங்கு பயிரிட்டார். எல்லோரும் ஒரே வகையான பயிர் செய்தால் அறுவடை நேரத்தில் சந்தையில் நல்ல விலை கிடைக்காது என்பதாலும், சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில் உருளைக்கிழங்கிற்கு அதிக கிராக்கி இருக்கும் என்பதாலும் கிழங்கு பயிரிட்டார். தன்னுடைய கால் ஏக்கர் காணியில் இம்முறை அதிக விளைச்சலைக் கொடுத்திருக்கும் கிழங்கை விற்று, இருக்கின்ற கடனையெல்லாம் அடைத்தது போக வைகாசியில் மகளின் கல்யாணத்தையும் முடித்துவிடலாம் என்ற பெருங்கனவில் இருந்தார்.

அவரின் கனவு பொய்க்கவில்லை. எதிர்பார்த்ததுபோலவே எல்லாம் கைகூடி வந்தது. இறுதியில், 'நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும்' என்பதுபோல, இப்படியொரு சூழ்நிலை வந்து அவரைச் சிக்கலில் மாட்டிவிட்டது. கொரோனா வைரசை விடவும் வேகமாகத் துரதிர்ஷ்டம் துரத்திக்கொண்டு வரும் ஒரு மனிதனின் வாழ்க்கையில் உழைப்பு, முயற்சி என்பதெல்லாம் ஒரு சாதாரண செயல். வெற்றி என்பதைப் படைத்தவன் மட்டுமே தீர்மானிக்கிறான். நல்லதோ, கெட்டதோ எல்லாம் நாளை அவன்விட்ட வழி என்றவாறு உறங்கியும் போனார்.

பின்னிரவு ஒரு இரண்டு இரண்டரை மணியிருக்கும். ஒரு பயங்கரக் கனவு கண்டு வாய் புலம்பினார், குப்புசாமி. குப்புசாமியின்

புலம்பல் கேட்டு விழித்துக்கொண்ட அவரின் மனைவி, "என்னங்க... என்னங்க... என்னாச்சு" என்றவாறு தட்டி எழுப்பி, சொம்பில் வைத்திருந்த தண்ணீரைப் பருகக் கொடுத்தார். தண்ணீரைக் குடித்துவிட்டு மறுபடியும் தலைசாய்க்க முற்படுகையில் உறங்கிக்கொண்டிருந்த அவருடைய பத்துவயது மகன் எழுந்து, "அப்பா ஒன்னுக்குப் போகணும், கொஞ்சம் வெளியே வாரியா" என்றதும், வீட்டிற்குப் பின்புறம் கூட்டிச் சென்றார்.

ஏனோ தெரியவில்லை... ஒருநாளும் இல்லாதவாறு அவ்வேளையில் ஊருக்குள் நாய்கள் குரைக்கத் தொடங்கியிருந்தன. எதற்காக இப்படிக் குரைக்கின்றன என்று மனசுக்குள் நினைத்துக்கொண்டிருக்கையில் சிறுநீர் கழித்துவிட்டு வந்த மகன், "அப்பா... போன மாசம் நம்ம ராமசாமி மாமா காணியிலே மரக்கறி களவுபோனபோது குரைத்த மாதிரியே இன்றைக்கும் இந்த நாயெல்லாம் குரைக்குது. இன்னைக்கு யாருடைய காணியிலே களவு போகப்போகுதோ தெரியல" என்று கூறிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தான்.

மகன் இப்படிச் சொன்னதும் குப்புசாமியின் மூளையில் சட்டென்று ஒரு மின்னல் மின்னியது. 'ஒருவேளை, நம்ம காணியில் யாராவது...' என்று நினைத்தவர், எதற்கும் ஒரு எட்டு போய்ப் பார்த்துவிட்டு வருவது நல்லது என்ற முடிவோடு, மின்பந்தத்தைக் கையில் எடுத்துக்கொண்டு மகனையும் கூட்டிக்கொண்டு, ஊருக்கு அப்பால் மூன்று கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் காணியை நோக்கி விரைந்தார்.

பௌர்ணமிக்கு இன்னும் ஒருசில தினங்களே இருக்க, வளர்பிறை நிலவு முகில்களற்ற வானத்திலிருந்து பால் போன்ற ஒளியைப் பாய்ச்சிக்கொண்டிருந்தது. வழியின் இருமருங்கிலும் இருந்த விளைநிலங்களில் விதவிதமான பூச்சிகள் சத்தம், இயற்கை இன்னிசைக் கச்சேரி நடத்துவது போலிருந்தது. குன்றும் குழியுமாகக் கிடந்த தாரிடப்படாத கிராமத்தின் மண்வீதியில், துவிச்சக்கர வண்டியைச் செலுத்துவது மிகவும் கடினமாக இருந்தது. இன்னும் சொற்பதூரம் பயணித்தால், தார்ச்சாலையை அண்மித்த அவரது காணி வந்துவிடும். இதோ அதோ என்றிருந்த வேளை, பின்னாலிருந்த மகன், "அப்பா... அங்க பாருங்க" என்றபோதே, அந்தக் காட்சி அவர் கண்ணிலும் பட்டுவிட்டது.

"அடப்பாவிகளா... இதுக்குத்தான் நீங்க எல்லோரும் கிழங்கு தோண்ட வராமல் விட்டீர்களா!" ஆச்சரியம் மேலிட அதிர்ந்து, வண்டியை நிறுத்தினார். மின்பந்தத்தை அணைத்தபடி மகனிடம், சத்தம் போடக்கூடாதென ரகசியமாய்க் காதில் கூறிவிட்டு, இருவரும் அங்கிருந்தவாறே நடப்பதை அவதானிக்கத் தொடங்கினர்.

தார்ச்சாலை வழிநெடுகிலும் வீதி விளக்குகளுக்காக இணைக்கப்பட்டிருக்கும் மின் கம்பிகளிலிருந்து திருட்டுத்தனமாக மின்சாரத்தைக் காணி முழுவதற்கும் எடுத்துக்கொண்டு ஒரு கூட்டமே இரவோடிரவாகக் கிழங்கு தோண்டி, மூடை மூடையாக அடுக்கிவைத்துக்கொண்டிருந்தனர். அந்தக் கூட்டத்திற்குத் தலைவனாக நின்று செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஒருவனை உற்றுப் பார்த்தார். மின்விளக்கின் ஒளியில் மிகத் தெளிவாகத் தெரிந்தது அவனுடைய முகம். ஒரு வாரத்திற்கு முன்பு குப்புசாமியிடம் கிழங்கு கேட்டு வந்தவன். அவன் கேட்ட விலைக்கு ஒத்துவராது என்று முடிவாகக் கூற திரும்பிப் போனவன். நேர்வழியில் அடையமுடியாததைக் குறுக்குவழியில் அடையத் துணிந்திருக்கிறான். அவனுக்கு ஒத்துழைக்க ஊருக்குள் அண்ணன், தம்பிபோல் ஒன்னுக்கொன்னா பழகியவர்கள். என்ன மனிதர்கள்!

ஒரு நாலு ரூபா கூடுதலாகக் கிடைக்கும் என்பதற்காகக் களவு செய்வதற்கும் துணிந்துவிடுகிறார்களே. இந்த உலகம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது. போகப்போக நன்றி, விசுவாசம், நம்பிக்கை என்பதெல்லாம் வெறும் ஏட்டளவில் மாத்திரமே இருந்துவிடும் போலிருக்கிறது. இனி, இந்தச் சமுதாயத்தைத் திருத்த அந்தக் கடவுளாலும் முடியாது. உலகம் அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. இப்படியான துரோகிகள் வாழ்வதால்தானோ என்னவோ, இப்படி மருந்து கண்டுபிடிக்கமுடியாத நோய்களெல்லாம் வந்து மனிதனை வாட்டி வதைக்குதோ என்று எண்ணிக்கொண்டே காணியை முழுவதுமாக நோட்டமிட்டார்.

ஒரு மணி நேரத்திற்குள் கிழங்கு முழுவதும் தோண்டி எடுக்கப்பட்டுவிடும் நிலையில் இருந்தது. அருகில் செல்வது ஆபத்து. இம்மாதிரி திருட்டுத்தனமாக இரவில் வேலை செய்பவர்கள் மது, போதைப்பொருள் பாவனை இல்லாமல் இந்த வேலையைச் செய்யமாட்டார்கள். பணம் ஒன்றே குறிக்கோளாக இருக்கும் அவர்கள் அருகில் சென்றால், கொலை செய்யவும் தயங்கமாட்டார்கள். காலம், தரம்தாழ்ந்து கிடக்கும் காலம். இங்கே தவறுகள் நியாயமாகவும், நியாயம் தவறாகவும் இடம்மாறிப் போகும். பணத்தால் எல்லாம் நடக்கும். சரி, போனால் போகட்டும். பணத்தை எப்போது வேண்டுமானாலும் சம்பாதித்துக்கொள்ளலாம். உயிர்போனால் முடியுமா? உடலில் வலுவிருக்கு. கையுயர மகன் இருக்கிறான். இப்போதைக்கு களவைப் பிடிப்பதைவிட உயிரைக் காத்துக்கொள்ளுதல் முக்கியம் என்றவாறு திரும்பிப் போக முடிவெடுத்தார்.

மூன்று மாத உழைப்பு. காடாய்க் கிடந்த நிலத்தைக் கொத்திப் பதமாக்கி, கடனுக்கு விதைக்கிழங்கு வாங்கிப் பயிரிட்டு, நீர்பாய்ச்சி, உரமிட்டு, கிருமிநாசினி தெளித்து, அல்லும் பகலுமாய்க் காவல்காத்து, பிள்ளைபோல வளர்த்த பயிர், கண்முன்னே களவுபோவதைப் பார்த்து, 'இறைவா! இது உனக்கே அடுக்குமா? அல்லும்பகலும் உன்னையே நம்பியிருந்த உன் பக்தனுக்கு நீ செய்யும் கைமாறு இதுதானா?' மனம்நொந்து சத்தம்போடக்கூட முடியாமல் மனதுக்குள் கதறினார். ஊருக்குள் சென்று ஊராரைக் கூட்டிவருவதற்குள் கிழங்கெல்லாம் ஊரைவிட்டே போய்விடும். இந்நேரத்தில் நடப்பதையெல்லாம் வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறென்ன செய்யமுடியும். இப்போது காணி முழுவதிலும் உள்ள கிழங்கு தோண்டப்பட்டு மூடை மூடையாகத் தார்ச்சாலை ஓரத்தில் அடுக்கப்பட்டும்விட்டது.

கூட்டத் தலைவன், வண்டிக்காரனுக்குக் கைப்பேசியில் பேசினான். "இன்னும் கொஞ்சநேரத்திற்குள் விடிந்துவிடும், சீக்கிரம் வா. இங்கே எல்லாம் தயார்". கட்டளையிட்டவன் கிழங்கு தோண்டியவர்களுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்துவிட்டுக் காத்திருந்தான்.

அதற்குள் தூரத்தில் வண்டி வரும் ஓசை கேட்டது. எல்லோரும் தயார்நிலையில் நின்றிருக்க, கூட்டத்தில் தூரத்தே வரும் வண்டியைக் கண்ணுற்ற ஒருவன் கூறினான்:

"மச்சான், அது போலீஸ் வண்டிமாதிரி இருக்குடா".

"போலீஸ் வண்டியா!"

உற்றுப்பார்த்த அனைவரும், "ஆமாம், போலீஸ் வண்டிதான். யாரும் நிற்காதீங்க. எல்லோரும் ஓடிப்போங்க..."

யாரோ சத்தம்போட, மறுகணம் எல்லோரும் எப்படி ஓடி மறைந்தார்களோ தெரியவில்லை. அடுத்த நொடி, குப்புசாமியும் மகனும் ஓடிச்சென்று கிழங்கு குவித்திருக்கும் இடத்தை அடையவும் போலீஸ் வண்டி அங்கு வரவும் நேரம் சரியாக இருந்தது. குப்புசாமிக்குத் தன் கண்களை நம்பமுடியவில்லை. தான் காண்பது கனவா, இல்லை நனவா. ஆச்சரியம்மேலிட நின்றிருக்க வண்டியிலிருந்த போலீஸ்காரர், "இன்னும் கொஞ்சநேரத்திலே ஊருக்குள்ளே கொரோனா நோய் யாருக்கும் இருக்குதான்னு பார்க்க மருத்துவர்கள் வர இருக்கிறார்கள். சீக்கிரம் ஊருக்குள் போய்விடுங்கள். நாங்க பரிசோதனை முடியாமல் எவரையும் வெளியே விடமாட்டோம்."

"ஐயா. இப்போ கிழங்கு கொண்டுபோக வண்டி வந்துவிடும். ஏற்றிவிட்டு வந்திடுறேனுங்க."

"சரி சரி, சீக்கிரம் வரப் பாருங்க..." என்று அவர் கூறிக்கொண்டிருக்க, போலீஸ் வண்டிக்குப் பின்னாலேயே வந்து நின்றிருந்த ஆம்புலன்ஸ் வண்டியிலிருந்த பரிசோதகர்கள் இறங்கி வந்து அவ்விடத்திலே குப்புசாமியையும் மகனையும் பரிசோதித்துவிட்டு, காய்ச்சல் அறிகுறி எதுவுமில்லாதிருக்க ஊருக்குள் செல்லத் தொடங்கினார்கள்.

அப்படியானால், நான் வணங்கிய கடவுள் என்னைக் கைவிடவில்லை. என் வியர்வையை எனக்கே வெற்றியாக்கிவிட்டான். சந்தோசத்தில் மகனை அணைத்துக்கொண்டு இறைவனுக்கு நன்றி சொல்ல, அங்கே அப்போது பொழுதும் விடியத் தொடங்கியது. ■

படைப்பு
சமூகத்தின் இணைப்பு



# சுதந்திரக் கூத்து

புது சரித்திரம்

விரைவில்..